
Registered as a News Paper
பக்கம் - 24
www.eezhanatham.com

# ஈழநாதம்


விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 16 | வெள்ளி - 24 | 05 - 11 - ஓகஸ்ட் - 2005


## தேர்தல் அரசியலும் மக்களின் அவலமும்




## தொடரும் எழுச்சி...


## தென்சூடானிய மக்களின் துயரம்...

# நெடுங்கேணி மக்களின் மருத்துவ நெருக்கடி..?



வவுனியா நகரில் இருந்து வடக்கே 43 கிலோ மீற்றர் தொலைவில் நெடுங்கேணி நகரம் அமைந்துள்ளது.அங்கு வவுனியா வடக்குப் பிரதேச செயலகம், பிரதேச சுற்றயல் கூறு வைத்தியசாலை, நெடுங்கேணி மகாவித்தியாலயம், வவுனியா வடக்குப் பிரதேச சபை அலுவலகம், வவுனியா வடக்கு ப.நோ.கூ சங்கம், அஞ்சல் அலுவலகம் என்பன நகரின் மத்தியில் அமைந்துள்ளன.

நெடுங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் நெடுங்கேணி வடக்கு, நெடுங்கேணி தெற்கு மாறாவிலுப்பை, குளவிசுட்டான் வேலங்குளம், பரசங்குளம், பனைநின்றான் மாமடு, சேனைப்புலவு, ஒலுமடு, பட்டிக்குடியிருப்பு, பட்டடைபிரிந்தகுளம், கற்குளம், நொச்சிக்குளம், மருதோடை, ஊஞ்சால்கட்டி, வெடிவைத்தகல், கோவில் புளியங்குளம், கோரமோட்டை, நாவலர்பண்ணை, நயினாமடு, மதியாமடு, ஆயிலடி சின்னடம்பன், பெரியமடு, சின்னப்பூவரசங்குளம், அனந்தர் புளியங்குளம், சன்னாசிபரந்தன், கரப்புக்குத்தி விஞ்ஞானகுளம், புளியங்குளம் வடக்கு, புளியங்குளம் தெற்கு, கனகராயன்குளம் வடக்கு, கனகராயன் குளம் தெற்கு, புதூர், மன்னகுளம், புதுவிளாங்குளம், பழையவாடி, போன்ற முப்பத்தைந்திற்கும் மேற்பட்ட கிராமங்களைக் கொண்டிருப்பது நெடுங்கேணிப் பிரதேசமாகும்.

இந்தப் பிரதேசம் குளங்களும், ஆறுகளும், வயல்களும், தோட்டங்களும் நிறைந்த செழிப்பான விவசாயப் பிரதேசமாக விளங்கியது. 1997ஆம் ஆண்டு வைகாசி மாதம் மேற்கொள்ளப்பட்ட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது வடக்கு கிழக்கில் எங்குமில்லாதவாறு முற்றாக அழிக்கப்பட்டு மக்கள் சொத்துக்கள், உடைமைகள் உறவுகளையும் இழந்து அகதிகளாக்கப்பட்டனர்.


அன்று தொட்டு 2000 ஆம் ஆண்டு நடுப்பகுதி வரை யுத்தக் களமாக இப்பிரதேசம் விளங்கியது. 2000 ஆம் ஆண்டு ஓயாத அலை-3 நடவடிக்கையால் முற்றாக இப் பிரதேசம் மீட்கப்பட்டு அன்று தொட்டு இன்று வரை மக்கள் மீளக்குடியமர்ந்துகொண்டிருக்கின்றனர்.

இற்றைவரை இப்பிரதேசத்தில் 3965 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர். இந்த நிலையில் மக்களுக்கு உதவியாக தமிழீழ விடுதலைப்புலிகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் (T.R.O) அரச செயலகம் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் குறிப்பிடப்படும் படியாக உதவிவருகின்றன.

ஆனால் ஒரு பிரதேசம் வளர்வதில் மக்கள் மீளக்குடியமர்ந்து வரும் நிலையில் பாடசாலை, வைத்தியசாலை என்பன மிகவும் அவசியமானதாகும். ஆனால் மிகமிக அவசியமானது வைத்தியசாலை என்பதை யாரும் மறந்துவிடமுடியாது. மீள் குடியமர்வின் தொடக்க காலத்தில் துன்பப்பட்டவர்களுக்கு மருத்துவத் தேவைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினர் கைகொடுத்து உதவினார்கள்.

தொடர்ந்து பல கட்டுமானப் பணிகளை நிக்கொட் (NECCORD), நியாப்(NEIAB) போன்ற அமைப்புக்கள் மேற்கொள்ளத் தொடங்கின. அதன் ஒரு அங்கமாகவே நிக்கொட் திட்டத்தில் நெடுங்கேணி சுற்றயல் கூறு வைத்தியசாலை ஓரளவு முழுமையாகப் புனரமைக்கப்பட்டது. மின்பிறப்பாக்கி, சூரிய மின்கலம், தண்ணீர் வசதி என்பவற்றுடன் வைத்திய அதிகாரி விடுதி என்பனவும் அம்புலன்ஸ் வண்டி (நோயாளர் காவு வண்டி) என்பவற்றுடனான வசதிகள் செய்யப்பட்டு 2004 ஆம் ஆண்டு தை மாதம் 12 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

ஆனால் அன்றிலிருந்து இன்று வரை ஒரு நிரந்தர வைத்திய அதிகாரி




நியமிக்கப்படவில்லை. கிழமைக்கு ஒருவர் வந்து செல்கின்றனர். இந்த வைத்தியசாலையில் வெளிநோயாளர்பிரிவு, நோயாளர் தங்கும் விடுதி, மகப்பேற்று விடுதி என்பன உண்டு. பகல் கடமைக்கும், இரவுக் கடமைக்கும் என இரண்டு வைத்திய அதிகாரிகள் தேவை. நாள் ஒன்றுக்கு சராசரியாக 125 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுகின்றனர். இந்த ஆண்டு தை முதலாம் திகதி தொடக்கம் (01.01.2005 ஆம் - 15.04.2005 வரை சித்திரை 15 ஆம் திகதி வரை 295 நோயாளர்கள், நோயாளர் தங்கும் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

2004.01.12ஆம் திகதி வைத்தியசாலை திறக்கப்பட்ட நாள் தொடக்கம் இன்று வரை மகப்பேற்று விடுதியில் தங்கி 61 தாய்மார்கள் குழந்தை பெற்றுள்ளனர். இந்த மகப்பேற்றுத் தொகை நிரந்தர வைத்திய அதிகாரியும் மகப்பேற்றுத் தாதியும் இருந்திருந்தால் மூன்று மடங்காக அதிகரித்திருக்கும். இவை இல்லாத தால் இருக்கின்ற வைத்தியர் அம்புலன்ஸ் வண்டியில் வவுனியாவிற்கு அனுப்பிவிடுவார். அவர் தான் என்ன செய்ய முடியும்.

வைத்தியசாலைக்கு 06 பெண் பரிசாரகர்கள் தேவையுள்ளபோது இருவர் மட்டுமேயுள்ளனர். நிரந்தர மகப்பேற்று தாதி இல்லை, சுத்திகரிப்புத் தொழிலாளி ஒருவர்கூட இல்லை. இந்த நிலையில் தற்பொழுது உள்ள வைத்திய அதிகாரியே புளியங்குளம் பிரதேச வைத்தியசாலைக்கும் சென்றுவருகின்றார்.

காலையிலிருந்து நண்பகல் வரை நெடுங்கேணி வைத்தியசாலையிலும் பிற்பகல் புளியங்குளம் வைத்தியசாலைக்கும் செல்வதால் புகைப்படத்தில் காட்டியது போல குறிப்பிட்ட காலம் வரை நண்பகல் 12 மணிவரையே நோயாளர்கள் பார்வையிடப்படுவார்கள் என அறிவித்தலும் மருத்துவமாது இல்லாததால் கர்ப்பிணித் தாய்மார்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அறிவித்தல் விடப்பட்டுள்ளது. இவ்வறித்தல்கள் வேதனையை ஏற்படுத்துவதாகவே மக்கள் கருதுகின்றனர்.




இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வைத்தியசாலைக்கு வசதிகளை வளங்கக் கூடிய வடகிழக்கு மாகாண சுகாதார சேவைப் பிரிவினரால் முடியவில்லையா? அல்லது பாராமுகமாகவுள்ளனரா? என்று மக்கள் சந்தேகம் கொள்கின்றனர். இது தொடர்பாக பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், அரசாங்க அதிபர் ஆகியோருக்கு பல முறை எடுத்து கூறியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வடகிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் பொதுவாகவே அரச உத்தியோகத்தர்கள் பணியாற்ற முன்வருவதில்லை என்பது உண்மைதான். ஆனால் இன்று பாடசாலைகளில் புதிய ஆசிரியர்களை நியமிக்கின்ற போது வடகிழக்கில் கஷ்டப் பிரதேசங்களில் ஆகக் குறைந்தது ஐந்து வருடங்களாவது சேவையாற்றப் பணிக்கப்படுகின்றனர். அது போன்று புதிதாக நியமனம் பெறும் வைத்தியர்களை சேவை அடிப்படையிலாவது நியமித்தால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களும் பயனடைய வழி ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

வன்னிப்பிரதேசத்தில், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து வருடா வருடம் மருத்துவ பீடத்திற்கு தெரிவாகி மாணவர்கள் செல்வதும் படித்து முடித்து வைத்தியர்களாக பலர் வெளியேறுவதும் (குறைந்தது பதினைந்து பேராவது) நடைமுறையில் உள்ளது. இவர்களாவது சேவை நோக்குடன் இப்பிரதேசங்களில் கடமையாற்ற முன்வருவார்களா?

இது இவ்வாறு இருக்க நெடுங்கேணி வைத்தியசாலை வாட்டில் தங்கி நிற்கும் நோயாளர் ஒருவரிடம் கேட்ட போது நுளம்புக்குவலை தந்திருக்கின்றார்கள், வெளிச்சம், தண்ணீர் வசதிகளும் உண்டு ஆனால் கட்டிலில் படுக்க முடியாது கடிக்கின்றது. கட்டில் விரிப்பு சலவை செய்து நீண்ட நாள் சென்றதால் மணமும் வீசுகின்றது என்றார். இது பற்றி விசாரித்த போது நெடுங்கேணியிலுள்ள சலவைத் தொழிலாளர்கள் சலவை செய்ய முன்வருகின்றார்கள் இல்லை. வைத்தியசாலை திறந்தபின் இரண்டு தடவைகள் வவுனியாவில் சலவை செய்ததாகவும் நெடுங்கேணிச் சலவைத் தொழிலாளர் ஏன் முன்வரவில்லை என்றால் இடப்பெயர்வின் முன்சலவை செய்த கூலியே தரவில்லை என்றார்.

நிலைமை இவ்வாறு இருக்கின்றது. இது இவ்வாறு இருக்க நெடுங்கேணியில் நிக்கொட் திட்டத்தினால் ரூபா 15,325,785,97 செலவில் புதிய வைத்தியசாலைக் கட்டட வேலைகள் முடிவுறும் நிலையிலுள்ளது. இது எல்லா வசதிகளுடனும் கூடிய வைத்தியசாலை. ஆனால் வைத்திய அதிகாரி, ஊழியர்கள் போதியளவு நிரந்தரமாக இல்லாவிட்டால் என்ன பயன் தரப் போகின்றது. "எண்ணைச் செலவொளிய பிள்ளை வளர்த்தி இல்லை" என்பதாகவேமுடியும்.

நெடுங்கேணியூர் சிவலிங்கம்

அது மட்டுமா? நெடுங்கேணிப் பிரதேசத்தில் இட வசதியோடு கூடிய பொது விளையாட்டு மைதானம் ஒன்றே இருந்தது. அப்போது இருந்த பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரும் நிக்கொட் திட்டப் பணிப்பாளரும் பகீரதப் பிரயத்தனத்தின் மூலம் நெடுங்கேணி மக்களிடமிருந்து அந்த மைதானத்தைப் பெற்றே இந்த வைத்தியசாலை கட்டட வேலைகள் நடைபெறுகின்றன. மைதானமும் இல்லை. வைத்தியசாலையும் பயனற்றதாகவே உள்ளது என மக்கள் ஏங்கிய வண்ணமுள்ளனர்.

நெடுங்கேணியில் மட்டுமல்ல நெடுங்கேணிப் பிரதேசத்திலேயே ஒரு தனியார் மருந்தகமோ? வைத்தியசாலையோ இல்லை. நைனாமடுவிலும், புளியங்குளத்திலும் இயங்கும் திலீபன் மருத்துவ மனைகளே மக்களுக்கு கைகொடுக்கின்ற வைத்தியசாலைகளாகவுள்ளன என்பது மட்டும் வெளிப்படையானது.

இது தொடர்பாக மக்கள் நலனில் அக்கறையுடைய சம்பந்தப்பட்டவர்கள் இனியாவது வெகுவிரைவில் நடவடிக்கை எடுப்பார்களா? நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இப்பிரதேசமக்களின் அவாவாகும்.

தான்வாய்திறக்கப் போவதாக அறிவித்து விட்டார் சிறிலங்காவின் தேர்தல் ஆணையாளர். இந்த விடயத்திற்காக பல பக்கங்களிலிருந்தும் உரத்து எழுந்த கூச்சல் களுக்கெல்லாம் செவி கொடுத்தபடி, வாய் புதைத்திருந்த அவர், உறக்கம் கலைந்தெழுந்த துருவக்கரடியாக இப்போது காட்சியளிக்கிறார்.

இதனுடைய அர்த்தம் என்னவெனில் அவர் சிறிலங்காவின் உயர்நீதிமன்றின் முன் தோன்றுவதற்குத் தயாராகிவிட்டார் என்பதாகும்.

இதற்கு முன்பாகவே இது விடயமாகத் தேர்தல் ஆணையாளர் சிறிலங்காவின் பிரதம நீதியரசருடன் ஆலோசனை கலந்துவிட்டதாகவும் அவரது செயலகம் அறிவித்துள்ளது. எனவேதான் இம்மாதம் முதல் இருவாரங்களுக்குள் குறிப்பாகச் சொன்னால் ஒகஸ்ட் 8ஆம்திகதி சிறிலங்காவின் நான்காவது நிறைவேற்றதிகார சனாதிபதியைத் தெரிவு

யாகும் முன்னரேயே எப்போது தேர்தல் நடத்தப் படவேண்டும் என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாகிவிடக்கூடிய ஒரு சூழல் கொழும்பில் நிலவுகிறது.

ஆனால் தேர்தல் ஆணையாளர், தான் எப்போது தேர்தலை நடத்தப்போகிறார் என்பதை அறிவித்துவிடப்போவதாக தெரிவித்திருப்பதால் இந்த விடயத்தில் அடுத்தடுத்து ஒரு அறிவிப்பும், ஒரு தீர்ப்பும் வெளிவரப் போகின்றன.

எனவே தேர்தல் திகதி குறித்து கட்சிகள் உயர்நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய தேவை அநேகமாக எழமாட்டாது. அல்லது வேண்டியதில்லை எனக்கூறமுடியும் அரசியலமைப்பின் படி தேர்தல் விடயத்தில் தீர்மானம் எடுக்கக் கூடிய அதியுயர்சக்திகள் இரண்டினதும் தீர்மானங்கள் வெளியிடப்பட்டு விட்டால் அதை மேவிக்கதைப்பதற்கு

ஆகவே கொழும்பில் சனாதிபதி வேட்பாளர்கள் பற்றிய சர்ச்சை தீர்ந்து தேர்தல் திகதி பற்றிய சர்ச்சையையும் தீர்ந்துவிடும் நிலைக்கு வந்துள்ளது அரசியல் களம். இப்போது இரண்டு அணிகளுமே தேர்தல் பிரசாரத்தில் முன்னிறுத்தவேண்டிய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இலங்கைத் தீவையே குட்டிச்சுவராக்கிக் கொண்டிருக்கின்ற இனப்பிரப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி இரண்டு அணிகளுமே இதுவரை வெளிப்படையாக பேசவில்லை. அவை அதனை பெருமளவுக்கு விரும்பவும்மாட்டா என்பது தெளிவு.

இதனிடையே இரண்டு பிரதான

குற்றச்சாட்டுகளுக்காக அவர் கைதுசெய்யப் படலாமென சந்திரிகா அம்மையார் தரப்பிலிருந்து காட்டப்பட்ட சமிக்ஞைகளுக்காகத்தான் ஜே.வி.பி அடக்கி வாசிக்கிறது எனச் சொல்லப் பட்டாலும்; மகிந்தராஜபக்ஷவுக்கு தேர்தலில் ஆதரவு வழங்குவதன்மூலம் ஏதோ ஒரு வகையில் சந்திரிகா அம்மையாரை ஓரங்கட்டுவதற்கு ஜே.வி.பி விரும்புகிறது.

சுதந்திரக்கட்சியின் துடிப்பும் கவர்ச்சியும் மிக்க தலைவர்களான மகிந்த ராஜபக்ஷவையும் மங்களசமரவீரவையும் தம் பக்கம் இழுத்துவிட்டால் பாரம்பரியம் பேணமுனையும் பழைய தலைவர்களை ஒன்றுமில்லாமற் செய்துவிட முடியுமென அது







# தேர்தல் அரசியலும் மக்களின் அவலமும்

செய்வதற்கான தேர்தலைத்தான் எப்போது நடத்தப்போகிறார் என்பதைச் சிறிலங்காவின் தேர்தல் ஆணையாளர் அறிவிக்கவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் ஆணையாளரது இந்த அறிவிப்புக்கு முன்பாகவே தேர்தல் திகதி பற்றிய விவகாரத்தை குறைந்தது இருவராவது அவரையும்தாண்டி சிறிலங்காவின் உயர்நீதி மன்றின் கவனத்துக்கு அல்லது நியாயாதிக் கத்துக்குக் கொண்டு சென்றுவிட்டனர்."நாட்டின் பிரஜை என்ற ரீதியில் எப்போது சனாதிபதித் தேர்தல் நடைபெறுமென்பதை அறியும் தனது உரிமையினை நிலைநாட்டுமாறு" ஒரு வழக் கறிஞரும்; சிறிலங்கா அரசியலமைப்பின் 129(1) சரத்தின்படி தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை ஒன்றுக்கு அரசியலமைப்பின் ஏற்பாடு என்னவென்பதை உயர்நீதிமன்றத்திடம் கோரும் அதிகாரத்தின்படி சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா அம்மையாரும் சிறிலங்கா உயர்நீதிமன்றத்துக்கு சென்றுவிட்டார்கள்.

தேர்தல் ஆணை... இனியும் தாமதம் ஆகுமானால்,

எவருக்குமே வாய்ப்பிருக்கப்போவதில்லை.

எனவே இரண்டு பிரதான கட்சிகளுக்கும் அத்தோடு அரசியல் தன்னார்வ சக்திகளுக்கும் இதுவிடயத்தில் அதிகம் குதிப்பதற்கு இடமிருக்கப்போவதில்லை.

இதை முன்னுணர்ந்துதானோ என்னவோ செப்ரெம்பர் முதல் வாரத்திலே தன்னுடைய சனாதிபதித் தேர்தல் பிரசாரத்தினை ஆரம்பிக்கப்போவதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி அறிவித்துள்ளது. இந்த அறிவித்தல் சொல்லும் சேதி என்னவெனில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு தமக்கு பாதகமாக வரக்கூடும் என்று அக்கட்சி எதிர்பார்க்கின்றது என்பதே.

இதையொட்டியதாக இன்னுமொரு அறிவிப்பும் வெளிவந்துள்ளது. தேர்தல் திகதியை தேர்தல் ஆணையாளர் அறிவித்த பின்பு அது குறித்து அரசியல் கட்சிகள் உயர்நீதிமன்றை அணுகினால் நடவடிக்கை எடுப்பது பற்றி தேர்தல் ஆணையாளர் பிரதம நீதியரசருடன் நேரில் கலந்துரையாடியிருப்பதாக இந்த அறிவிப்புக்கூறுகிறது. இது ஒரு வகையில் அரசியல் கட்சிகளின் கொட்டத்தைத்தட்டிவைக்கும் நோக்கம் கொண்டதாகத் தெரிகிறது.

கட்சிகள் தவிர்ந்த ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் தேர்தலில் தமது நிலைப்பாடு பற்றி இன்னமும் முடிவெடுக்க முடியாத நிலையில் அல்லாடிக்கொண்டிருக் கின்றன.

ஜே.வி.பி யோ மகிந்தராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கும் போக்கில் நாட்டம் செலுத்தி வருகிறது. இவ்வாறு செய்தால் அதற்கு இரட்டிப்பு இலாபம். தான் இல்லாமல் சிறிலங்கா சுதந்திரக்கட்சியால் இயங்கமுடியாது, மக்களைச் சந்திக்கமுடியாது என்று காட்டமுடியுமென்பது முதலாவது, சுதந்திரக் கட்சியை இரண்டாகப் பிளக்க முடியுமென்பது இரண்டாவது. ஏனெனில் ஜே.வி.பியுடன் மீண்டும் கூட்டுவைத்துக் கொள்வதை சுதந்திரக்கட்சிப் பிரமுகர்கள் பலர் விரும்பவில்லை. இவர்கள் கட்சியைவிட்டு ஒதுங்க நேரிடும்.

அவ்வாறு இவர்கள் ஒதுங்கியும் சிலர் ஐ.தே.கட்சியில் சேர்ந்தும் சுதந்திரக்கட்சி பலவீனமடையும் போது சிறிலங்காவின் இரண்டாவது பெரியகட்சி என்ற ஸ்தானத்தை தான் எட்டிவிட முடியுமெனக் கணக்குப்போடுகிறது ஜே.வி.பி.

இதற்காகவே சனாதிபதி சந்திரிகாவுடன் முட்டுப்படக் கூடிய வகையில் மேடைகளிலே முழங்காமல் சற்று அடக்கியே வாசிக்க முனைகிறது ஜே.வி.பி. தமது தலைவர் சோமவன்ச அமரசிங்கவுக்கு இந்த விவகாரத்தில் கட்சியின் அதியுயர் பீடத்தால் ஆலோசனையும் வழங்கப்பட்டுள்ளது.

சோமவன்ச மீது ஏற்கனவே இருக்கும்


நம்புகிறது.

இதற்கப்பால் ஜாதிக ஹெல உறுமயவோ தான் கடந்த பொதுத்தேர்தலில் பெற்ற 06 இலட்சம் வாக்குகளை வைத்துக்கொண்டு கொஞ்சம் அரசியல் நடத்த முனைகிறது. தனது "பஞ்சதர்மக்" கொள்கையை ஏற்றுக்கொள்ளும் வேட்பாளருக்குத் தமது கட்சி ஆதரவளிக்குமென அதன் தேசிய அமைப்பாளர் சம்பிக் கரணவக்க அறிவித்துள்ளார்.

சிறிலாங்கா முஸ்லிம்காங்கிரஸ் தன்பங்குக்கு தாமே யார் சனாதிபதியாவது என்பதைத் தீர்மானிக்கும் சக்தி எனத் தம்பட்டமடித்துவருகிறது. ஏனைய முஸ்லிம் கட்சிகளும் "நாமுமுள்ளோம்" என்பதாக நெஞ்சு நிமிர்த்திக்கொண்டிருக்கின்றன.

ஆனால் நாட்டு மக்களோ தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவல்ல தலைவரைக் கண்டடைய முடியாது தவிக்கின்றனர். ஏனெனில் நாட்டின் பிரச்சினைகள் குறித்த தெளிவோ, புரிதலோ, அக்கறையோ, அவற்றைத் தீர்ப்பதற்கான அர்ப்பணிப்போ உடைய தலைவர்கள் எவருமே தேர்தலில் போட்டியிடுபவர்களில் இல்லாத அவலம் அவர்களுக்கு. ஏனெனில் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் தெரிவிக்கிறார் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதே தனது இலக்கு என மகிந்தராஜபக்ஷ இன்னும் இது பற்றி வாய்திறக்கவில்லை.

**பு.சத்தியமூர்த்தி**



# தென்சூடான் மக்களின் துயரம்..!

தென்சூடான் மக்களின் விடுதலைப் போராட்டம் அண்மையில் சூடானிய அரசோடு மேற் கொண்ட ஒப்பந்தத்தோடு, தென்சூடானிய மக்களின் அரசியல் பாதையில் முன்னோக்கி நகர ஆரம்பித்துள்ளதாக உலகம் எதிர்பார்த்திருந்த வேளை அவர்களுக்கு பேரிடியை ஏற்படுத்தும் நிகழ்வாக சூடானிய விடுதலை இராணுவத்தின் தலைவரும் சூடானின் உபசனாதிபதியுமான ஜோன்கராங் ஹெலிகொப்டர் விபத்தொன்றில் உயிரிழந்துள்ளார்.

தென்சூடான் மக்களின் விடுதலைப்போராட்டம் முன் மாதிரியான நகர்வுகளை அண்மைய வாரங்களில் ஆரம்பித்திருந்த சூழ்நிலையில் ஏற்பட்ட ஜோன்கராங்கின் மரணமானது தென்சூடான் மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பு என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஜோன்கராங்கின் மரணத்தையடுத்து ஆவே சமடைந்துள்ள தென்சூடானிய மக்கள் தமது எதிர்ப்பலைகளை அரசுக்கு எதிராக வெளிப்படுத்திவருகின்றனர்.

ஆனால் விடுதலைப் போராட்டங்களுக்கெல்லாம் உலகின் தற்போதைய புதிய பாணியிலான அணுகுமுறையினை வெளிப்படுத்திய தென்சூடானின் அரசியலில் ஜோன் கராங்கின் மரணமானது போராடும் எல்லா இன மக்களின் மனங்களிலும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

போராடும் இனங்களுக்கு இழப்புகள். துயரங்களை தருகின்ற போதிலும் அவர்களின் விடுதலை நோக்கிய பயணங்களை முறித்து விடுவதில்லை.

அந்தவகையில் தென்சூடானிய மக்களின் விடுதலைப் பயணம் அதன் இறுதி எல்லையை என்றோ ஒரு நாள் எட்டும் என நம்புவதோடு தற்போது சூடான் விடுதலை இராணுவத்தின் புதிய தலைவராக பொறுப்பேற்றுள்ள சல்வான்கிர் அந்த இலக்கை நோக்கி சூடானிய மக்களை வழி நடாத்துவார் என நம்பலாம்.

**வேழினி**

# தொடரும் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு...



## - இனியும் பொறுத்திருக்க முடியாது -

தமிழையும் தமிழினத்தையும் அழிக்கமுடியாது. அந்த நிலை நேருமானால் அங்கே எரிமலை வெடிக்கும் அது தவிர்க்கமுடியாதது எனக் கூறியபடிதமிழர் படை ஒன்று சேர்ந்து உறுதி எடுத்த நாள் தான் 27.07.2005 வவுனியா நகரமே களைக்கட்டிக்கிடந்தது. வாழ்வில் சரியான முடிவு எடுத்துள்ளவர்களே முன்னேறியிருக்கிறார்கள். சரித்திரத்தில் இடம்பெற்றிருக்கிறார்கள். தமிழர் தாயகத்தின் மூலை முடுக்குகளிலிருந்து மக்கள் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து எமது நிலத்தில் எமது பலத்தில் எமது தலைவிதியை நாமே நிர்ணயிப்போம் என உரத்துச்செய்தி சொன்னதும், தமிழர் எழுச்சிகொண்டதும் இங்கு நடைபெற்ற மாநாட்டில் தான். எனது நாடு , எமது நாடு,எமது தாய் நாடு, எமது தேசம், தாயகம் என்றவாறு தேசியத்துவம் உணரும் விதத்தில் அன்றைய மாநாடு விளங்கியது.

26.07.2005 இல் வவுனியா நகருக்குள் சிறுவர் பூங்கா மைதானத்தில் மறுநாள் நிகழ்வுக்காக ஆயத்தங்கள் செய்யப்பட்டுக்கொண்டிருந்த போது திடீரென போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஒருவருக்குமிடையில் பேச்சுக்கள் நடந்தன. மறுநாள் நிகழ்வின்போது புலிக்கொடி அதுவும் எமது தேசியக்கொடிஏற்ற முடியாது என அறிவித்திருந்தார்கள். தமிழ்த் தேசிய இனத்தின் சின்னமான தேசியக் கொடி ஏற்றாது இந்நிகழ்வு நடாத்தமுடியாது என உறுதியுரைத்த நாடாளுமன்றஉறுப்பினருக்கு மறுபதிலளிக்கமுடியாத போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தாமாகவே விலகிச் சென்றது. இப்படிப் பல அசம்பாவிதங்களையும் செய்யத் தூண்டிக்கொண்டிருந்த சிங்களப் பேரினவாதிகளுக்கும் அவர்களின் அடிவருடிகளுக்கும் பலத்த ஓர்இடியாகவே இம்மாநாடு விளங்கியது.

மாநாடு தொடங்கப்பட்ட நாள் தாயக நேரப்படி காலை 10.00 மணிக்கு எமது தேசியக் கொடியேற்றலுடன் விழா மிகமிக எழுச்சியாக ஆரம்பமாகியது. தாயகத்திலிருந்து மக்கள் பிரதிநிதிகளாக 2500 இற்கும் மேற்பட்டோர் தமிழ் பண்பாட்டோடு மைதானத்தை அலக்கரித்துக் கொண்டிருந்தனர். "ஒரு கருத்தை எடுத்துக் கொள்,அந்த ஒரு கருத்தையே உனது வாழ்க்கைமயமாக்கு. அதையே கனவு காண், அந்தக் கருத்தை ஒட்டியே வாழ்ந்துவா, மூளை,தசைநார்கள், நரம்புகள் உன் உடலின் ஒவ்வொருபாகத்திலும் அந்த ஒரு கருத்தே நிறைந்திருக்கட்டும் அந்த நிலையில் மற்ற எல்லாக்கருத்துக்களையும் தவிர்த்துவிடு. வெற்றிக்கு இதுதான் வழி" என்ற விவேகானந்தரின் அறிவுரை போல் எங்கள் நிலம் எமக்கு வேண்டும் என்ற கருத்தையே மூளை, தசைகள், நரம்புகளில் பாய்ச்சிய படி மக்கள் கூட்டம் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தது.

தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. மாநாட்டில் மதத்தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்,போராளிகள், தமிழ் பேசும் மக்கள் என பலர் கூடியிருந்தது. வரலாற்றுச் சிறப்பு மிக்க மாநாடு என்பதை உணர்த்தியது. சிங்கள இனவாதிகளின் ஆக்கிரமிப்பால், கடற்கோள் அனர்த்தத்தினால் தமிழின் தமிழினத்தின் அழிவு நெருங்கி விட்டதாக மனம் மகிழ்ந்த இனவாதிகளுக்கு இடியாக இம்மாநாடு உருப்பெற்றிருந்தது.

சமாதான ஒப்பந்தத்திற்குப் பின்னரும் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திட்டபோதும் பல பிரச்சினைகள் எம் மேல் ஏவிவிடப்பட்டன. இதைப் பார்த்த தமிழினம் உருக்கொண்டெழுந்து " தொண்டு செய்வாய் தமிழுக்கு துறை தோறும் துறைதோறும் துடித்தெழுதே" என்ற பாவாணரின் உணர்வுபோல தமிழினம் துடித்தெழுந்ததன் அடையாளமே இம்மாநாடு.

இம்மாநாட்டில் தமிழர் தாயகப்பகுதிகளில் நடந்தேறிய கொடூரங்கள் பற்றி பல கோணத்திலும் ஆய்வுகள் இடம்பெற்றிருந்தன. ஆய்வரங்கத்தில் திட்டமிட்டு மழுங்கடிக்கப்பட்ட கல்வியையே முதன் முதல் ஆய்வுக்காக எடுக்கப்பட்டது.

விரிவுரையாளர் தமிழினத்தின் கல்வி புறக்கணிப்புச் செய்யப்பட்டு வந்ததை புள்ளி விபரங்களினூடாக ஆய்வுசெய்திருந்தார். தொடர்ந்து இனவாதிகளினால் ஏற்படுத்தப்பட்ட தமிழர் இனப்படுகொலை பற்றிய ஆய்வு இடம்பெற்றது.

திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்ட கல்வி நடாத்தப்பட்ட படுகொலைகள் ஆய்வுக்குட்பட்ட பின்னர் தமிழர் பகுதிகளில் கடல் ஆக்கிரமிப்பும், கடற்றொழில் அழிப்பும் பற்றியதான ஆய்வு நடாத்தப்பட்டபோது மக்களின் மனங்களில் எரிமலை வெடித்தது.சிங்கள இனவாதிகளாலும் அந்நியர்களாலும் களவாடப்பட்டுக் கொண்டிருக்கும் எம் கடல் வளம் அதுவும் தமிழரின் பொருளாதார வளம் இந்நிலைக்கு வந்தது எம்மினத்தை திட்டமிட்டு அழிக்க எடுத்த முயற்சியாகவே கருதவேண்டும்.

தமிழர்கள் நாம் கற்களைப் போலவும் கட்டைகளைப் போலவும், செத்துமடிவதைவிட வீரர்களைப் போல இறப்பது மேலானது. வாழ்க்கை என்னும் கத்தி துருப்பிடித்து அழிந்து போவதைவிட தேய்ந்து அழிவதே மேலானது எனத்துணிந்தெழுந்த

**அகவிழி**

மக்களின் முன் இவ்வறிக்கை பல படிப்பினைகளை வெளிக்காட்டியிருந்தன.

ஒரு நாடு வளம் பெறுவது மண் வளம், நில வளம், நீர் வளம், வனவளம், கடல்வளம், மலைவளம், என்பவற்றால் என்பதை உணர்ந்த ஆக்கிரமிப்பாளர்கள் தமிழர் தேசத்தின் நிலவளம் மண்வளத்தினை " உயர் பாதுகாப்பு வலயம்" என்ற பெயரில் ஆக்கிரமித்துள்ளனர் பற்றியதான ஆய்வு இடம் பெற்றது. தமிழர் வரலாற்றில் ஏற்பட்ட மிகமோசமான அழிவுகள் நடந்தேறிய சம்பவங்கள் இந்த உயர் பாதுகாப்பு வலயத்தினால்தான் என்பது புலப்பட்டது.

நிலங்களை அபகரித்த இனவாதிகள் திட்டமிட்டு சிங்கள குடியேற்றங்களை நிறுவி தமிழர் தாயகத்தை சுரண்டிய வரலாற்று அடுத்து ஆய்வுக்காக எடுக்கப்பட்டது. ஏவிவிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தினால் ஏற்பட்ட இடப் பெயர்வுகளின் போது நிகழ்ந்த தமிழர்களின் அவல வாழ்க்கை பற்றி எடுத்த ஆய்வு தொடர்ந்து நிகழ்ந்தது.

மனிதனுக்குள் மிகப்பெரிய சக்தி இருக்கிறது. மனித உடல் ஒரு சாதனம். நம்முள் இருக்கும் மிகப் பெரிய சக்தியை நாம் உணர்ந்து அந்த ஆக்க சக்திகளை வெளிக் கொணரும்போது எந்தப் பிரச்சினைகளும் தூள்தூளாகிவிடும் என்னும் எண்ணம் மேலோங்க ஆய்வுகள் தொடரப்பட்டன.

சிறிலங்கா அரசினால் தாயக விவசாயிகளின் புறக்கணிப்பு என்னும் ஆய்வுடன் தொடர்ந்து தாயகப் பகுதிகளில் பொருளாதாரம் திட்டமிட்டுச் சீரழிக்கப்பட்டுவருவது பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நாம் இன்னும் பசி, வறுமை, கொடியநோய்களுக்கு உட்பட்டவராக இருப்பதற்கான காரணம் சிறிலங்காவின் இவ்வாறான செயற்பாடுகளே யாகும் என்பதை உணர்த்தியது.

கிறிஸ்தவ சமயப் புறக்கணிப்புப் பற்றி ஆராயும்போது சிறிலங்கா இராணுவத்தினரால் தேவாலயங்கள் குண்டுபோட்டு அழிக்கப்பட்டதும், அடைக்கலம் புகுந்த அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதும் புள்ளிவிபரம் மூலம் கொடுக்கப்பட்டிருந்தது. யுத்தம் காரணமாக ஏற்பட்ட அழிவுகளுடன் தாயகப்பகுதிகளில் ஏற்பட்ட "கடற்கோள் அழிவுகள்" பற்றியதான ஆய்வு விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல ஒரு உணர்வு என்றாலும் விழுந்தும் எழும்புவோம் நாங்கள் என உறுதியளிக்கப்பட்டது.

சிறிலங்கா அடக்குமுறை தமிழர்கள் மீது மாத்திரமல்ல முஸ்லிம்களுக்கும் என்பதை உணர்த்தும் வகையில் முஸ்லிம்களின் பிரச்சினைகளும் ஆய்வுக்கு எடுக்கப்பட்டன. அத்தோடு இந்துமதம் புறக்கணிப்புப் பற்றியதான ஆய்வு நடைபெற்றது. இன்னும் பெரும் பிரச்சினையாகவிருக்கும் புத்தர் சிலை விவகாரத்துடன் ஒப்பிட்டு இவ்வாய்வு இடம்பெற்றது.

சிறிலங்கா பேரினவாதிகளினால் தமிழ்ப் பெண்கள், குழந்தைகள் கொல்லப்பட்டதும் பாலியல் வல்லுற வுக்குள்ளாகியும், சிறுவர் துஷ்பிர யோகம் செய்யப்பட்டதுமான ஆய்வும் முன்னெடுக்கப்பட்டது. ஆய்வுகளில் இறுதியாக அரசியல் ஆய்வுக் கட்டுரை இடம் பெற்றது. சமாதானப் பாதையை வகுத்த தலைவரின் ஆணையினால் நாம் பொறுமையுடன் உள்ளோம். சிறிலங்காவின் சில நிகழ்வுகள் எம்மைக் கோபங்கொள்ளச் செய்கின்றன. இனியும் பொறுத்திருப்பது முடியாது. பொங்கியெழத் துணிந்து விட்டோம் தலைவனின் தலையசைவை பார்த்தபடி உள்ளோம் எனவும் உரத்துக் கூறப்பட்டது.

தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டில் ஆய்வுகளுக்கிடையில் ஆசியுரைகளும்,வாழ்த்துச்செய்திகளும், சிறப்புரைகளும் இடம் பெற்றதோடு, இடையிடையே அரங்க செயற்பாட்டு குழுவினரால் நடாத்தப்பட்ட நிகழ்வுகளும் இடம்பெற்றன.

தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டின் இறுதியில் பிரகடனம் வெளியிடப்பட்டது. அனைத்து தமிழ் மக்கள் பிரதிநிதிகளும் எழுந்து நின்று கோசம் எழுப்பியவர்களாக " பொங்கி எழுந்துவிட்டோம் இனிப் போருக்குப் புறப்படத்தயார். தலைவனின் ஆணைக்காகக் காத்து நிற்கின்றோம்" என்னும் தொனிப் பொருளில் கோசங்கள் எழுப்பப்பட்டன. இன்று நடந்து கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு பேச்சுவார்த்தையல்ல. யுத்தமே என முடிந்த முடிவாக தமிழர்கள் நாம் சர்வதேசத்திற்குச் சொல்லி வைக்க விரும்புகின்றோம். என சபதமிட்டு மாநாடு கலைந்தது.



# சிறிமாவோவின் அரசியல்

## வடக்கு கிழக்கிற்கு இராணுவத்தை அனுப்பும் பாரம்பரியத்தை தொடங்கியவர் பண்டா, தீவிரப்படுத்தியவர் சிறிமாவோ.

- அன்பரசு -

ஆசிய அரசியல் தலைவர்கள் இறக்கும்போது அவர்களுடைய குடும்பத்தினர், குறிப்பாக மனைவியர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று ஒரு மேற்கத்திய அரசியல் விஞ்ஞானி கூறியுள்ளார். இறந்தவரின் இடத்தை இனிப்பிடித்து விடலாம் என்ற எதிர்பார்ப்பு வாரிசுகளுக்கு உண்டு. இதன் காரணமாகத் தலைவர்கள் உயிரோடு இருக்கும்போதே அவர்களுடைய துணைவியர்களும் பிள்ளைகளும் தம்மைத் தயார் நிலையில் வைத்திருப்பார்கள்.

தனிப்பட்ட திறமை என்பது இரண்டாம் பட்சமே, முதலிடம்வகிப்பது குடும்ப உறவு மாத்திரமே. வாரிசுரிமை என்பது அரச பரம்பரையினரின் பாரம்பரிய வழமை. இப்போது மக்களாட்சியிலும் இந்த வழமை நடைமுறைக்கு வந்துவிட்டது.

அமெரிக்கக் குடியரசின் அரசியல் சாசனத்தை உருவாக்கிய பெரியோர்கள் வாரிசு அரசியல் தமது நாட்டில் தோன்றக்கூடாது என்பதில் பெரும் அக்கறைகாட்டினர் . ஆனால் அது படிப்படியாகத் தோன்றிவிட்டது. 1797 இல் சுதந்திரப் போரில் பெரும் பங்களிப்புச் செய்த ஜோன் அதாம்ஸ் (JOHN ADAMS) சனாதிபதியானார். 1825 இல் அவருடைய மகன் ஜோன் குவின்சி அதாம்ஸ் (JOHN QUINCY ADAMS) அமெரிக்க சனாதிபதியானார். தனது மகன் இப்பதவிக்குப்போட்டியிடுவதைத் தந்தை விரும்பவில்லை என்று வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன.

20 ஆம் நூற்றாண்டில் கெனடி குடும்பம் ஒரு வாரிசு அரசியல் தலைமையை உருவாக்கத் எத்தனித்தது.ஆனால் றொபேட் கெனடியின் படுகொலை அதிபர் கெனடியின் மகன் ஜோன் கெனடியின் சடுதி மரணம் என்பனவால் அது கைகூடவில்லை.

இப்போது புஷ் குடும்பத்தினரின் காலம் " எனது அடுத்த மகன் ஜெப்புஷ் 2012 இல் போட்டியிடுவார்" என்று மூத்த புஷ் அண்மையில் பகிரங்கப்படுத்தியுள்ளார். பண்டாரநாயக்கா செப்ரெம்பர் 1959 இல் சுட்டுக்கொல்லப் பட்டபின் காலித்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ தகநாயக்கா பிரதமரானார்.

இவருடைய பதவிக்காலம் டிசெம்பர் 1959 வரை நீடித்தது. மிகவும் குறுகிய காலம் பிரதமர் பதவி வகித்தவர் என்ற சிறப்பு இவருக்கு உண்டு. டிசெம்பர் 1959இல் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. 1960 சனவரி 2ஆம் நாள் நாடு தழுவிய அரச நிர்வாகம் தனிச் சிங்களச் சட்டத்திற்கு அமைவாக மாற்றப்பட்டது. வடக்கு கிழக்கில் பரந்தளவு கர்த்தாலுக்கு சமஷ்டிகட்சி அழைப்புவிடுத்தது. இப்படியான அசாதாரண கொதிநிலை பண்டாவின் மறைவோடு தொடங்கியது.

மார்ச் 1960இல் டட்லி சேனநாயக்கா தலைமையிலான யூ. என். பி அரசு பொறுப்பை ஏற்றது. இத்தேர்தலில் ஒரு கட்சியாகினும் அறுதிப் பெரும்பான்மை பெறவில்லை. டட்லி அரசு பெரும்பான்மை இல்லாத குற்றுயிர் ஆட்சியாக அமைந்தது. பதவியேற்ற அடுத்த மாதமே எப்ரல் 1960இல் டட்லி அரசு தோல்விகண்டது.

மீண்டும் தேர்தல் நடக்கின்றது, சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டணி வெற்றி பெறுகின்றது. உலகின் முதலாவது பெண் பிரதமராகச் சிறிமாவோ பண்டாரநாயக்கா பதவியேற்கிறார்.

சிறிமாவோ அரசியல் அனுபவம் அற்றவர் என்று கூறுவது தவறான கற்பிதம். அவர் தனது கணவரின் அரசியலுக்கு உதவியுள்ளார் என்பதோடு பண்டாவின் சிங்கள பௌத்தப் பேரினவாதக் கொள்கையிலும் தீவிர நம்பிக்கை கொண்டிருந்தார். கணவர் சோமரராம தேரர் என்ற புத்த பிக்குவால் கொல்லப்பட்டிருந்தாலும் புத்த பிக்குகள்மீது அவர் வெறுப்படையவில்லை.

நெருங்கிய உறவினனான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் கட்டுப்பாட்டில் சிறிமாவோ பண்டாரநாயக்கா இயங்கியதாக ஒரு அபிப்பிராயம் உண்டு. ஆனால் சிறிமாவோவின் அமைச்சரவையில் இருந்த ஒரேயொரு ஆண் அவர் மாத்திரமே என்றும் சொல்லப்படுகிறது.

1960 தொடக்கம் 1964 வரை நீடித்த முதலாவது சிறிமாவோ ஆட்சியில் பலமுக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நீதி மன்ற மொழி சிங்களம் மாத்திரமே என்ற விதிமுறையை சிறிமாவோ அமுலாக்கம் செய்தார்.

சமஷ்டிக்கட்சி தமிழரசுக்கட்சியை நிறுவமுனைகின்றது. யாழ்ப்பாணத்தில் தமிழீழ தபால் சேவையை இக்கட்சி மிகக் குறுகிய காலம் நடத்தியதோடு தபால் தலைகளையும் விற்பனைசெய்கின்றது. அத்தோடு சத்தியாகிரத்தையும் நடத்துகின்றது. அதற்குமேல் சமஷ்டிக் கட்சியால் ஒன்றுமேசெய்யமுடியவில்லை. யாரேனும் எம்மைத் தடுத்து நிறுத்தவர மாட்டார்களா? என்று கட்சித் தலைவர்கள் ஏங்கிக்கொண்டிருந்தபோது சிறிமாவோ இராணுவத்தை அனுப்பி அடக்குமுறை ஆட்சியை ஆரம்பிக்கிறார். வடக்குகிழக்கிற்கு இராணுவத்தை அனுப்பும் பாரம்பரியத்தை தொடங்கியவர் பண்டா, தீவிரப்படுத்தியவர் சிறிமாவோ.

1963 இல் இடதுசாரி முன்னணியை என்.எம்.பெரேரா தலைமையிலான எல்.எஸ்.எஸ்.பி கட்சி பீற்றர் கெனமன் தலைமையிலான கம்யூனிஸ்கட்சி ஆகியவற்றை இணைத்து சிறிமாவோ உருவாக்கினார்.

1963 ஆகஸ்ட் மாதத்தில் யூ.எல்.எப் (ULF) என்றழைக்கப்படும் இம்முன்னணி தோன்றியது. அத்தோடு பெரும் பாரம்பரியமுள்ள இலங்கை இடதுசாரி வரலாறு முடிவுக்கு வந்துள்ளது.

மொழிச்சமத்துவம் பேசிவந்த என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, பீற்றர் கெனமன் போன்ற தலைவர்கள் அப்பட்டமான தனிச் சிங்களவாதிகளாக மாறுகின்றனர். இன்று இடதுசாரிகள் எனப்படுவோர் அருகிவிட்டனர். அவர்கள் மறைவு 1963 இல் ஆரம்பிக்கிறது.

1964 ஜூன் மாதத்தில் சமசமாஜகட்சி சிறிமாவோ அமைச்சரவையில் மந்திரிப் பதவியை ஏற்கின்றது. இதேவருடம் இலங்கை நிர்வாகசேவையில் பணியாற்றிய கோடீஸ்வரன் என்பவர் சோல்பரி பிரபுவின் அரசியல் சாசனம் வழங்கிய மொழிக்காப்புரிமைச் சரத்தின் கீழ் வழக்குத்தாக்கல் செய்கிறார். இதற்கிடையில் டிசெம்பர் 1964இல் சிறிமாவோ தலைமையிலான இடதுசாரி முன்னணி அரசு தனது பெரும்பான்மையை இழந்து நாடாளுமன்றத்தில் தோல்வி காண்கின்றது.

1965 இல் டட்லி சேனநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ்கட்சி ஆகியவற்றின் ஆதரவோடு யூ.என்.பி தேர்தல் களத்தில் குதிக்கின்றது. சமஷ்டிக் கட்சி ஆதரவோடு டட்லி அரசு 'நியாயமான தமிழ் மொழிப்பாவனைக்கான விதிமுறைகளை' 1966 சனவரியில் கொண்டு வந்தபோது எஸ்.எல்.எப்.பி லங்கா சமசமாஜ கட்சி (எல்.எஸ்.எஸ் .பி), கமியூனிஸ்கட்சி என்பன கடும் எதிர்ப்புத்தெரிவித்தன.

இப்படியான விதிமுறைகளைச் சட்டமாக்க சிறிமாவின் கணவர் பண்டா கொண்டுவர உத்தேசித்தபோது யூ.என்.பி. அதற்குக்கடும் எதிர்ப்புத் தெரிவித்ததால் அவை கைவிடப்பட்டன. அதே விதிமுறைகளை இப்போது யூ.என்.பி சட்டமாக்க விளைந்தபோது பண்டாவின் மனைவியும் பங்காளிகளும் கடும் எதிர்ப்புக் காட்டியதோடு தமிழர் மீதான கடும் துவேஷத்தையும் காட்டினர்.

1968 இல் மாவட்ட சபைகளைத் தமிழர்களுக்கு வழங்கும் சட்டம் வரையப்பட்டது. மீண்டும் எதிர்ப்புக்கள் கிளம்பின. மாவட்ட சபையை ஏற்றுக்கொள்வதற்கு சமஷ்டியினர் சம்மதம் தெரிவித்ததே மிகப்பெரிய தவறு. அதை எதுவகையிலும் நியாயப்படுத்த முடியாது. ஆனால் இதற்குக்கூடக் கடும் எதிர்ப்பு இருந்தது. 1956 இல் தனிச் சிங்களச் சட்டவிவாதம் நடைபெற்றபோது வரலாற்றுப் பாடத்தில் கலாநிதி பட்டம் பெற்றவரும் பிரபல வழக்கறி ஞருமான நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கொல்வின் ஆர்.டி சில்வா " ஒரு மொழி இரு நாடு, இருமொழி ஒரு நாடு" என்ற தத்துவத்தை சபையோர் முன்வைத்தார்.

1968இல் ஒரு குத்துக்கரணம் அடித்ததோடு மிகவும் கேவலமான மொழியில் டட்லியை தூஷித்தார். அவர் நடத்திய பேரணிக்கு அவர் சிவப்புக் சேட்டு அணிந்து சென்றார். "டட்லிகே படே மசால வடே" டட்லியின் வயிற்றில் மசால வடை என்ற அரியதத்துவத்தை இச்சந்தர்ப்பத்தில் அவர் வெளியிட்டார்.

இவர்கள் காட்டிய கடும் எதிர்ப்பாலும் தமிழர் நலனில் அரசின் அக்கறையின்மையாலும் மாவட்ட சபைச் சட்டம் ஓசைபடாமல் கைவிடப்பட்டது. 1969 இல் மனமுடைந்த சமஷ்டிக்கட்சி டட்லிஅரசிற்கு வழங்கிய ஆதரவை மீளப் பெற்றவுடன் அது வீழ்ச்சிகண்டது.

1970 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்களில் சுதந்திரக்கட்சி தலைமையிலான சமசமாஜ கம்யூனிஸ் கூட்டணி வெற்றிபெற்றது. சிறிமாவோ மீண்டும் பிரதமரானார்.

தமிழர் பிரச்சினையைப் பொறுத்தளவில் இவருடைய இரண்டாம் கந்தாய ஆட்சி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தகாலம். கணவர் தனிச்சிங்களச் சட்டத்தை நிறைவேற்றி சிங்கள மொழிக்கு முன்னுரிமை வழங்கினார். சிறிமாவோவின் கட்டளைப்படி டாக்டர் கொல்வின் ஆர்.டி சில்வா உருவாக்கிய 1972 மே மாத அரசியல் சாசனம் இதுவரை காலமும் புத்த மதம் அடையாள ரீதியாக கொண்டிருந்த முதன்மையை சட்ட வடிவமாக்கியது.

மதம் என்பது மக்களுக்கு ஊட்டப்படும் அபின் என்று எழுதியும் பேசியும் வந்த கொல்வின் இப்போது மதத்தை முதன்மைப் படுத்தினார். அத்தோடு சோல்பரி பிரபுவின் சாசனம் தமிழர்களுக்கு வழங்கிய 29 ஆம் சரத்தில் உள்ளடங்கிய பாதுகாப்பையும் 1972 ஆம் ஆண்டுச் சாசனம் பறித்தெடுத்தது. தமிழர்களுக்கு யாதொரு உரிமையையும் வழங்காமல் இரண்டாம் பிரசை நிலைக்கு இச்சாசனம் தள்ளியது. 1973 இல் தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக நுழைவைக் கட்டுப்படுத்தும் 'தரப்படுத்தல்' விதிமுறைகள் அறிமுகம் செய்யப்படுகின்றன. இதனால் தமிழ் மாணவர்களின் உயர்கல்வி பாதிப்படைகின்றது. யார் பதவிக்கு வந்தாலும் தமிழர் உரிமை பறிப்பு ஒரு தொடர் நிகழ்ச்சியாக சிறிலங்கா வரலாற்றில் நீடிக்கின்றது.

ஈழத்தமிழர்களின் உரிமைப்போர் வரலாற்றைப் பொறுத்தளவில் பண்டாவின் காலம் சமஷ்டிக் கட்சியினர் நடத்திய காந்தீய முறையிலான சாத்வீகப் போராட்டமாக இடம் பெற்றது. இந்தமுறையின் பயனற்ற தன்மையால் நேர்ந்த தோல்வியும்,இளம் தலைமுறையினரின் ஆயுதமேந்திய போராட்டமும் சிறிமாவோ காலத்தில் தொடங்கியது. மிதவாதிகளை ஒழித்துக்கட்டிய சிங்களத் தலைமை ஆயுதப் போருக்கான சூழலை உருவாக்கியது.

"நான் தருவதை ஏற்றுக்கொள்ளுங்கள்"என்ற சிறிமாவோவின் இறுமாப்பான பிரகடனம் தமிழர்கள் மீது வீழ்ந்த பலமான அடியாகக் கருதப்படுகிறது. தமிழர்களின் ஆயுதப்போரின் தன்மையை சிங்களத் தலைமை புரிந்துகொள்ளத் தவறியமை பெரும் வரலாற்றுத் தவறாகத் கணிப்பிடப்படுகிறது.

1970களில் சிறிமாவோவின் இரண்டாம் கந்தாய ஆட்சி தொடங்கியவுடனேயே ஆயுதமேந்திய தமிழிளைஞர்கள் அரச இலக்குகளைத் தாக்கத் தொடங்கினர். தமிழீழ விடுதலைப்புலி இயக்கம் 'தமிழ்ப் புதிய புலிகள்' என்ற பெயருடன் 1972 இல் ஆரம்பமாகியது. 'தமிழீழ விடுதலைப்புலிகள்' என்ற பெயர் மாற்றம் 05 மே 1976 இல் செய்யப்பட்டது.

சிறிமாவோ ஆட்சி தமிழர்களுக்கு இழைத்த மிகப்பெரிய வன்முறையாக 1974 சனவரியில் நடந்த மூன்றாவது தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகள் இடம்பெறுகின்றன. 1974 சனவரி 3ஆம் நாள் ஆரம்பமாகி 10 ஆம் திகதிவரை நடைபெற்ற மாநாட்டின் எட்டாம் நாளன்று யாழ் பொலிஸ் அதிபர் சந்திரசேகரா தலைமையிலான பொலிஸ் படையினர் தாக்குதல் நடத்தினர். இதில் ஒன்பது அப்பாவிகள் கொல்லப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் இந்த விழா நடத்துவதற்கு சிறிமாவோ ஆட்சி அனுமதி மறுத்தது.

யாழ் மேயர் அல்பிறெட்துரையப்பா அப்போது யாழ் சுதந்திரக்கட்சி அமைப்பாளராக இருந்தார். அவரும் சிறிமாவோவுடன் இணைந்து தடைகள் ஏற்படுத்தினார். யாழ் மாநகராட்சிக்குச் சொந்தமான அரங்குகளைக் கொடுக்க அவர் மறுத்தார்'இறுதியில் வீரசிங்கம் மண்டபத்திலும் முற்ற வெளியிலும் மாநாடு நடத்தப்பட்டது.

சந்திரசேகராவைக் கொலை செய்யும் முயற்சியில் வெற்றிகாணாத் சிவகுமாரன் கோப்பாயில் ஒரு சுற்றிவளைப்பின்போது சயனைற் அருந்தி வீரச்சாவடைந்தார். 1975 ஜூலை 27 ஆம் நாள் அல்பிறெட் துரையப்பா பொன்னாலையில் சுட்டுக்கொல்லப்பட்டார். எமது விடுதலைப்போர் விறுவிறுப்பான கட்டத்திற்குச் செல்வதற்கு சிறிமாவோவின் தமிழர் எதிர்ப்புக் கொள்கைகள் காரணமாக அமைகின்றன.

அரசியல்வாதிகளின் கைகளில் இருந்து இளைஞர்களால் பறிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் போர் ஆயுதப் போராக மாறிய காலமாக சிறிமாவோ பண்டாரநாயக்காவின் 1970 தொடக்கம் 1977 ஆம் ஆண்டு வரை நீடித்த ஆட்சி கணிப்பிடப்படுகிறது.

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 05. 08 . 2005

மின் அஞ்சல :—weekly @ eezhanatham.com

# அழிவின் பாதையில்..!

இலங்கையில் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமானால் அரசாங்கம் விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதுடன் சுனாமி அனர்த்தத்துக்குப் பின்னரான மீள்கட்டுமானப் பணிகளை துரிதப்படுத்தவேண்டுமென சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

அரசு விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தையினை ஆரம்பிக்கவேண்டுமென இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் அமைப்புகளும் வலியுறுத்தி வருகின்ற போதிலும் அதனை அரசு மதித்து நடப்பதாகத் தெரியவில்லை.

அரசைப் பொறுத்தவரையில் அதற்கு விடுதலைப் புலிகளுடன் பேசிச் சமாதானத்தை முன்னெடுப்பதில் ஆர்வமோ, அக்கறையோ கிடையாது.

அரசு எந்தவொரு காலத்திலும் சமாதானத்திற்காக உண்மையான அர்த்தத்தில் உழைத்ததும் கிடையாது.

சமாதானமும், நாட்டின் அமைதியும் அரசின் வார்த்தை அர்த்தத்தில் இரண்டாம் நிலை சார்ந்த பிரச்சினையேயாகும்.

இந்த நிலையில் இலங்கை அரசை சமாதானப் பேச்சுவார்த்தையினை ஆரம்பிக்க வேண்டுமென வலியுறுத்துவது வெறும் அறிக்கை பிரயோகமாக இருக்குமேயொழிய நடைமுறை செயற்பாட்டுக்கு அரசு அதனை ஏற்றுமதிக்கும் என எதிர்பார்க்கமுடியாது.

இந்த நிலையில் இலங்கையில் சனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவுபற்றியும் எப்போது சனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்ற தேர்தல் திகதி குறித்தும் ஆராய்ந்துவரும் தென்னிலங்கை அரசியலில் சமாதானம் பற்றி சிந்திப்பதற்கு அரசுக்கு நேரமிருக்காது.

இந்த நிலையில் வீழ்ச்சி நிலையில் இருக்கும் இலங்கையின் பொருளாதாரம் பற்றி சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புகள் குறிப்பிடுவதெல்லாம் சிறிலங்கா அரசை பொறுத்த வரையில் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்கும்.

இப்படிப்பட்ட நிலையில் வீழ்ச்சிகண்டுவரும் பொருளாதாரத்திலும் அவர்கள் எத்தனை இடைத்தேர்தல்கள் நடத்தலாம் என்பதிலும் எப்படி ஆட்சியைக் கைப்பற்றலாம் என்பதிலுமே காலத்தை செலவழிப்பார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரையில் அரசியலமைப்புக்கு வெளியில் சிந்திக்கக் கூடிய அதிசயமான ஒரு புரட்சிகரமான முன்னோடித்தலைவர் ஒருவர் ஆட்சிப் பொறுப்பேற்காத வரை அரசியல் சாபக் கேட்டிற்குள் இடர்பட்டு வாழ வேண்டிய துர்ப்பாக்கிய அவல வாழ்வு மட்டுமே இலங்கை மக்களுக்குக் கிட்டும்.

மாறாக பொருளாதார மீட்சியும், அரசியல் அதிகாரப் பகிர்வுகளும் மாநாடுகளுக்கும் கருத்தரங்குகளுக்குமான கருப் பொருளாக மட்டுமே இருக்கும். இதனையே இலங்கையை ஆட்சிசெய்துவரும் அரசுத்தலைவர்களும், அரசுகளும் இலங்கை மக்களுக்கு விட்டுச்செல்லும் சொத்துக்களாக உள்ளது.

இந்த நிலையில் இலங்கை விதியின் விளையாட்டிலும் அழிவின் பாதையிலும் பயணிக்கும் ஒரு நாடாகவே உலக வரைபடத்தில் சித்தரிக்கப்படும் என்பதே வரலாறு பகரப் போகும் சான்றாக இருக்கும். இதனை மாற்றி நாட்டு மக்களின் சுபீட்சமான வாழ்விற்காக சிந்திக்கவேண்டியது அவசியமாகும்.

இந்த நிலையில் நாட்டில் மக்களின் வாழ்க்கைச் செலவு மிக உயர்வாக அதிகரித்துவிட்டதால் சுமக்கமுடியாத துயரத்தோடு இலங்கை மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இதற்கிடையில் போரினாலும் இயற்கையினாலும் பேரழிவைச் சந்தித்தமக்களின் வாழ்க்கை நிலையும் மோசமாகவுள்ளது.

இவை பற்றியெல்லாம் இந்த அரசு சிந்திக்கத் தயாரில்லாத நிலையில் இத்தகைய அமைப்புகளின் அறிக்கைகள் எந்தப்பயனையும் விளைவிக்கப்போவதில்லை.

# தென்னாபிரிக்காவில் சந்திரிகா என்ன பேசினார்..?

## -பேராசிரியர் சிவசண்முகம்-

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா மிகவும் வித்தியாசமான பெண். அவர் உரையாற்றும்போது உண்மைக்கு முன்னுரிமை கொடுப்பதில்லை. முன்கூட்டியே பேச்சுக்களைத் தயாரித்து மேடைக்கு எடுத்துச்செல்வது முக்கிய அரசியல் தலைவர்களின் நடைமுறை.

மேடையில் பேசவேண்டியவற்றை எழுதிக்கொடுக்கும் ஆலோசகர்களும் இருக்கிறார்கள். தனது பொதுவான கருத்தை அரசியல் தலைவர்கள் தமது பேச்சை எழுதும் அதிகாரிகளுக்குக் கூறுவார்கள். அதன் அடிப்படையில் மேடைப் பேச்சையோ நேர்காணலையோ தலைவர்கள் நடத்துவார்கள்.

வாயில் வந்ததைப் பகிரங்கமாகப் பேசும்போது வரும் ஆபத்துக்களையும் உயர்மட்ட முரண்பாடுகளையும் தவிர்ப்பதற்காகவே இந்த முன்யோசனை மேற்கொள்ளப்படுகிறது. சிறிலங்காவின் தலைவி சந்திரிகா இந்த நடைமுறைகளை மதித்து நடப்பதில்லை.



என்ன பேசப் போகிறோம், நேர்காணல் செய்வோருக்கு என்ன பதில் கூறப்போகிறோம் என்று அவர் முன்கூட்டியே திட்டமிடுவதில்லை. என்ன அவர் வாயால் வரப்போகிறது என்பதை அவரே அறியமாட்டார். பேசி முடிந்தபின்தான் அவருக்குத் தெரியவரும்.

ஏதேனும் இசகுபிசகாகப் பேசி மாட்டிக்கொண்டால் சந்திரிகாவை மீட்பதற்கு லக்ஷ்மன் கதிர்காமர்போன்ற அடியார்கள் இருக்கிறார்கள். சந்திரிகா அப்படி ஒன்றுமே சொல்லவில்லை என்று அவர்கள் அடித்துக் கூறிவிடுவார்கள்.

சொல்லுவதும் மறுப்பதும் மாறி மாறிவரும் இரு நடைமுறைகள் என்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர். சந்திரிகா மாத்திரமல்ல வேறு சிங்களத் தலைவர்களும் சொல்வதும் மறுப்பதும் நடைமுறையைப் பின்பற்றுகின்றனர்.

இது விபத்தல்ல, நன்கு உருவாக்கப்பட்ட திட்டமென்றும் கொழும்பு அரசியலை அவதானிப்பவர்கள் கூறுவார்கள்.

தமிழர் பிரச்சினையில் இந்த நடைமுறை சிங்களத் தலைவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. முதல்வரும் வாக்குறுதி வழங்கல் பின்வரும் பின்னடிப்பு பிரச்சினை. மோசம் அடைவதற்கு இவ்வகை ஏமாற்றும், இழுத்தடிப்பும் முக்கிய காரணங்களாக அமைகின்றன.

சந்திரிகா வாக்குறுதி வழங்குகிறார் என்றால் அதை நம்பக்கூடாது என்பதில் ஈழத்தமிழர்கள் மிகவும் உசாராக இருக்கிறார்கள். அனுபவத்திலும் பார்க்கச் சிறந்த ஆசான் வேறில்லை. அம்மையார் பேசப்பிறிதொருவர் அவர் அப்படிப்பேசவில்லை, இப்படித்தான் பேசினார் என்று விளக்கவுரை வழங்க இப்படியே போகிறது சிறிலங்காவின் கோமாளி அரசியல்.

1998 செப்ரெம்பர் மாதம் தென் ஆபிரிக்காவில் நடந்த அணிசேரா நாடுகளின் உச்சிமாநாட்டிற்கு சிறிலங்காத் தலைவி தனது பரிவாரங்களோடு சென்றது ஞாபகமிருக்கலாம்.

அணிசேரா இயக்கம் பனிப்போர் முடிவோடு இறந்துவிட்டது. ஆனால் இப்போதும் ஒன்று கூடல்கள் நடக்கின்றன. இச்சந்திப்பின்போது எடுக்கப்படும் முடிவுகளும், தீர்மானங்களும் பயனற்றதாக இருக்கின்றன.

உலக அரசியலில் இவற்றால் ஒரு பயனுமில்லை. பொதுமக்கள் பணம் வீண் விரயமாவதுதான் மிச்சம். ஆனால் சந்திரிகா போன்றோர் தமது மனதிலுள்ள காழ்ப்புணர்வை வெளிப்படுத்துவதற்கு இதுபோன்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துகின்றனர்!

தென்னாபிரிக்கா தொலைக்காட்சி நிறுவனம் சந்திரிகாவை ஒரு பகிரங்கநேர்காணல் நிகழ்ச்சிக்கு அழைப்பு விடுத்தது. அம்மணியும் சென்றார். அந்த நேர்காணலில் அவர் ஈழத்தமிழர் பற்றிக்கூறிய ஒரு அப்பட்டமான பொய்யுரை இன்றுவரை பெரும் உணர்வுகளைக் கிளப்புகிறது.

ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி வினவியபோது, சந்திரிகா தனக்கே உரித்தான ஆண்குரலில், "இலங்கையின் பூர்வீகக்குடியினர் அல்லாத ஒரு சிறுபான்மை இனத்தவர், தனிநாடு கோருகின்றனர்" என்று சொன்னார். இந்த நேர்காணல் முழுவதும் செப்ரெம்பர் 05,1998ஆம் ஆண்டு இரவு 10.00 மணிக்கு ரூபவாகினி ஆங்கிலச் சேவையில் வெளியிடப்பட்டது. இதை நாட்டுமக்கள் யாபேரும் பார்க்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. ஒருவிதமான மறைப்பும் இல்லை. தென்னாபிரிக்காவில் வழங்கப்பட்ட நேர்காணல் அப்படியே சிறிலங்கா ரூபவாகினியில் மறு ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

குமார் பொன்னம்பலம் போன்ற அரசியல் தலைவர்கள் இந்த ஒளிபரப்பை வீடியோப் பிரதி பண்ணி வைத்திருந்தனர். அத்தோடு தென்னாபிரிக்கத் தொலைக்காட்சியுடன் தொடர்புகொண்டு நேர்காணலின் உண்மைத் தன்மையை உறுதிசெய்துகொண்டனர்.

சரியாக ஒருமாதம் சென்றபின் சிறிலங்காவின் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் எறிக்பெனாந்து வெளியுறவு அமைச்சரும் சந்திரிகாவுக்கு நெருக்கமானவருமான லக்ஷ்மன் கதிர்காமரை "ஜனமண்டல" நிகழ்ச்சியில் நேர்காணல் கண்டார். இதன்போது தொலைபேசிமூலம் கதிர்காமரைக் கேள்விகேட்கும் சந்தர்ப்பம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. ஜனமண்டல என்பதன் அர்த்தம் அதுதான்.

சிவனேசன் என்ற தன்னை அறிமுகம் செய்த ஒரு கொள்ளுப்பிட்டி நேயர் ஈழத்தமிழர்கள்பற்றி தென்னாபிரிக்காவில் சந்திரிகா கூறியதுபற்றி வினவினார். இதற்குக் கதிர்காமர் "மிகவும் சுருக்கமான பதில் என்னவென்றால் சனாதிபதி அப்படி ஒன்றுமே சொல்லவில்லை. மிகவும் அண்மைக்காலத்தவர் என்றும் அவர்கள் இலங்கைக்கு உரியவர்கள் அல்லவென்றும் அவர் அப்படி ஒன்றுமே சொல்லவில்லை" என்று ஆணித்தரமாகப் பதில் கூறினார். இருவரில் யாரை நம்புவது என்று தெரியாமல் தவிக்கவேண்டிய அவசியம் இல்லை.

(சிலகாலம் எழுத்துலகிலிருந்து விலகியிருந்த பேராசிரியர் மீண்டும் பணிக்குத் திரும்பியுள்ளார்.)



# நேர்நோக்கு

அடுத்த சனாதிபதித் தேர்தல் தொடர்பான காய்நகர்த்தல்கள் இப்பொழுது தென்னிலங்கையில் வேகம் பெறத்தொடங்கியுள்ளன. அதிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சனாதிபதி வேட்பாளர் ஒருவரை அறிவித்த பின்னர் மேலும் இது வலுப்பெற்றிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை அது கூட்டணி சேர்வதற்குப் புதிதாக எதுவுமில்லை. அதனுடன் இணையக்கூடிய முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா போன்றவை அதனுடனேயே உள்ளன. இ.தொ.கா இப்பொழுது ஆளும் கட்சியுடன் இருந்தாலும் தேர்தல் சமயத்தில் ஐ.தே.க வுடன் இணைந்துவிடும் என்பதில் அதற்கு ஐயம் எதுவுமில்லை.

ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்து கூட்டுச் சேர்வது தொடர்பில் தீவிரமுயற்சிகளை எடுக்க வேண்டிய நிலையிலேயே உள்ளது. பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகித்துக்கொண்டிருக்கும் கட்சிகள் மகிந்தராஜபக்சவின் தெரிவை ஏற்றுக்கொண்டு விட்டதால் அது பற்றி அக்கட்சிக்குப் பிரச்சினை எதுவுமில்லை.



சந்திரிகாவை காரசாரமாக விமர்சித்து வருமளவுக்கு மகிந்தராஜபக்சவை விமர்சிப்பதில்லை. அதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பிளவுபட்ட போது "மீண்டும் இணைவோம்" என ஜே.வி.பி கூறியிருந்தது. அது மகிந்த ராஜபக்ச கட்சித் தலைமைத்துவத்துக்கு வருவார் அப்போது மீண்டும் இணைந்துகொள்ளலாம் என்பதன் அடிப்படையிலானதாகவே இருந்தது.

இப்பொழுது அந்நிலையும் ஏற்பட்டுவிட்டதால் ஜே.வி.பி க்கு அவ்வாறு இணைந்துகொள்வதில் ஒரேயொரு பிரச்சினையே உள்ளது. அதாவது அது எந்த விடயத்துக்காகப் பிரிந்ததோ அதனை நீக்கிவிட்டால் போதுமானதாகும். அதாவது பொதுக்கட்டமைப்பு கைவிடப்பட்டுவிட்டதாக மகிந்தராஜபக்ச அறிவித்தால் போதும்.

ஏற்கனவே பொதுக்கட்டமைப்பு செயலிழந்துவிட்டது. அதன் மீது ஐந்துக்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன. ஆயினும் அந்த அமைப்பு இருக்கவே கூடாது என்பதற்காக ஜே.வி.பி போராட்டம் நடத்திவருகிறது. ஜே.வி.பிக்கும் தனது இருப்பை வெளிக்காட்ட இன்று அந்த ஒரு விடயம் மட்டுமே உள்ளது. ஏனெனில் முன்னர் நடத்தியது போல விலைவாசிக்கு எதிரான போராட்டத்தை அது இப்பொழுது தொடங்கினால் மக்கள் மத்தியில் நகைப்புக்குரியதாகவே அமையும்.

அதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சி பொதுக்கட்டமைப்பைக் கைவிடாத நிலையில் மீண்டும் இணைந்தால் அமைச்சர், பிரதி அமைச்சர் பதவிகள் ஆளும் கட்சி என்ற அந்தஸ்து என்பவற்றைக் கைவிட்டு ஏன் பிரிந்துசென்றனர்? என்ற கேள்வி கட்சித்தொண்டர்கள் மத்தியில் எழும். எனவே இவ்விடயத்தில் ஜே.வி.பி சமரசத்திற்குச் செல்லாது.

அதேவேளை மகிந்தராஜபக்ச பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் மட்டும் படாமலே நடந்து வந்திருக்கிறார். அதற்கு அவர் கூறிய காரணம் பொதுக்கட்டமைப்பு தொடர்பில் தனக்கு எதுவுமேதெரியாது. தெரியாத ஒன்றைப் பற்றி எவ்வாறு கூறுவது? என்பதாகும். அத்துடன் பொதுக் கட்டமைப்பு தொடர்பான ஆவணத்தை அவர் நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்க மறுத்துவிட்டார்.

இது ஜே.வி.பிக்கு நம்பிக்கை யூட்டுவதாக அமைந்திருக்கிறது. அதிகாரத்துக்கு வந்த பின்னர்தான் தன்னால் அதை நீக்க முடியும் என்ற ரீதியில் ஜே.வி.பி யுடன் இணக்கப்பாட்டிற்கு வர மகிந்தராஜபக்ச முயலக் கூடும் எனினும் இதனை வெளிப்படையாக அறிவிக்குமாறு ஜே.வி.பி கோரும்.

## வாக்குறுதிகள் மட்டும்...

ஆனால் வெளியேறிவிட்ட ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய என்பவற்றைப் பற்றித்தான் அக்கட்சி தீவிரமுயற்சி எடுக்க வேண்டிய தேவையுள்ளது.

குறிப்பாக ஜே.வி.பி யின் ஆதரவின்றி பொதுசன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் வெற்றி பெறுவது குறித்த சந்தேகம் அக்கட்சியிலுள்ள அனைவருக்கும் உள்ளது. இதனால் ஜே.வி.பியை எவ்வாறாயினும் இணைத்துவிடும் நோக்கம் அக்கட்சியிலுள்ள முடிவெடுக்கும் தலைமை வாய்ந்தவர்களுக்கு உள்ளது.

சனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கைச்சின்னத்தில் போட்டியிடுவதா? பொதுசன ஐக்கிய முன்னணியின் கதிரைச் சின்னத்தில் போட்டியிடுவதா? அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவதா? என்பது குறித்து தாம் இன்னமும் முடிவு செய்யவில்லை என அவர்கள் கூறியிருப்பது இதனையே வெளிப்படுத்துகிறது.

உண்மையில் அவர்களுடைய விருப்பம் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடவேண்டும் என்பதே. ஆனால் சூடு கண்ட பூனை நிலையில் இன்னமும் வலிமாறாது துடித்துக்கொண்டிருப்பதால் மீண்டும் அதே அனுபவத்திற்கு அக்கட்சி அஞ்சுகிறது.

சனாதிபதி சந்திகா மீண்டும் அதேபோன்றதொரு அனுபவத்தை விரும்பவில்லை என தகவல்கள் கூறுகின்றன. ஆனால் அவர் கட்சித் தலைவியாக இருந்தாலும் போட்டியாளரான மகிந்தராஜபக்ச ஜே.வி.பி யுடன் கூட்டுச் சேர்வதற்கான சில முயற்சிகளில் ஈடுபட்டதாக முன்னரே தகவல்கள் வெளியாகியிருந்தன.

அதாவது மகிந்தராஜபக்ச, மங்களசமரவீர, விமல்வீரவன்ச ஆகியோர் இரகசியச் சந்திப்பொன்றை நடத்தி சனாதிபதித் தேர்தல் தொடர்பான வியூகம் குறித்து ஆராய்ந்ததாகத் தகவல்கள் கூறின. இதற்குப் பின்னர்தான் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மகிந்தராஜபக்சவை திருட்டுப் பேர்வழி எனக் கூறியிருந்தார். அத்துடன் சிலரின் (மங்கள சமரவீர போன்ற) வற்புறுத்தலுக்காக ஜே.வி.பியுடன் கூட்டு வைத்துதான் கட்சிக்கு தவறிழைத்து விட்டதாகவும் கூறியிருந்தார். அவரின் இந்தக் கடுமையான கூற்றுக்கள் முன்னர் குறிப்பிட்ட இந்த இரகசியச் சந்திப்பை உறுதிப்படுத்துகின்றது.

இதேவேளை ஜே.வி.பியானது சனாதிபதி சந்திரிகாவை காரசாரமாக விமர்சித்து வருமளவுக்கு...

இதேவேளை மற்றொரு சக்தியான ஜாதிக ஹெல உறுமய "பஞ்ச தர்மக்கொள்கை" ஒன்றை அறிவித்துள்ளது. அதனை மகிந்தராஜபக்ச ஏற்றுக்கொண்டால் தங்கள் கட்சியிலிருந்து வேட்பாளரை நிறுத்தாமல்விடுவோம். அத்துடன் சனாதிபதித் தேர்தலில் அவரை ஆதரிப்போம் என்றும் கூறியுள்ளது.

அக்கொள்கைகளை இரகசியமாக ஏற்றுக்கொள்வது பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்கு சிரமமானதாக இராது. ஆனால் அதனை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள அவர் தயங்கக்கூடும்.

* சிறிலங்காவின் இறைமையை தொடர்ந்து பாதுகாத்தல்.
* சிறிலங்காவின் தேசிய உரிமை சிங்களவர்களுக்கே.
* விடுதலைப்புலிகளுடன் எந்த உடன்படிக்கையும் ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது.
* நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறை விகிதாசார தேர்தல் முறையில் திருத்தம்.
* பௌத்த தர்மத்துக்கு அமைய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பல்.

என்பனவே அவர்களின் பஞ்ச தர்மக்கொள்கையாகும்.

எவ்வாறாயினும் இப்போது மகிந்தராஜபக்ச சனாதிபதித் தேர்தலில் வெற்றிகொள்ள இவ்விரு சக்திகளினதும் ஆதரவு தேவை. இவர்கள் தனித்துப் போட்டியிட்டால் வாய்ப்பு ரணிலுக்கே சென்றுவிடும். இதனை ஜே.வி.பியும் விரும்பாது அதாவது ஒப்பீட்டு ரீதியில் ஐ.தே.க விடம் அதிகாரம் செல்வதைவிட சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடம் அதிகாரம் செல்வதையே ஜே.வி.பி விரும்பும்.

எவ்வாறாயினும் இந்த அமளிக்குள் மக்களைக் கவனிக்கத்தான் எவரும் இருக்கப்போவதில்லை. ஆனால் வாக்குறுதிகள் மட்டும் தாராளமாகக் கிடைக்கும்.

**வேலவன்**



# விசுக்விசுக் விசாலாச்சி

கேட்டியோடா கதையை கேழ்வரகில நெய் வடியு தாம். ங... கேழ்வரகில நெய் வடியுதெண்டாக் கேப்பாருக்கு மதியெங்கயாம். என்ன சொல்லவாறனெண்டு விளங்குதே. திருக்கணாமலையில எழிலனுக்குப் பாதுகாப்பாம்.... ஹ...ஹ பாதுகாப்போ.... தடுப்புக்காவலோ... என்ன செய்யிறது. இப்ப கைவளமில்லாம இருக்கு. இல்ல எழிலன் போற வாறடத் துக்குப் பாதுகாப்பு; ஆயித்திய மலையில அதிரடித்தாக்குதல்? பத்தியெரியிற நெருப்பை முந்தானையால மறைக்கிறாள் மடைப் பொடிச்சி. எத்தினை நிமிசம்... நடக்கும்.

அவனாரோ சொன்னமாரி நெருப்பைப் பொட்டலங் கட்ட முடியுமே. இவையட அரசியல் குழப்பங்கள் எப்படா தீருறது அவை அதைவிட்டுட்டு வந்து எப்ப படியளக்கிறது. நாண்டு கொண்டு சாகிறதெண்டாலும் தன்ர கையில ஒரு முழுங்கயிறுவேணும். ம்... இவை பாதுகாப்பு தந்து அந்தப்பாதுகாப்பில புலியள் இருக்கிற காலமே இது. 'வேலி எண்ணுவினம். பிறகு 'வேலியைச் சுத்தி நீலியப் பாம்பு' எண்டமாரி ஆரும். பாம்பின்ர பாதுகாப்பில வாழலாமே.

இந்த இலங்கை அரசாங்கத்தின்ர திருகுதாளங்கள் ஒண்டா ரெண்டா, இல்ல இண்டைக்கோ நேற்றைக்கோ. பலபக்கத்தாலும் நெருக்குப்பட்டிருக்கிற சமாதானப் பேச்சுவார்த்தையை எப்படி வெளியால கொண்டரப் போகினம். பிறகும் பாரடா சனாதிபதியா ஆரப் போடுற, பிரதம மந்திரியா ஆரைப்போடுறது எண்ட பிரச்சினையில மண்டைய உடைச்சு இன்னும் தீர்வுகண்டபாடில்லை.

உவை என்ன மகிந்தரப் போட்டிருக்கோ... உது எனக்குத் தெரியாதே. எடேய் உதுக்க இன்னும் உள் நாட்டுக்குழப்பமிருக்கடா? நீ நினைக்கிறியே உந்த எம்ஜி யாரும் ரஜனியும் மாதிரி சந்திரிகாவுக்கு இருந்த பலர் மகிந்தருக்கும் அனுராத்தம்பிக்கும் இருக்கெண்டு. உதோட தான் உவை கவுழுகினமோ தெரியாது.

அது கிடக்க என்னடா கண்காணிப்புச் செயலகத் துக்கு முன்னால சுடலை ஒண்டத் துவக்கப் போறமெண்டு கொஞ்சப் பேர் குரல் குடுக்கினயாம். மெய்தான், ஊருக்க இனி சுடலை திறக்க இடமும் வேணுமே. இவையுந்தான் என்ன அந்த நாளயில செம்மணி காணாம அரியாலைப் புளியடி புங்கடி எண்டும், மலசல கூடக் குழியளெண்டும் நிறையத்தான் துவங்கின இடுகாடுகளைச் சனம் தங்க தங்க சொந்தக்காணியளெண்டு உறுதியளோட வந்திட்டுது. ஒண்டுஞ் செய்யேலாது குடுத்திட்டினம்.

நானோ நீயோ நாலு பேர் சேர்ந்து கட்டின வரிப் பணத்தில இராணுவத்துக்குப் பயிற்சி குடுக்க வெளிக்கிட்டு இப்ப பயிற்சியெடுத்துப் போட்டு தப்பியோடின இராணுவத் தால பிரச்சினை வராதே. கதையோட கதை மறந்து போகாதை. மகிந்தற்ர குடும்பத்துக்கும், எங்கட சிறிமாம்மாட பரம்பரை அத்தப்பத்து குடும்பத்துக்கும் இடையில கிடந்து முழியுதடா. ரத்துவத்த குடும்பம் இவையும் செயிலுக்கு போய் வந்தா- எப்பிடியும் அரசியல்ல எழும்பேலாதடா, இப்ப உப்பிடித்தானே திசநாயக்காவ அடைச்சு வச்சு, எப்பிடியும் ரெண்டுவரிசம் தீட்டிப் போட்டா, இனி வேட்பாளரா நிக்கேலாமப் பண்ணிப்போட கசகரணம் போட்டவை இப்ப அவற்ர வழக்க விசாரிச்ச நீதவான் அவருக்கெதிரா வழக்கு நடத்தக்கூடிய மாதிரி ஒரு பிரச்சினையுமில்லை எண்டெல்லே சொல்லிப்போட்டா.

எட நீ உது கேள்விப்படயில்லையே தமிழருக்கும் ஒரு பிரச்சினையிருக்கெண்ட மட்டத்தில ஆர் சிந்திக்கப் போகினம். ஆடி அமாவாசைக்கு கீரிமலை, சிவராத்திரிக்கு திருக்கேதீஸ்வரம் நல்ல நாள் பெரிய நாளெண்டா நல்லூர், மடு, இப்படி சனம் போக வரப் பாதை திறக்கிறதே பெரிய பிரச்சினையாக் கிடக்கு. அதைத் திறந்துவிட்டா அரோகரா எண்டு கத்திக் கொண்டு உள்ளுக்க போட்டால் எங்கட பிரச்சினையெல்லாம் தீர்ந்தமாதிரித்தானே எண்டு சனம் நினைக்கிது. ஆனாப் பொடியா எங்கட மண்ணுக்க அவங்கட பொயின்ருகள் எண்டைக்கில்லையோ அண்டைக்குத்தான் எங்களுக்கு நல்லகாலம்.




# வல்வைப் படுகொலைகள்

## ஒருநோக்கு



தமிழீழத் தமிழினம் தமதான வாழ்வியல் உரிமைக்கான தளைநீக்கும் போரில் கண்டுவிட்ட படுகொலைகள் ஏராளம் ஏராளம். உடும்பன்குளப் படுகொலை- தங்கவேலாயுதபுரப் படுகொலை-உன்னிச்சைப் படுகொலை என கிழக்கிலே விரியும் பல படுகொலைகள் போல வடக்கிலும் வளலாய்ப்படுகொலைகள்- பிரம்படிப் படுகொலை, வல்வைப்படுகொலை எனப் பல உண்டு. படுகொலைகளின் பட்டியலைப் பாரறிய நூல்வடிவம்கொண்டது கிழக்கில் இரண்டு நூல்கள் வடக்கில் ஒன்று.

அந்த ஒன்றான வல்வைப்படுகொலைகளின் இரண்டாம் பதிப்பும் 2005 ஆம் ஆண்டு வந்துள்ளது. ஆசிரியராகக் கல்விப்புலத்துள் நுழைந்து தற்போது வட-கிழக்கு மாகாண கல்வியமைச்சகத்துள் பணிபுரிபவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ந.அனந்தராஜ் என்பவரே இந்நூலாசிரியராவார்.

உலகை உலுக்கிய இருபது நாட்கள் என லெனின் கிராட்போரை மையப்படுத்திய நூலினைப்போல வல்வைப் படுகொலைகளும் உலகை அதிர்த்த அந்த மூன்று" நாட்கள் எனில் மிகையில்லை.

தி இந்தியன் எக்ஸ்பிரஸ் (The Indian Express) தனது 1989- செப்டெம்பர் 3ஆம் திகதி வெளியீட்டில் அதன் நிருபரான ரீற்ரா செபஸ்ரியன் அவரது விசேட அறிக்கைக் கூற்றுக் கூறுகின்றது இப்படி:

வல்வெட்டித்துறை இப்பொழுது பாலைவனமாகக் காட்சியளிக்கிறது. சனத்தொகையில் அரைவாசிப்பேர் இடம் பெயர்ந்து அயற்கிராமங்களிற்குச்சென்று விட்டனர்.

50 பொதுமக்கள் கொல்லப் பட்டும் 12 பேர் காணாமற்போயும் 123 வீடுகளும் மீன்பிடி உபகரணங்களும் சைக்கிள்கள் உட்பட 50 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் எரிக்கப்பட்டும் உள்ளன. எரிக்கப்பட்ட வீடுகளில் காந்தி, நேரு, சுபாஸ்சந்திரபோஸ் போன்ற இந்தியாவின் தலைசிறந்த தலைவர்களின் படங்கள் கூட எரித்து நொருக்கப்பட்டுள்ளன.

இப்படித்தான் இந்த இந்தியப் பத்திரிகை அப்போது சொன்னது. ஆனால் நூலின் உள்ளே அந்த மூன்று நாட்களையும் எழுத்து வரிகளாகவும்-காட்சி (photo)ப்படங்களாகவும் சந்திக்கும் விழிகளில் இனம்புரிய முடியாத பல உணர்வுகள் எப்படித்தான் எழுகின்றனவோ? அது தமிழ் உணர்வின் வளம்.

ஆம் கனலும் விழியான ஒரு காலத்திலேயே உகுத்திடும் கண்ணீர்த்துளிகள் உடலெங்கும் புல்லரித்து மயிர்க்கூச்செறிய நெஞ்சம் நெருப்பாய்க் கொதித்து உலைவாயாய் மாறி நிற்க ஓராயிரம் எண்ணங்கள் எழ "எழுவாய் தமிழா எழுவாய்" என ஒரு உணர்வை ஊட்டி. இருப்பாய் தமிழா நெருப்பாய் இதுவரை இருந்தது போதும் செருப்பாய் என்ற கவிஞர் காசிஆனந்தனின் கவிதை வரிகள் வலுச்சேர்க்[illegible]ம் அளவிற்கு வீறு சேர்க்கும் நடையி[illegible] ஆசிரியர் எழுதியுள்ளமை ஒரு முன்மாதிரி.

இந்தியாவின் அமிர்தசரசில் ஜாலியின் வாலாபாக் படுகொலையின் போது ரவைகள் தீர்ந்துவிட்டன இல்லையேல் இன்னும் சுட்டுத்தள்ளி இருப்பேன் மக்களை எனக் கூறிய டயர் என்ற ஆங்கிலேய கப்ரனின் உருவம் மனக் கண்ணில் தெரிவதுபோல-

வியட்நாமின் மைலாப் படுகொலைகளின்போது ஆணையிட்ட ஜெனரல் காலிப் என்ற அமெரிக்கத் தளபதி போல இங்கு எமது வல்வை மண்ணிலும்... கப்டன் சௌத்திரி பிரிகேடியர் சங்கர் பிரசாத்- கேணல் அவுசீலா, கேணல் சர்மா ஆகியோரின் உயர்ந்து கவிழ்ந்த தோற்றம் அந்த அன்றுசொன்ன வார்த்தைகளூடாகத் தெரியத்தான் செய்கின்றது.

வல்வெட்டித்துறைச் சந்தியடி மூளாத்தீயாய் உள்ளே கனன்றுகொள்ளாது புகைந்துக்கொண்டிருக்கும் எரிமலை போலவும்....

கணபதி படிப்பகமும் நெடிய காட்டுப்பிள்ளையார் கோவிலடியும் பெரும் புயலொன்றைச்சந்தித்து மீண்டநிலையிலும்.... ஊரணி வைத்தியசாலையடியும் தீருவில் ஒழுங்கை உடுப்பிட்டி வல்வை வீதிச் சந்தியடி- வித்தனை ஒழுங்கை- புட்டணிப்பிள்ளையார் கோவில் எல்லாமாகத் தமது அன்றைய அனல் சூழ்ந்த கோர வெறித்தனத்தை அப்படியே துலாம்பரப்படுத்தி நிற்பது நெஞ்சைவிட்டகல மறுக்கும் நினைவாகிப் போனதுதான்.

**கணபதி படிப்பகமும் நெடிய காட்டுப்பிள்ளையார் கோவிலடியும் பெரும் புயலொன்றைச்சந்தித்து மீண்ட நிலையிலும்.... ஊரணி வைத்தியசாலையடியும் தீருவில் ஒழுங்கை உடுப்பிட்டி வல்வை வீதிச் சந்தியடி- வித்தனை ஒழுங்கை- புட்டணிப்பிள்ளையார் கோவில் எல்லாமாகத் தமது அன்றைய அனல் சூழ்ந்த கோர வெறித்தனத்தை அப்படியே துலாம்பரப்படுத்தி நிற்பது நெஞ்சைவிட்டகல மறுக்கும் நினைவாகிப் போனதுதான்.**

சம்பவங்களில் சரிந்து சரித்திரமானவரைத் தவிர்த்துத் தற்செயலாகத் தவறிய நூலாசிரியரின் துயரங்களைச் சொன்னது பாதி விட்டது பாதியாகவே விட்டு விட்டு...

மிஸ்டர் அனந்தராஜ்... வெரிசொரி... உங்களைத் தற்செயலாகத்தான் பிடித்துக் கொண்டுவந்திருக்கிறாங்கள்... அதற்காக மனம் வருந்துகிறேன்.... உங்களுடைய சொல்லையோ.... எல்.ரீ.ரீ யினர் இனிமேல் கேட்கமாட்டார்கள்.... எப்படியாவது நாங்கள் அவர்களை அழிக்கவேண்டும்....எனக்கேட்டதும் அதற்கான பதிலாக....நீங்கள் அவர்களை அழிக்க நினைப்பதை விட்டு விட்டு அவர்களுடன் பேசிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வாருங்கள் என ஆசிரியர் கூறுவதெல்லாம் நினைவழியா நினைவுகளேதான்.

அப்போது இந்தியப்படை சிப்பாய் ஒருவர் புலிகளால் கைதுசெய்யப்பட்டு பல நாட்களின் பின்னர் அந்த சிப்பாயை உயிருடன் தருமாறு கெஞ்சு நிலையில் அன்றைய வடமராட்சிப் பொறுப்பாளர் தீபர் கூறியது இன்னமும் மனம் கொள்ளத் தக்கதே.

இந்திய மக்களை நாங்கள் நேசிக்கின்றோம். நாங்கள் இந்தியாவிற்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் இந்திய அரசின் தவறான கொள்கையைத்தான் கண்டிக்கின்றோம். இந்த சிப்பாயை இதுவரை நாளும் எதுவித தீங்குமின்றி எங்களுடைய சகோதரன் போலவே வைத்திருந்தோம். இந்திய மக்களுடனான எங்கள் நல்லெண்ணத்தைக் காட்டவே இவரை விடுதலைசெய்கின்றோம் எனக் கூறிக் கையளித்தமை மனங்கொள்ளத் தக்கது.

அமைதிப் படைக்காலக் கொடுமைகளும் கோர நிகழ்வுகளும் மனம்கொள்ளப்பட்டநிலையில் இன்று எமது தமிழர் தம் வாழ்வியல் உரிமைக்கான வழிமுறைகட்கு தனது மாற்றமடைந்த மனதோடுவரும் இந்திய நல்லுறவை நாம் ஏற்கும் நிலையிலும் எமது கடந்தகாலத்துயர வடுக்களை தீண்டாது புண்ணுக்குப் புனுகுதடவுவது மின்றி ஒரு புதிய புரிந்துணர்வோடு நம்மைநாம் தயாராக்குவதற்கான பாடங்களாகவே இந்நூலைக்கொள்வோம்.



நூற்றுப்பத்துப் பக்கங்கள் கொண்ட இந்நூலுக்குள் 25 இற்கும் மேற்பட்ட படங்கள் மனதை நெருடும் ஓராயிரம் சம்பவங்களின் தொகுப்பாகவும் காவியத்தின் காட்சிகள் போலவும் தெரிவதுவும்- சுனாமிக் கொடுமையால் மறந்துபோன பக்கங்களை மீளத்தந்த பதிப்பாளருக்கும் நூலாசிரியருக்கும் குறைவிலா நன்றிகள்.

**வளவை வளவன்**

# சீனாவுக்கு எதிரான வியூகத்துள் அமெரிக்காவின் பிடியில் இந்தியா

அமெரிக்க-இந்திய நெருக்கம் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கின் விஜயத்துக்குப் பின்னர் அதிகரித்துள்ளதாக அமெரிக்க ஆட்சியாளரும், அமெரிக்க ஊடகங்களும் கூறிவருகின்றன. அமெரிக்க விஜயத்தை பிரதமர் ஆரம்பித்தபோது, இந்திய ஊடகங்களும் அவ்வாறுதான் பெரிதுபடுத்தி பிரஸ்தாபித்துவந்தன. இவ்வாறு இருதரப்பாலும்; பெரிதுபடுத்தப்பட்ட உறவின் முதன்மையை இந்திய கம்யூனிஸக்கட்சிகள் ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் என்றெல்லாம். குழப்பத்துக்குள்ளாக்கியதுடன், ஆளும் கட்சிக்குள் இருந்துகொண்டு அரசாங்கத்தின் அமெரிக்க நெருக்கத்தை கண்டித்துள்ளன. அப்படியாயின் இந்த உறவின் நிர்ப்பந்தம் எதுவென்பதை விளங்கிக்கொள்ளுதல் அவசியம்.

மன்மோகன்சிங்குக்கு அமெரிக்கா அளித்த வரவேற்பும் முக்கியத்துவமும் புஷ்ஷின் ஆட்சிக்காலத்தில் வேறு எந்த தலைவருக்கும் அளித்ததாகத் தெரியவில்லை. இவ்வாறு பகட்டுக்கு காட்டிக்கொள்ளாத உறவுகள் பலவற்றை அமெரிக்கா மிக இறுக்கமாகக் கொண்டிருக்கின்றது.

ஆனால், மன்மோகன் சிங்கை மட்டும் இப்படி செங்கமபளத்தில் வரவேற்று இராப்போசனத்தில் அமெரிக்க சனாதிபதியே கலந்துகொண்டு 'சியேஸ்' பெரிமிதத்தோடு பானங்களை பரிமாறிக்கொண்டதன் உள்நோக்கங்கள் அலசப்பட வேண்டியவை. அமெரிக்கர்களும், இந்தியர்களும் சர்வதேச நடிகர்கள் என்பதில் உண்மையிருந்தாலும், இந்தியர்களை எப்படி தோற்கடிப்பது என்ற நிலையிலிருந்து பயன்படுத்துவது என்ற நிலைக்கு அமெரிக்க ஆட்சியின் தந்திரம் நகர்கிறது.

அமெரிக்கர்களுக்கு இன்று போட்டியாக விளங்குவது சீனாவின் பொருளாதாரப் போட்டியாகும். அது தனித்து பொருளாதாரப் போட்டி மட்டுமல்ல

தேசச் சந்தையில் பரப்பியுள்ளது. இதில் 74 வகை துணியிலான ஆடைகளும் மீதி தாவர, விலங்குகளிலிருந்து தயாரிக்கப்பட்ட ஆடைகளும். இதே நேரம் அமெரிக்கா வெறும் ஏழு(7) வகை ஆடைகளையே புதிதாக சர்வதேசச் சந்தையில் பரப்பியுள்ளது. ஐரோப்பிய யூனியன் 2005இல் எதனையும் அறிமுகப்படுத்தவில்லை. கடந்த மூன்று மாதத்தில் சீனா 29% பாய்ச்சலை அடைந்துள்ளது.

இது சீனாவின் கடந்த பத்து ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது அதீதமானதே. 148 வகை கோட்ட முறைமைக்குள் சீனா 2-4 வீதமான சந்தைப்படுத்தல் வகையையே மேற்கொண்டுவந்தது. இதில் இன்னோர் வேடிக்கையும் நிகழ்ந்திருந்தது. அமெரிக்காவும் ஐரோப்பாவும் சீனாவிடம் இதுதொடர்பாக முறைப்பாடு செய்ததுடன், பேச்சுக்களுக்கு சென்றிருந்தது. சீனா WTO வின் 242 ஆவது சரத்தை முன்னி

பாதுகாப்பு உடன்பாடு, அணுசக்தி நாடு என இந்தியாவை அங்கீகரித்தமை, பொருளாதார, வர்த்தக உடன்பாடுகள் எனப் பலவற்றில் அமெரிக்கா விட்டுக்கொடுத்தது போன்று காட்டியுள்ளதுடன், சீனாவுக்கு சவாலாக இந்தியா வளர்வதையே அமெரிக்கா விரும்புகிறது. இதுபற்றி மன்மோகன்சிங் அமெரிக்காவில் குறிப்பிட்டது

களை எழுப்பலாம்.

ஒன்று-உலகம் இந்தியாவை அணுசக்தி நாடு என்பதை 1998 இல் இருந்து ஏற்றுக்கொண்டுவிட்டது. அமெரிக்கா ஏற்பது இல்லை என்பது எல்லாம் மன்மோகன் சிங் அரசாங்கத்திற்கு வேண்டியதொன்றாக இருக்கலாம். ஆனால் இந்தியாவுக்கு தேவை



**சீனாவுக்கு எதிராகவே உலகம் அணிதிரண்டு வருகிறது. அதில் இந்தியாவையும் இணைத்துள்ளதுடன் இந்தியாவை பயன்படுத்த அமெரிக்கா எடுத்த முடிவே இந்திய அமெரிக்க நெருக்கத்திற்கு காரணம். இரண்டு ஆசிய சக்திகளை மோதவிடுவது மேற்குக்கு இலாபமானதல்லவா? அதனையே புஷ் ஆரம்பித்துள்ளார்.**

யற்றதொன்று.

அது ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டவிடயம். பின்னர் ஏன் மன்மோகன்சிங் அரசாங்கம் புஷ்ஷின் அங்கீகாரத்தை முதன்மையாக நினைக்கிறது. தற்போது சோனியாகாந்தி ஏன் பிரதமராகவில்லை என்பதுபற்றியும் அவர் ஒரு சீக்கிய சமூகத்தை பிரதிபலிக்கும் மன்மோகன் சிங்கை பிரதமராக்கியது பற்றியும் கேள்விகள் எழுகின்றன.

ஏனெனில் இந்தியப் பிரதமர் என்பது சக்தியும் சிவனும் போன்றது. சோனியாவும் மன்மோகனும் முரண்பாடுகள் மத்தியில் ஒருமைப்பாடு ஏற்படுவதே அப்பதவியின் இன்றைய நிலை. மன்மோகன்சிங் அமெரிக்கா செல்ல ரஷ்யாவுக்கு சோனியாகாந்தி செல்லவில்லையா? என்ன ஏமாற்றுத்தனம் அரங்கேறுகிறது. இந்த இணைபிரியாத பதவி என்பது இந்திய மக்களுக்கு ஒரு முகம்

சொன்னால் "பப்பாசிக் குழலில் ராஜீவை ஏற்றினர்" அந்த உறவுமுறையைப் பயன்படுத்தி இலங்கை-இந்திய உடன்பாட்டை செய்யவைத்து ராஜீவின் முகத்தில் கரிபூச வைத்தனர் அமெரிக்கர்.

அதுமட்டுமல்ல ராஜீவின் அரசியல் வாழ்வையும் அவரது உயிர்வாழ்வையும் முடிக்க வித்திட்டவர்கள் அமெரிக்கர்கள். இதேபோன்றுதான் மன்மோகனையும் G8இல் அழைத்து கௌரவப்படுத்தினர். பின்னர் அமெரிக்கக் காங்கிரஸில் உரையாற்றவிட்டனர். செங்கம்பள வரவேற்பு செலுத்தினர். இப்படியெல்லாம் மன்மோகனை கௌரவப்படுத்துவது சீனாவிடம் இந்தியாவை பலியிடுவதற்காகவென்றே தெரிகின்றது.

மன்மோகன்சிங் அரசியலை முழுமையாகக் கற்காத அரைகுறையான அனுபவத்தை வகித்த ஒரு பொருளாதாரவாதி. ராஜீவ்காந்தியோ ஒரு விமான ஓட்டி என்பது மட்டுமே. இதனால் தெளிவாக மேற்குலகம் புரிவது அப்படி பலவீனமான தலைமையை வைத்து அரசியலை நிகழ்த்தலாம் என்பதாகும்.

அதனால் உருவாகப்போகும் இராணுவ அரசியல் போட்டியும்தான். உலகத்தின் போட்டி சீனாவுக்கும் ஏனைய அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் என்பவற்றுக்கும்தான் என்பதை பின்வரும் விடயம் ஒன்றுக் கூடாக விளங்கிக் கொள்வோம்.

உலக வர்த்தக ஒழுங்கமைப்பின் (WTO)242 ஆவது சரத்தின் பிரகாரம் ஒரு நாடு எத்தகைய வன்மையான உற்பத்திப் பொருட்களையும் சந்தைபடுத்தலாம். ஆனால் அது அந்த நாட்டின்மூலப் பொருளைக் கொண்ட உற்பத்தியாக இருத்தல்வேண்டும்.

இதன்படி அதாவது தற்போதைய சர்வதேச வர்த்தக சட்டப்பிரகாரம் (2005) இந்த ஆண்டு தைக்கப்பட்ட ஆடைகளுக்கான சந்தைப்படுத்தலில் சீனா ஜுன் மாதம்வரை 81 வகையான ஆடைகளை சர்வ

றுத்தியது. அமெரிக்கா, ஐரோப்பாவுக்கு மாற்றுவழி ஏதுமற்ற துயரம் ஏற்பட்டுவிட்டது.

எனவே சீனாவுக்கு எதிராகவே உலகம் அணிதிரண்டுவருகிறது. அதில் இந்தியாவையும் இணைத்துள்ளதுடன் இந்தியாவை பயன்படுத்த அமெரிக்கா எடுத்தமுடிவே இந்திய அமெரிக்க நெருக்கத்திற்குக் காரணம். இரண்டு ஆசிய சக்திகளை மோதவிடுவது மேற்குக்கு இலாபமானதல்லவா? அதனையே புஷ் ஆரம்பித்துள்ளார்.

சீனாவுக்கு நிகராக இந்தியாவை வளர்ப்பதென்பது இந்தியாவை சீனாவுக்கு பலியிடுவதாகவே இருக்கும். மன்மோகன்சிங் என்னதான் கூறினாலும் அமெரிக்காவின் ஆரம்பமே அமோகமாக உள்ளது.

கவனிக்கத்தக்கது.

அமெரிக்க- இந்திய நெருக்கம் என்பது சீனாவுக்கோ, ரஷ்யாவுக்கோ எதிரானதல்ல. அப்படியாயின் மறைமுகமாகவும், தந்திரமாகவும், உணர்வு பூர்வமாகவும், சீனாவுக்கும், ரஷ்யாவுக்கும் எதிரானதுதான் என்பது அர்த்தமாகும். எந்தச் சர்வதேச சக்தியும் வெளிப்படையாகக் கூறுவதற்கு உள்ளார்ந்த அர்த்தம் ஆழமானதாகவே அமைந்திருக்கும். இத்தகைய பகைக்காக அமெரிக்கா- இந்தியா எதனைக் கூறினாலும் தாங்கிக் கொள்ளும் என்பதை மன்மோகன் சிங்கின் அமெரிக்கா ஈராக்கை தாக்கிய வரலாற்றில் ஏற்றுக் கொள்ளமுடியாத விடயம் என்ற அறிக்கையாகும். இது இந்தியாவிலிருக்கும் அமெரிக்க விரோதிகளும், அமெரிக்காவிலிருக்கும் இந்தியர்களும் திருப்திப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் அதன் போட்டி காலப்போக்கில் தெரியவரும். இதில் இரண்டு விடயங்

மேற்குக்கு இன்னொரு முகமாகவே காணமுடிகின்றது.

எனவே இந்தியாவை அமெரிக்கா அரவணைப்பதென்பது சீனாவுக்கு போட்டியாகவே உள்ளதென்பது தெளிவாகிவிட்டது. இதற்கு இன்னோர் உதாரணத்தை காட்டுவதன் மூலம் விளங்குதல் சுலபம்.

1984ஆம் ஆண்டு இந்திராவை சுட்டவர்களே ராஜீவ்காந்தியை ஆட்சியில் அமரவும், அவரை தமது நாட்டுக்கு அழைத்து மகுடம் சூட்டுவதிலும் குறியாக இருந்தனர். ராஜீவ் அமெரிக்காவுக்கு சென்றபோது இருசபைகளையும் கூட்டி அதில் ராஜீவ் காந்தியை உரையாற்ற அமெரிக்கர்கள் அனுமதித்ததுடன், அதனை பெரும் கௌரவமாக கருதுமளவுக்கு ராஜீவை புகழ்ந்தனர்.

எல்லையின்றி அவரது எண்ணத்தை காற்றில் மிதக்கச் செய்தனர். ஒருவகையில்

ஐங்கரன்

இந்தியர்கள் அரசியல் லாபம் தேடுகிறவரையும் மேற்குலகத்தை தோற்கடிக்க முடியாது. மேற்குலகம் குளிர்காயும் வாய்ப்புக்களை உருவாக்கிக்கொண்டே செல்லும். ஆனால் மேற்குக்கு இந்தியாவிடமும் ஆபத்துள்ள ஒரு சந்தர்ப்பம் உண்டு. சீனாவுக்காக இந்தியாவை வளர்த்துவிட இந்தியா மேற்குலகத்துக்காக எதிர்காலத்தில் மாறும் அபாயமும் காத்திருக்கிறது. சோவியத் யூனியனுக்காக சீனாவை வளர்த்தது போலாகும். இது இந்தியாவின் புதிய தலைமைகளாலேயே முடியும். ஆனால் அமெரிக்க நிர்ப்பந்தங்களை உருவாக்கும் அரசாக இருப்பதென்பது மாறி, அமெரிக்காவே நிர்ப்பந்தத்துக்கு கட்டுப்படும் நிலை ஏற்படும்போது உருவாகும்.






எளிதில் தீப்பிடிக்கக்கூடிய எண்ணெய், எரிசாராயம் (Spirit) போன்ற திரவங்களில் உண்டாகும். தீயை அணைக்க தண்ணீரைப் பயன்படுத்தக்கூடாது. மாறாக சோப்பு நுரை போன்ற திரவங்களில் மிதக்கக்கூடிய



## தீ அணைக்க...

ஒருவகை நுரையை பயன்படுத்துவர். இத்தகைய நுரையைத் தீப்பிடித்துள்ள பகுதி முழுவதும் மறையுமளவுக்குச் செலுத்தி, தீயைக்கட்டுப்படுத்தி அணைக்க வேண்டும். அவ்வாறின்றி தண்ணீரைப் பயன்படுத்தி அணைக்க முயன்றால் எண்ணெய் எல்லா பக்கங்களிலும் சிதறி, தீ மேலும் பரவ வழிவகுத்துவிடும்.



## கண்ணாடி ஏன் உடைகிறது..?

ஒரு பொருள் மென்மை அல்லது கெட்டித்தன்மை பெற்றிருப்பதும், நொறுங்கும் தன்மை அல்லது கடினத் தன்மை பெற்றிருப்பதும் அப்பொருளின் அணுக்கள் அல்லது மூலக்கூறுகள் எவ்வாறு அமைந்துள்ளன மற்றும் பிணைக்கப்பட்டுள்ளன என்பவற்றைப் பொறுத்ததாகும்.

ஒரு பொருளின் அணுக்கள் அல்லது மூலக்கூறுகள் தமக்குள்ளே இருக்கும் பிணைப்புக்களைத் துண்டித்துக் கொள்ளாமல் இடம் பெயரும் தன்மை பெற்றிருக்குமானால் அப்பொருள் தன்மீது செலுத்தப்படும் விசையைத் தாங்கிக்கொண்டு உடையாமலிருக்கும்.

எடுத்துக்காட்டாக, உலோகத்தின் ஒரு பகுதி தகைவுக்கு (Stress) உட்படும்போது, அப்பகுதியிலுள்ள அணுக்கள் வேறிடத்திற்கு இடம்பெயர்ந்து அங்குள்ள அணுக்களுடன் இணைப்பை ஏற்படுத்திக்கொள்ளும். இந்நிகழ்ச்சி உருத்திரிவு (Deformation)எனப்படுகிறது. மூலக்கூறுகளுக்கு இடையேயுள்ள பிணைப்பு நெகிழ்ச்சித் தன்மையுடனிருந்தால் மட்டுமே இஃது இயலும்.

கண்ணாடியைப் பொறுத்தவரை அதில் பலவகைப்பட்ட அணுக்கள் அதாவது சிலிகான், உயிர்வளி, போரான், சில உலோகங்கள் ஆகியவற்றின் அணுக்கள்- மிகவும் உறுதியுடன் பிணைக்கப்பட்டுள்ளன. இவ்வணுப் பிணைப்புகள் ஏதேனும் அழுத்தத்தின் காரணமாக சிதைந்துபோனால் அவ்வணுக்கள் இடம்பெயர்ந்து மற்ற அணுக்களுடன் இணைந்து மீண்டும் பிணைப்பைப் பெறமுடிவதில்லை. எனவேதான் கண்ணாடிப் பொருள் எளிதில் உடைந்துவிடுகிறது. ஆனால் உலோகங்களையோ தகடுகளாகவும், கம்பிகளாகவும் மாற்றமுடிகிறது.




## பூமியின் ஆழம் எதுவரை..?

பூமியின் விட்டம் 12 ஆயிரத்து 800 கி.மீ அதைத் துளைத்துச் சென்று மறுபக்கம் வெளியே வரவேண்டுமானால் 12 ஆயிரத்து 800 கி.மீ தோண்ட வேண்டும். அறிவியல் தொழில்நுட்பம் வெகுவாக முன்னேறி, சந்திரனுக்குச் சென்றடைந்த இந்த காலத்திலும் பூமியை 13 கி.மீ ஆழமே தோண்ட முடிந்துள்ளது.

பூமியை சில மீற்றர் தூரம்தான் கிணறு வெட்டுவது போல் வெட்ட முடியும். அதற்குக் கீழே பூமியில் பாறைகளுள்ளன. அவற்றிக்கும் கீழே கொதிநிலையில் இரும்புக்குழப்பு உள்ளது. பூமியை சிறிது சிறிதாகத் தோண்டும்போது ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் வெப்பமும் அழுத்தமும கூடிக்கொண்டே போகும். பூமியின் மையப் பகுதி 4 ஆயிரத்து 500 செல்சியஸ் வெப்பத்துடன் கொதித்துக்கொண்டிருப்பதாகக் கணக்கிட்டுள்ளார்கள்.

எனவே இன்றைய நிலையில் பூமியைத் துளைத்துச் செல்வது இயலாதது என்று எனினும் வருங்காலத்தில் விஞ்ஞான வளர்ச்சியால் இதையும் சாதிக்க முடிந்தாலும் முடியலாம். அதற்குப் பல ஆயிரம் ஆண்டுகள் ஆகலாம்.



## மருத்துவம்




## என்றும் இளமை

வயதானால் தோல்சுருங்கும், உடல் இயக்கம் படிப்படியாக குறைந்துகொண்டே போகும். இது எல்லாம் இயற்கையான நிகழ்வுகள்.ஆனால் விஞ்ஞானம் மூலம் எதை எதையெல்லாமோ சாதித்த மனித குலம் இந்த விசயத்தை மட்டும் விட்டுவைக்குமா என்ன? அந்த வகையில் பிற்காலத்தில் தோல் சுருக்கம் உள்ளிட்ட வயதான தோற்றத்துக்குக் காரணமான அறிகுறிகளை குழந்தைப் பருவத்திலேயே கண்டு பிடித்து மாற்றிவிடலாம் என்று விஞ்ஞானிகள் குழு நம்பிக்கைதெரித்துள்ளது.

குழந்தைப்பருவத்தில் ஏற்படும் Hutchinson-Gilford progeria என்ற அறிகுறியை வைத்துக் குறிப்பிட்ட குழந்தைக்குப் பின்னாளில் தோல் சுருக்கம் போன்ற வயதான காலத்தைக் குறிப்பிடும் பிரச்சினைகள் வருமா, என்பதைக் கண்டுபிடிக்கலாம். செல்களின் புரோட்டினில் நடைபெறும் மரபணு மாற்றம் தான் இதற்குக்காரணம் என்று கருதப்படுகிறது. இந்நிலையில் புரோட்டினின் அமைப்பை மாற்றம் செய்யமுடியாது என்று விஞ்ஞானிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனினும் இந்த ஆய்வு இன்னும் ஆரம்பகட்ட நிலையில்தான் உள்ளது என்பதால் எதையும் உறுதியாகச் சொல்லமுடியாது.

ஒருவேளை விஞ்ஞானிகள் நினைப்பதுபோல நடந்துவிட்டால் மனிதர்கள் இனி மேல் வயதானாலும், தோலில் சுருக்கங்கள் எதுவுமின்றி இளமையாக இருக்கமுடியும்.



மரபுவழிக் குறைபாட்டினால் உண்டாவதாக அறிஞர்கள் கருதுகின்றனர். எதிர்காலத்தில் மரபுவழி நோய்கள் உண்டாகாமல் தடுக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட மருத்துவத்துறையே

## மரபுப் பொறியியல்

தங்களுக்குப் பிறக்கவிருக்கும் குழந்தைகள் மரபுவழிக் குறைபாடின்றி உருவாக, பல பெற்றோர்கள் மருத்துவ ஆலோசனையும், உதவியும் பெறுவது தற்போது பெருகி வருகின்றது.

அரிவாள் செல் சோகை (Sickle cell anemia) போன்ற நோய்கள் மரபுப் பொறியியலாகும். குறையுடைய மரபணுக்களை (Genes), குரோமோசோம்களில் (Chromosomes). இருந்து நீக்கி இயல்பான மரபணுக்களை பதிலுக்குப் பொருந்த முடியும் என்று அறிஞர்கள் நம்புகின்றனர்.




## புகைத்தலால் சர்வ நாசம்


புகைப்பிடிக்கும் பழக்கம் குறிப்பிட்ட அந்த நபரை மட்டுமல்லாமல் அவரைச் சுற்றியிருக்கும் அப்பாவிகளையும் பாதிக்கும். இன்னும் சொல்லப் போனால் புகைப்பிடிப்பவர்களைக் காட்டிலும் அவர்கள் வெளிவிடும் புகை சுவாசிக்கும் புகைக்கும் நபர்களுக்கு தான் பாதிப்பு அதிகம். அந்த வகையில் புகைப்பிடிக்கும் பழக்கம் கொண்ட கணவன் மார்களை கட்டிக்கொண்ட பெண்களின் பாடு திண்டாட்டம்தான். கணவன்மார்களின் புகைப்பழக்கத்தால் அவர்களின் ரத்த நாளங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, நாளடைவில் பக்கவாத ஆபத்து ஏற்படும் என்கிறார்கள் நிபுணர்கள்.

சீனாவில் இது தொடர்பாக ஒரு ஆய்வு நடந்துள்ளது. 40முதல் 70வயது வரையிலான 60377 பெண்கள் இதில் கலந்துகொண்டனர். அப்போது கணவன்மார்களின் புகைப்பிடிக்கும் பழக்கம் மற்றும் பெண்களின் உடல்நலம் பாதிப்புப் பற்றித் துல்லியமாகக் கணக்கிட்டுப் பார்த்தபோது அதிர்ச்சிகரமான தகவல்கள் தெரியவந்தன.

அதாவது புகைப்பிடிக்கும் பழக்கம் இல்லாத கணவன்மார்களைப் பெற்ற பெண்களைக் காட்டிலும் புகைப்பழக்கம் உள்ள கணவன்மார்களின் மனைவிமார்கள் பக்கவாத நோயால் பாதிக்கப்பட 47சதவீதம் கூடுதல் வாய்ப்பு இருந்தது. கணவன்மார்களின் பயன்படுத்தும் புகைப் பொருட்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க பாதிப்பு அளவும் நேர் விகிதத்தில் கூடிக் கொண்டேபோகிறது. அதேசமயம் ஏற்கனவே புகைப் பழக்கம் இருந்து பின்னர் அதைக் கைவிட்ட கணவன்மார்களின் மனைவியருக்கு அவ்வளவாகப் பாதிப்பு இல்லை.

புகைப்பிடிக்கும் அண்பர்களே...! வயது வந்த பெண்களுக்கே இந்தக்கதி என்றால் பச்சிளம் குழந்தைகள், பள்ளிப்பரவக்குழந்தைகளின் நிலைமையை நீங்களே யோசித்துப் பார்த்துக்கொள்ளுங்கள்.

## வியர்ப்பது — உணர்ச்சிகளின் வெளிப்பாடு



வியர்வை வருவதற்குக் காரணம் நம் தோலில் அமைந்துள்ள நுண்ணிய வியர்வைச் சுரப்பிகளே (Sweat glands) இவற்றின் எண்ணிக்கை பல மில்லியன் களாகும்.

இவ்வியர்வைச் சுரப்பிகள் இருவகைப்படும். அவை முறையே, எக்ரின் (Eccrine) சுரப்பிகள், அபோக்ரின் (Apocrine) சுரப்பிகள் என்பன.

இச்சுரப்பிகள் மனித உணர்ச்சிகளின் தூண்டுதல்களுக்கு (Stimuli) உட்படக்கூடியவை. முதலில் கூறப்பட்ட எக்ரின் வியர்வைச் சுரப்பிகள் மனித உடல் முழுதும் இருப்பவை. உடலின் வெப்பநிலைக்குத் தகுந்தவாறு மிகுதியாகவோ, குறைவாகவோ வியர்வையை வெளியேற்றுபவை.

அடுத்துக் கூறப்பட்ட அபோக்ரின் வியர்வைச் சுரப்பிகள் அக்குள், தொடையிடுக்கு ஆகிய உடற்பகுதிகளில் அமைந்திருப்பவை. இச்சுரப்பிகள் பேரச்சம், கடுஞ்சினம் முதலிய தீவிரமான உணர்ச்சிகளுக்கு உட்பட்டு வியர் வையை வெளிக்கொணர்பவை. நாம் அதிர்ச்சிக்கும், ஆழ்ந்த உணர்ச்சிக்கும் ஆட்படும்போது இச்சுரப்பிகள் வியர்வையைச் சுரக்கின்றன. மழை நாட்களிலும், குளிர்காலத்திலும் கூட நாம் வியர்ப்பதற்குக் காரணம் இதுவே.

# காரசாரம்

# ஏமாற்றுகிறார்கள்... ஏமாறலாமா..?

***எமது பகுதிகளில் பொருட்களின் தரம் தொடர்பான ஒரு கட்டுப்பாடு கொண்டுவருவது மிக அவசியமாக உள்ளது. இந்தத் தரக் கட்டுப்பாடு எங்களின் நுழைவாசலிலேயே தீர்மானிக்கப்படுவது அவசியமாகும். ஏனெனில், எங்களின் பொருளாதாரத்தின் பெரும் பகுதி தரமற்ற பொருட்களுக்காக இழக்கப்படுகின்றது. தரக்கட்டுப்பாடு தொடர்பான விழிப்புணர்வு ஒரு நிறுவன ரீதியாக அதாவது எங்களுக் கென ஒரு தர நிர்ணய அமைப்பு உருவாக்கப்படுவது மிக மிக அவசிய மாகும். அத்தியாவசியமற்ற பொருட்களும் தரமற்ற பொருட்களும் நிராகரிக்கப்படவேண்டிய தேவை அதிகமாகவுள்ளது. இல்லையேல் தொடர்ந்தும் எங்களை ஏமாற்றிக்கொண்டே இருப்பார்கள்.***

ஒரு வானொலிப்பெட்டியை எடுத்தால்... 'எத்தின வருசம் உத்தர வாதம் (கரண்டி) என்று கேட்கிறோம். ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை எடுத்தால்... இதேகேள்விவரும்.

இதேபோன்று உந்துருளி, சோலர், கிறைண்டர், சலவைமிசின், டெக், 'வீசிடி' என எல்லாவற்றுக்கும் உண்டு என்றால், உழவு இயந்திரம் சிறுகை உழுபொறி குவேட்டா எனப்படும் குவேட்டா லாண்ட்மாஸ்டர் ஓ... இந்த இயந்திரவகையை லாண்ட்மாஸ்ரர் நிறுவனம் அறிமுகப் படுத்தியது அறுபதுகளில் என நினைக்கிறேன்.

அந்த இனப்பொறி இப்போது வருவதில்லை என்றாலும் தற்போது வரும் அனைத்துக்கை உழுபொறிகளையும் லாண்ட்மாஸ்ரர் என்றே அழைக்கின்றனர்.

குவேட்டா லாண்ட்மாஸ்டர், 'சிபாங்' லாண்ட்மாஸ்டர் என்று எல்லா வற்றுக்கும் தன்பெயரைத்தக்கவைத்த அந்த நிறுவன வாகனங்கள் வந்த போது படித்த வாலிபர் விவசாயத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு படித்த மகளிருக்கான விவசாய நிலங்களும் இருந்தன.

இவை விசேடமாக பெண் களும் கையாளக்கூடிய உழுபொறி கள் என விளம்பரப்படுத்தப்பட்டதுடன், பெண்கள் அதைக் கையாளவும் செய்தனர். எல்லாம் பழையகதை.

இன்று புற்றீசல்கள் போலப் புறப்பட்டுள்ள இந்த இயந்திரங்களா கட்டும். உந்துருளி, வானொலிப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி என் பன சுமார் ஐந்து ஆறு வருடங் களுக்கு, முன் எமக்கு, 'வன்னி மக்களுக்கு ஏன் வடக்கு - கிழக்கு மக்களுக்கு' எட்டாத பொருட்களா கவே இருந்தன.

எனவே ஒரு பொருளின் விலை அதன் இரட்டிப்பு மடங்குக் கும் அதிகமாகவே இருந்தது என்பதுடன் 'கரண்டி' என்ற சொல் லுக்கே இடமில்லை. இந்த வகையில் ஆயீரத்து எண்ணூறு ரூபாவுக்கு வாங்கிய ஐநூறு ரூபாய் வானொலிப் பெட்டி ஐந்து நாட்கள் கூடப்பாடாமல் போனது. ஒரிஜினல் என்ற அடை மொழியுடன் வாங்கிய கைக்கடிகாரம் ஓடாமல் நின்றது. உந்துருளிகள் மட்டும் மண்ணெண்ணெய் பருக்கி, சூப்பியில் பெற்றோல் காட்டி பிளக்கை நெருப்பில் சுட்டு இத்தியாதி சித்திர வதைகளையும் பொறுத்துக்கொண்டு, சட்டிக்கலப்பை வெட்டிய வயல் நிலம் போலிருந்த வீதிகளில் முக்கி முனகி ஓடியது. இதுவும் பழைய கதை.

எல்லோராலும் அப்படிப்பட்ட உந்துருளி வாங்கமுடியாது. பணமிருந்தாலும் பொருள் இல்லை என்ற நிலை. ஆக, மிதிவண்டியில் ஓமந்தை முதல் யாழ்ப்பாணம் வரை காட்டு வழிகளில் கூட்டம் கூட்டமாகப் பயணம் செய்ததையும் அதையும் குடாநாட்டுக்குள் கொண்டுபோக பூநகரி ஜெற்ரியில் மழையிலும், பனியிலும் இரவிரவாக கொட்டக் கொட்ட விழித்திருந்ததும், பிறகு கொம்படி, ஊரியான் என்று நள்ளிர வில் நடந்து திரிந்தும் மணலில் உழவுயந்திரத்தில் சேறுபடியப் பயணஞ் செய்ததையும் கூட இப்போது நினைப்போமே.

கிளிநொச்சியிலிருந்து மடுவுக்கு காலை எட்டுமணிக்குப் புறப்பட்டு மாங்குளமூடாக றம்பைக் குளம் சந்தி அங்கிருந்து பால மோட்டையூடாக, நொச்சிக்குளம், தவசிகுளம், அப்படியே கல்மடு, இரணைஇலுப்பைக்குளம், முள்ளிக் குளம், கீரிசுட்டான், பாலம்பிட்டி, தட்சணாமருதமடு, மடு மத்தியானம் இரண்டு மணிக்கு மிதிவண்டியில் பயணஞ் செய்திருக்கிறேன். சக தமிழர்களும் அப்படியே. இதுவும் பழையகதை. இப்படி அனுபவங் களைப் பலர் சொல்லக்கூடும். இன் றைய இளைஞர்களுக்கு மலசல கூடத்தை அடைவதற்கும் உந்து ருளி தேவைப்படும்காலம் வந்து கொண்டிருக்கிறது. உந்துருளி இல்லாத வீடு குறைந்துகொண்டு போகிறது.

அண்மையில் ஒரு இளம் பெண்ணுடன் பயணஞ்செய்து கொண்டிருந்தேன். அது மல்லாவி முல்லைத்தீவு வழி. இடையில் வெவ்வேறு வேலைகளுக்காக நின்று நின்று பயணித்தோம். மல்லாவியி லிருந்து ஒரு முதியவரும் நடுத்தர வயதுப் பெண்ணும் இரு சிறுவர்களும் தனித்தனி மிதிவண்டிகளில் பயணஞ் செய்தனர். அவர்களை மூன்று இடத்தில் கடந்தோம் அப்போது அவர்களை "துலைக்கே" என்று கேட்டேன், நெடுங்கேணி என்றார்கள். என்னுடன் பயணஞ்செய்த பெண் சிரித்துவிட்டு "சைக்கிளில் இவை எப்ப போய் சேரப்போகினம்" என்றாள். அவள் எமது பிரதேசத்தைச் சேர்ந்த வள் அல்ல. எனினும் எமது பிரதேசத் தைச் சேர்ந்த இளையவர்களாலும் இப்போது இதை ஏற்கமுடிவ தில்லை. 'உதெல்லாம் பழைய கதை' என்கிறார்கள்.

இது எங்களுக்கு ஒரு பெரிய ஏமாற்றத்தைப் பின்னடை வைக் கொண்டுவந்துள்ளது. எங்கோ தொலை தேசங்களின் உற்பத்திகள் கணக்கு வழக்கின்றி எமது சந்தையில் கொட்டிக்கிடக்கின்றன. தேவையோ தேவையில்லையோ ஒரு உந்துருளி, ஒரு ரீவி, ஒரு டெக், ஒரு மிக்சி, ஒரு'வோஷிங் மெசின்' வீட்டில் இருந்தாகவேண்டும். இப்போது சர்வதேசச் சந்தையின் முகவர்கள் இங்கே பெருகிவிட்டனர்.

உந்துருளி விற்பனை யாளர்கள் மிகக் கொண்டாட்டமான விளம்பரங்களையும், கூடவே இயந்திர திருத்தகம், சுத்திகரிப்பு என அனைத் தையும் தம்முடன் இணைத்துக் கொண்டுள்ளனர். இவையெல்லாம் தமது விற்பனையின் வெளிப்பாடு மட்டுமல்ல, அவற்றின் தரத்தையும் பிறரறியாமல் தம்முள்ளேயே வைத்துக்கொள்ளும் தந்திரம்.

அண்மைக்காலத்தில் கிளிநொச்சியில் ஏன் வன்னியில் வசிப்போர் தமக்கு தேவையான முக்கிய வாகனங்களை வவுனியா வுக்கு அப்பால் கொள்வனவு செய் வதைவிட கிளிநொச்சியில் கொள் வனவு செய்வதையே விரும்புகின் றனர். காரணம் செலவு, நேரம் என்பவை மீதப்படுத்தப்படுகிறது. அலைச்சலும் குறைவு ஆக உந்துருளி முகவர்களின் காட்டில் மழை பெய்கிறது.

புதிய புதிய ரகங்களில் பெட்டிகளில் உதிரிகளாக வந்திறங் கும் உந்துருளிகளைப் பொருத்தி உந்துருளியின் வடிவத்துக்குக் கொண்டுவர இயந்திரத் தொழில் வல்லுநர்களை சொந்தமாக வேலைக் கமர்த்தியுள்ளன சில நிறுவனங்கள்:

இவர்களிடம் ஒரு வாகனத் தைக் கொள்வனவு செய்யப்புகுந் தால், மிகலாவகமாக அழகாகப்பேசி வந்தவர்களை தமது பேச்சில் லயிக்க வைத்துவிடுவார்கள்.

இப்படித்தான் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியிலும் நடக்கிறது.





விற்கும்வரை ஒருவருடம் 'கரண்டி' என்பார்கள் 'பிறீசேவிஸ்' வேறு. பில் போட்டு முடித்ததும் 'ஆறுமாதம்' என்பார்கள். 'முதல் ஒரு வருடம் என்றீகளே என்றால்' அட அது இந்த மொடலுக்கில்லை- மற்றதுக்கு என்பார்கள். வவுனியாவில் ஒரு 'சிபாங்' உழுபொறியை கொள்வனவு செய்தார் ஒருவர். அதை வன்னிக்கு கொண்டுவர அதற்கான பதிவு ஆவணங்கள் வரப் பதினைந்து நாட்கள் காத்திருக்கவேண்டிய தாயிற்று. பத்திரங்கள் வந்ததும் அதை வன்னிக்குக் கொண்டுவந்தபோது ஓமந்தை சோதனைச் சாவடியில் பொலிசாரின் பார்வையில் யந்திர அடிச்சட்ட இலக்கம் மாறியிருந்தது. தெரியவந்தது.

நல்லவேளையாக அதை அண்மையில் கொள்வனவு செய்த சிட்டை இருந்தது. அந்த சிங்களப் பொலிஸ் தாறுமாறாக ஏசி அது கள்ள வாகனம் என்றபோது அந்தச் சிட்டைக்காரர் தான் கொம்பனிக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு சொல்வதாகக் கூறி கொம்பனிக்கு அறிவித்தார். கொம்பனியின் தலைமைப்பீடம் அநுராதபுரத்தி லிருந்தது. கிளை வவுனியா. அக்கிளை முகாமையாளர் நேரடியாக வந்து இலக்கம்மாறியது தமது பிழைதான் எனக்கூறி இலக்கத்தை உரியமுறையில் மாற்றி அந்தப் பாவனையாளரிடம் சிரமத்துக்கு மன்னிப்பும் கேட்டான்.

முன்பொரு சமயம் வோக்ஸ்வகன் கொம்பனியில் ஒரு காரை ஒருவர் வாங்கினாராம். அதை அவர் ஓட்டிச் சென்றபோது வழியில் கார் நின்று விட்டது. அவர் கொம்பனிக்கு தொலைபேசியில் அதை தெரிவித் தார். கொம்பனி ஊழியர் உற்பத்தி ஸ்தாபனத்துக்கு அதை உடன் அறி வித்தார். அவர்கள் உடனே விமானத் தில் பறந்து வந்து, இரவோடிரவாக அதை சரி செய்துவிட்டு பறந்தே போய்விட்டனராம்.

சிலநாள் கழித்து வாகன உரிமையாளர் அதற்கான 'பில்லை' அனுப்புமாறு அந்த ஸ்தாபனத்திடம் கோரினார். அவர்கள் அளித்த பதில் "என்ன பில்? யார் திருத்தியது. வோக்ஸ்வானில் பிழையா? வரவே வராதே... ரோங்நம்பர்" தங்களுடைய உற்பத்தியில் தவறு வருவதே ஒரு இழுக்கு. என்றும் தவறு வரவே கூடாது என்றும் கருதிய ஸ்தாபகரின் வளர்ச்சி உலகறிந்தது. உலகப் புகழ்பெற்ற 'சொனி' நிறுவன ஸ்தாப கர் கூட இதைப்பற்றிக் கூறியுள்ளார்.

ஆனால் கிளிநொச்சியிலுள்ள முகவர்களை நம்பி பெட்டியில் அடைத்துவரும் உந்துருளி உற்பத்தி யாளர்கள் முக்காடு போடவேண்டி யதுதான். அண்மையில் ஒரு உந்துருளியை இப்படியான ஒரு விற்பனை நிறுவனத்தில் கொள் வனவு செய்தோம் நாங்கள். எல்லாப் பிழையும் பொறுத்தருள்வோம் எனத் திருவாய் மலர்ந்து விற்றார்கள்.


தரும்போதே சில பகுதி களை வைக்கவில்லை. 'கோண் அடிக்கவில்லை' என்றால் கோண் பூட்டவில்லை. கெட்லைற் எரிய வில்லை என்றால் 'பல்ப் போட வில்லை.' பிறீசேவிசுக்கு முதல் உங்களுக்கு மெக்கானிக்கல் சேவிஸ் போட்டா நல்லம் என்றார்கள். 'அப்ப போடுங்கோ' என்றால்... நீங்கள் ஆயிரத்து ஐநூறு கட்டவேணும் என்றார்கள். 'நீங்கள்தானே ஆறு மாதத்தில் எல்லாம் செய்வோம்' என்றீகளே என்றால் ஓ...ஓ... சும்மா போட்டுத்தருவம். பிரேக் நிலத்தில இடிக்கிறது செயின் பாக்கிறது காண்டில் பாக்கிறது இதுகள செய்ய லாம். என்று நிறைய குழப்பமாகக் கதைத்துவிட்டு சும்மா சேவிஸ் போடுங்கோ காணும் என்று விட்டுப் போனோம். சேவிஸ் போட்ட உந்து ருளி மூன்று கிலோ மீற்றர் போனதும் விக்கி விக்கி ஓடி முடிவில் நின்றே விட்டது.

பிறகு தனியார் வேலைத் தளத்தில் விட்டு காற்றடித்து நீரை வெளியேற்றி வயறிங் பார்த்து எடுத்து வந்தோம். இன்னும் இந்த மாதிரியான முகவர்கள் இந்த உற்பத்தியாளர் களுக்கு நன்மை தரும் நண்பர்களா? அரையுங் குறையுமாக இவர்கள் கொழுவி விற்கும் பொருட்களை தமது பணத்தைக் கொடுத்து வாங்குப வர் எப்படி பாவிக்கமுடியும். வன்னித் தமிழர்களை என்ன காஞ்ச மாடுகள் என்று நினைத்துவிட்டார்களா? கம்பில்விழ. நுகர்வோர் பாதுகாப்பு வரவர கேள்விக் குறியாகிவிட்டது. மிதி வண்டிகளின் பாவனை அறவே அற்றுப்போகுமளவுக்கு உந்துருளி விற்பனை உள்ளது. ஆனால் அதே யளவு திருத்தகங்களும் பெருகியுள் ளன.

தம்மை நம்பியுள்ள முகவர் களுக்கு போதிய கமிஷன் கொடுக் கும் உற்பத்தியாளர்களை ஏமாற்று வது மட்டுமல்ல உதிரிப்பாகங்களை மாற்றியும் எடுக்கவேண்டியதாக பூட்டிவைப்பது சரியா? என்று கேட்டுப்பாருங்கள். கொம்பனியோட வாற சாமான் உதுதான். வேற வாங் கிப் போட்டா நல்லம் என்பார்கள். அப்படி கொம்பனியால தாற சாமான் சரியில்லை என்று தெரிந்தால் ஏன் வாங்கி விற்கிறார்கள். வன்னிச்சனம் பாரிய பொருளாதாரத் தடைக்குள்ளும் வாழ்ந்து பழகியவர்கள். நூற்றைம்பது ரூபாவுக்கு மண்ணெண்ணெய் வாங்கி யவர்களும் 30 ரூபா ஒரு விலையா. என்பது போல ஒண்டையும் காணாம இருந்ததுகள். இப்ப எதைக் கண்டாலும் பாயுதுகள் என்ற கருத்து இவர்களுக்கு. நாங்கள் கவனம்.

-மாயா-



# மணப்பால்

மயூரன் இன்றைய இந்த ஞாயிற்றுக் கிழமை ஓய்வு நாளை பல வேலைக்காக திட்டமிட்டு ஒதுக்கியிருந்தான். அதில் ஒன்று, பல மாதங்களாய் அடுக்கி வைக்காத நாளிதழ்களை இன்று ஒழுங்குபடுத்தி கட்டி அடுக்கிவைப்பது என்று தீர்மானித்திருந்தான். தினம்தினம் வரும் நாளிதழ்களைப் பார்த்துவிட்டு போட்டு வைக்கும் அந்த காட்போட் பெட்டியை எட்டிப் பார்த்தார் மயூரன். தலையில் காலும், காலில் தலையுமாக ஒவ்வொரு பத்திரிகையும் குறுக்கும் நெடுக்குமாக்கிடந்தன.

சில பத்திரிகைகள் சுருட்டப்பட்டும் மடிக்கப்பட்டும் இருந்தன. இவற்றை எல்லாம் எடுத்து ஒன்றாக ஒழுங்குபடுத்தி அடுக்கி வைப்பது என்பது அவனது பொறுமையைச் சோதிக்கும் விடயம்தான் அப்பெட்டியை கவிழ்த்து அனைத்துப் பத்திரிகையையும் தரையில் கொட்டினான். அவற்றில் இருந்து வெளியேறிய தூசி அவனது மூக்குக்குள் நுழைவதை உணர்ந்துகொண்டான். தனது இடக்கையால் மூக்கையும் வாயையும் பொத்திக்கொண்டான். தூசி படலம் சற்று வளிமண்டலத்துடன் கலந்துதனது செறிவைக் குறைத்துக் கொள்கின்றது.

மயூரன் பத்திரிகைகள் வெளிவந்த திகதி ஒழுங்கில் அவற்றை அடுக்க ஆரம்பித்தான். ஒவ்வொரு பத்திரிகையையும் எடுத்து வைக்கும்போதும் அவற்றின் பிரதான தலைப்புச் செய்திகளையும் புகைப்படங் களையும் மேலோட்டமாகப் பார்த்து விட்டு அடுக்கிக்கொண்டிருந்தான். இவனது செயற்பாட்டிற்கு இடையூறு செய்வது போல் அவனது ஒருவயதுக் குழந்தை மகன் அழுதுகொண்டே இருந்தான்.

"என்னப்பா..... ஏன்? தம்பி அழுது கொண்டே இருக்கிறான்" "தூக்கும் பாப்பம்" தனது இயல்பான தொனியில் கூறினான். தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த மயூரனின் மனைவி சுகி " அவன் கதவைத் திறந்து... தன்னை வெளியில விடட்டாம்... தான் உலாத்தோணுமாம்..." பதில் கூறினாள்.

"ஒருக்கா வெளியில கொண்டு போமன்" மயூரன்கூறினார். "வெளியில கொண்டு போய் உலாத்திக் காட்டினால் பிறகு நெடுகலும் கொண்டுபோகச் சொல்லுவான்..." இது மயூரனின்மனைவி மயூரனின் குரலில் கொஞ்சம் அதிகாரம் கலக்க அப்ப பிள்ளை அழட்டும் பார்த்துக் கொண்டு இரும்..." வார்த்தையில் கோபம் கலந்து விட்டதை உணர்ந்த மயூரனின் மனைவி சுகி தொலைக்காட்சியை பார்ப்பதை இடைநிறுத்திவிட்டு தனது மகனின் அழுகையை நிறுத்தும் நோக்குடன் அவனைத் தூக்கினாள். தாய் தூக்கும்வரை தனது முழங்கால்களையும் கைகளையும் பயன்படுத்தி கதவுவரை தவழ்ந்து வந்து கதவை திறப்பதற்கு முயற்சி செய்துகொண்டு அது முடியாத நிலையில் உரக்க அழுது கொண்டு தொடர்ந்தும் முயற்சி செய்து கொண்டிருந்தான்.

தனது சுதந்திரத்திற்கு தடையாக இருக்கும் அந்தக் கதவை திறக்க இயன்றவரை போராடியவனிற்கு தாய் அணைத்து தூக்கியபோது, தனது ஆசை நிறைவேறும் என்ற நம்பிக்கையில், தாயின் முகத்தை பார்த்து அழுதுகொண்டு அந்தக் கதவை நோக்கித் தனது கையை நீட்டி அதை திறந்து விடுமாறு மொழியறியா பாலகன் சைகை காட்டினான். தாய் சுகிக்கோ அவனது ஆசையை நிறைவேற்றுவது நோக்கமல்ல, அவனது அழுகையை நிறுத்துவதே பிரதான இலக்கு. அவனது தேவை என்னவென்று தெரிந்து கொண்டும் தெரியாதவள்போல் "அப்பனுக்கு என்ன வேணும்... பசிக்குதா?..., நித்தா கொள்ளப் போறியளா?...இப்படி பல கேள்விகளைக் கேட்டு அவனது இலட்சியத்தை திசை திருப்புவதற்காக கேட்டுக்கொண்டாள். ஆனால் அவனோ தனது காலால் உந்தி எதிர்ப்பைக்காட்டி அந்தக் கதவோரம் நோக்கி தனது கையை நீட்டினான். அத்தோடு அழுகையை நிறுத்தவில்லை.

அவனின் பிடிவாதம் குறைவதாக இல்லை. உடனே சுகியின் ஞாபகத்தில் குழந்தையை ஏமாற்றுவதற்காகத் தயாரிக்கப்பட்ட அந்த 'சூப்பி' தென்பட்டது. புதிதாக வாங்கிய அந்த சூப்பியின் பொலுத்தினை உடைத்து... குழந்தையின் வாயில் புகுந்தினாள். உண்மையிலே தனக்கு உணவுகிடைத்திருப்பதாக நினைத்து அந்த வெறும் சூப்பியை சூப்பத்தொடங்கியது குழந்தை. அது தொடர்ந்து தனக்கு உணவு வருகின்றது என்ற நினைப்பில் உமிழ்வது அதன் கன்னங்கள் உட்சென்று வருவதில் இருந்து புரியக் கூடியதாக இருந்தது.

அந்தக்குழந்தை ஏமார்கிறது என்ற எண்ணத்தைவிட தனது இலட்சியம் வென்றுவிட்டது என்ற நினைப்பில் சுகி தொலைக்காட்சிக்கு முன் அமர்ந்து கொண்டாள். குழந்தை மனப்பால் குடிக்கிறதுதொடர்ந்து முயற்சித்துக்கொண்டே இருக்கின்றது. இப்போது குழந்தைக்கு நீண்டநேரம் சூப்பியும் தனது வயிறு நிறையவில்லை என்பது உணரத் தொடங்கிவிட்டது.

அந்த சூப்பியை சூப்புவதை நிறுத்திவிட்டு நாவால் தள்ளிவிட்டது. அந்த மனப்பால் குடிக்க வைத்த சூப்பி அவனது வயிற்றில் விழுந்து உருண்டு கீழே விழுந்தது. மீண்டும் அழ ஆரம்பித்தான். அதிர்ச்சி அடைந்த தாய் சுகி கீழே விழுந்த சூப்பியை எடுத்து மீண்டும் வாய்க்குள் செருகினாள். முன்பு ஏமாந்த குழந்தை இந்த முறை தனக்கு உண்மையாகவே உணவு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மீண்டும் அழுகையை மறந்து சூப்புகின்றது. தாய் தொலைக்காட்சியை நோக்கி தன் கவனத்தைத் திருப்புகிறாள். ஆனால் இந்தத் தடவை நீண்ட நேரம் குழந்தை மனப்பால் குடிக்கவில்லை. உடனேயே துப்புகின்றது. சுகி மீண்டும் எடுத்து வைக்க முயற்சிக்கின்றாள். ஆனால் குழந்தைஅனுபவப்பட்டு விட்டதனால் அவளது முயற்சி பலிக்கவில்லை. அவன் மீண்டும் கதவை நோக்கி கை நீட்டுகின்றதுமட்டுமல்ல அழத் தொடங்கியும்விட்டான்.

சுகிக்கு புதிய உத்தி வகுக்கவேண்டி நிர்ப்பந்தம் அப்போது தான் வர்ணயாலம் போடும் தொலைக்காட்சி ஞாபகம் வந்தது. அந்த வர்ணயால ஒளிப்படத்தையும் தடபுடலான சங்கீதச்சத்தத்தையும் குழந்தைக்கு காட்டினாள். "இஞ்ச பாருங்கோ அண்ணாமார் எல்லாம் ஆடுகினம் விளையாடுகினம் ...எங்க தம்பியும் ஆடுங்கோ பாப்பம். எங்க துள்ளுங்கோ..." தனது மடியிலே குழந்தையை வைத்து அந்த தொலைக்காட்சிப் படத்தை காட்டினாள். அதிர்ச்சியூட்டும் சத்தமும் அடிக்கடி மாறும் வர்ணயாலங்களிலும் குழந்தை தன்னை மறந்து தனது இலட்சியத்தையும் மறந்து இரசித்துக் கொண்டிருந்தது. தாய் சுகிக்கு தனது நோக்கம் நிறைவேறுகின்றது என்ற பெருமிதம். ஆனால் மனதுக்குள் குழந்தை மீண்டும் பழயஞாபகம் வந்து அழத்தொடங்குமோ என்ற பயம். என்னதான் வர்ணயாலம் காட்டியும் எவ்வளவு நேரம் தான். குழந்தை மனம் ஏமாந்து போகும்.

பத்திரிகைகளை அடுக்கிக் கொண்டிருந்த மயூரனின் முகத்தில் ஒருவித கோபம் கலந்த சலிப்பு. அவன் வாசித்த பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகள் கடந்த காலங்களை நினைவுபடுத்தின. சமாதான காலத்துக்குள் தமிழ் மக்கள் எவ்வாறெல்லாம் ஏமாற்றப்பட்டுக் கொண்டு வருகினம். அவன் சலிப்பை பொருட்படுத்தாமல் தனது வேலையைத் தொடர்ந்தான். தனது மகன் அழும் சத்தம் அவனது காதில் கேட்டுக் கொண்டிருந்தது.

இனி என்ன செய்வதென்று தெரியாமல் மகனைத் தூக்கிக்கொண்டு நடந்த சுகிக்கு தனது முதல் இருபிள்ளைகளும் வீட்டின் ஓர் மூலையில் கோயில் கட்டி விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டாள்.

உடனே தனது கையில் இருந்த குழந்தையை அவர்களின் அருகில் கொண்டு சென்று "இஞ்சேராப்பன் நீங்கள் கோயில் கட்டி விளையாடுற இடத்தில இவையள் விளையாடுகினம்..." "ம்ம்.... விடாதேயுங்கோ. அடியுங்கோ ஆஆ... அடியுங்கோ" குழந்தை முயற்சிக்காத போதும் சுகி தூண்டினாள். சகோதரங்களுக்கிடையில் ஒரு சகோதர மனப்போரைத் தூண்டிவிட்டால் சுகி சகோதரகளுக்கு இடையில் ஆரம்பத்தில் இழுபறி நிலவியபோதும் நீண்ட நேரம் நீடிக்கவில்லை.

சுகியின் திட்டம் படு தோல்வி. ஏதாவது உண்ணக் கொடுத்து அவனது வயிற்றை நிரப்பி ஒருவகை மந்த மயக்கத்தை உருவாக்கித் தாலாட்டுப்பாடியேனும் மகனை நித்திரையாக்குவது எனத் தீர்மானித்துக்கொண்டாள். அளவுக்கு அதிகமாக உணவருந்தாத போதும் அவளது தாலாட்டின் வசைப்படுத்தலால் குழந்தையின் விழிகள் பாதி உறக்கத்தில் சென்றபோதும். நீண்ட நேரம் நீடிக்கவில்லை.

குழந்தை இப்போது மீண்டும் கதவைக் காட்டிக் காட்டி அதை நோக்கி தவள்ந்து நகர்ந்து முன்னேறியது சுகிக்கு சினம்

சாரங்கன்

பிடித்தது. இவனை எவ்வாறு அடக்குவது எனப் புரியவில்லை. என்னதான் அவன் முயன்றாலும் கதவைத் திறப்பதில்லை என்ற முடிவுக்கு மாற்றம் கொண்டுவர விருப்பமில்லை.

இப்போது அவள் கதவைத் திறக்காமல் இந்த யன்னல் ஊடாக வெளியாலே காட்டுவோம் என்ற எண்ணத்துடன் அவனை யன்னல் அருகில் தூக்கி வந்தாள். அந்த யன்னல் கம்பிகள் ஊடாக வெளியே போக முடியாது என்ற நம்பிக்கை அவனுக்கு அந்த யன்னல் ஊடாக "இஞ்சா.... மரங்கள்.... கிளிகள்.... புறாக்கள்... மாடுகள்...." தனது செல்ல மகனுக்கு காட்டிக் கொண்டிருந்தாள் அந்த இயற்கை அழகை இரசிக்கும் போது அழுகையை மறந்து விட்டான்.

அவனுக்கும் அந்த கிளிகள் போல், புறாக்கள் போல்... மாடுகள் போல் சுதந்திரமாக சுற்றித்திரிய ஆசை. ஆனால் அந்த யன்னல் கம்பிகள் அவனை வெளியேவிட மறுத்தன. அந்த இடைவெளிகள் ஊடாக கையும் காலையும் வெளியே செலுத்தி அந்த சுதந்திரக் காற்றை இயன்றவரை அனுபவிக்க முயற்சிசெய்தான் முடியவில்லை. இடையிலே யன்னலைவிட்டு இறங்கி கதவை நோக்கி நகர்ந்தான், சுகிக்கு மீண்டும் தலை விறுவிறுத்தது. அவனைத்தடுப்பதற்காக எழுந்து செல்கின்றாள்.

அப்போது தொலைபேசி அழைத்தது. திரும்பிச்சென்று தொலைபேசியை எடுத்து... "ஹலோ....ஹலோ...." அது நான் 'குலம் பேசிறன் நான் இப்ப உங்கட வீட்டை தான் வந்து கொண்டிருக்கிறன், இன்னும் பத்து நிமிசத்தில உங்க வந்திடுவம் அதுதான் சொல்ல எடுத்தனான்...." "ஓம் ஓம்...வாங்கோ... வாங்கோ...." பதில் கூறி வைத்தாள் சுகி.

குலம் வெளிநாட்டில் வசிக்கிறான் சுகியின் அண்ணன் இரண்டு நாட்களுக்குமுன் இங்கே வந்திருந்தான். இப்போது தனது சகோதரி வீட்டிற்கு வந்து கொண்டிருக்கிறான் அதைத்தான் தொலைபேசியில் எடுத்துச் சொல்லியிருந்தான் குலம். தங்கச்சி சுகிக்கு நல்ல உதவி செய்யிறவன். "நான் காசனுப்புவன் பிள்ளையளை ஒரு குறையுமில்லாமல் பார்த்துக் கொள்ளவேணும்" என்று கண்டிப்பான உத்தரவு போட்டிருக்கிறான்.

சுகிபடபடத்தாள். அழுது அழுது சோர்ந்து போய் இருந்த தனது மகனை அழைத்துச் சென்று முகம் கழுவி தலையிழுத்து பவுடர் போட்டு ஆடைமாற்றி புதுப் பொலிவாக்கினாள். குழந்தை எதை செய்த போதும் கதவைக் காட்டி அழத்தொடங்கியது, வேறு வழியின்றி கதவைத் திறந்து வெளியே கொண்டுபோனாள் சுகி குழந்தையை. அது சுதந்திர வானில் மிதக்க ஆசைப்பட்டது.

வெளிநாட்டில் இருந்து வந்த குலம் மாமாவும் வந்து சேர்ந்தார். குழந்தை பொலிவுடன் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். தனது தங்கை குடும்பத்திற்கென கொண்டுவந்த பொருட்கள் ஒரு தொகைப் பணம் எல்லாவற்றையும் கொடுத்தார். கலந்து மகிழ்ந்தார். வெளிநாட்டு மாமா போனவுடன் தான் மீண்டும் கதவு பூட்டப்பட்டு வீட்டுக்குள் அடைக்கப்பட்டு விடுவேனோ என்ற ஏக்கம் காணப்பட்டது, குழந்தையின் முகத்தில்.

பத்திரிகைகளை அடுக்கி முடித்த மயூரன் "என்னப்பா.... பேரினவாத அரசியலைப் பார்த்தா இப்பிடி குழந்தையை ஏமாத்தப் பழகினனீர்" கேட்டான். புன்சிரிப்புடன் அண்ணன் கொண்டு வந்த அன்பளிப்புப் பொருட்களைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள் மயூரனின் மனைவி சுகி.

# சிந்தனை முடிச்சுகள்..!

**அப்துல் ரகுமான்**



புதுக்கவிதை புரிவதில்லை; புதிர் போல் இருக்கிறது. இது சிலருடைய குற்றச்சாட்டு. இந்தக் குற்றம் சாட்டிகள் தம்மை அறியாமல் ஓர் உண்மையை அம்பலப்படுத்தியிருக்கிறார்கள்.

அதாவது:-

புதிர்கள்- விடுகதைகள்-கவிதைகள்.

ஆம்; உலகின் எல்லா மொழிகளிலும் மிகப் பழமையான கவிதைகள் விடுகதைகளே.

விடுகதைகள் வெறும் முன்னிரவு நேரத்து விளையாட்டல்ல அவை அறிவின் அறைகூவல்கள்; சிந்தனையின் சாகசங்கள்; கற்பனையின் ருதுமங்கலங்கள்; வாழ்க்கையின் வாசனைகள்.

விடுகதைகள் பிள்ளைகளுக்கு நடைவண்டிகள்; பெரியவர்களுக்கு ஊன்றுகோல்கள்; பாமரர்க்குப் பாடப் புத்தகங்கள்; படித்தவர்களுக்கு கைவிளக்குகள்.

பழங்குடி மக்களுக்கு இன்றைக்கும் சர்வகலாசாலையும் சத்துணவும் விடுகதைகளே.

வேதங்களில் எல்லாம் விடுகதை முடிச்சுகள் இருக்கின்றன. அந்த முடிச்சுகளை அவிழ்க்கத் தெரிந்தவர்களுக்குப் பிரபஞ்ச ரகசியங்கள் அறிமுகமாகின்றன.

சரித்திரம் விடுகதைகளின் சாதனைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

சிங்கத்தை வெறுங் கையால் வீழ்த்திய வீரன் சாம்சன் தன் விரோதிகளை வெல்ல விடுகதையைத்தான் ஆயுதமாக எடுத்தான்.

அராபிய அரசி ஷீபா, சாலமோனின் ஞானத்தை விடுகதைகளால்தான் அளந்து பார்த்தாள்;

உலக மகா கவிஞர்கள் ஹோமரும் காளிதாசரும் விடுகதைகளை விடுவிக்க முடியாமல் போனதற்காக உயிரையே துறந்திருக்கிறார்கள்.

அக்காலத்தில் சில இனங்களில் விடுகதைகளே திருமணங்களை நிச்சயித்தன. அரசர்களை விடுகதைகளே தேர்ந்தெடுத்தன.

தூங்கும்போதும் மனிதன் விடுகதைகளைப் புனைகிறான். அவற்றைத்தான் நாம் கனவுகள் என்கிறோம்.

எகிப்திய கிரேக்கப் புராணத்தில் ஸ்பிங்ஸ் (Sphinx) என்றொரு மிருக தேவதை எதிர்ப்பட்டவர்களிடம் புதிர்கள் போடுமாம்; விடுவிக்க முடியாதவர்களை விழுங்கி விடுமாம்.

வாழ்க்கையும் ஒரு ஸ்பிங்ஸ்தான். அதன் புதிர்களை விடுவிக்க முடியாதவர்களை அது விழுங்கிவிடுகிறது.

புதுக்கவிதைகளுக்கும் இந்தப் பழங்கவிதைகளுக்கும் பல ஒற்றுமைகள் உண்டு.

'ஒன்றை மற்றொன்றால் கூறுவது' என்பதுதான் கவிதையின் ஆதார உத்தி. முன்பு உவமை உருவகம் இப்போது படிமம், குறியீடு- இவைகளுக்கெல்லாம் அடிப்படை விதி இதுதான்.

விடுகதையும் புதுக்கவிதையும் இந்த உத்தியைத்தான் கையாளுகின்றன.

ஒற்றை மற்றொன்றால் ஏன் கூடவேண்டும் என்கிறீர்களா? மனிதமனத்தின் இயல்பான செய்கை இது விடுகதையும் மறைத்துச் சொல்கிறது; புதுக்கவிதையும் மறைத்துச் சொல்கிறது. ஏன் மறைக்க வேண்டும் என்கிறீர்களா? பல காரணங்கள்.

மறைக்க வேண்டியதை மறைத்துத்தான் ஆகவேண்டும். நிர்வாணம் ஆபாசம்; ஆடை அணிவதுதான் அழகு. மேலும் மறைப்புத்தான் ஆர்வத்தை உண்டாக்கும்; நிர்வாணமல்ல.

மறைப்பதிலும் மறைந்திருப்பதைக் கண்டுபிடிப்பதிலும் மனிதனுக்கு ஏற்படுகிற மகிழ்ச்சி இருக்கிறதே அது அற்புதமானது.

மேலும் மறைப்பு என்பது உண்மையில் மறைப்பு அல்ல திறப்பு. அதனால் ஒரு பொருள் நன்றாகத் திறந்து காட்டப்படுகிறது: அருகில் கொண்டுவரப்படுகிறது. உருவகம், அதைவிடச் சிறப்பாகப் படிமம், குறியீடு இதைத்தான் செய்கின்றன.

இன்னும் செறிவான, குறுகிய வடிவம், அவசியம் நேர்கிற போது சந்தக் கட்டை மீறுவது ஆகிய குணங்களாலும் விடுகதையும் புதுக்கவிதையும் சகோதரர்கள் ஆகின்றன. மரபுக் கவிதைகளில் காணமுடியாத, புதுக்கவிதையில் மட்டுமே காணப்படுகிற புதுமையான படிமங்கள் விடுகதைகளில் காணப்படுகின்றன.

மாதிரிக்குச் சில:-

**நட்சத்திரம்** - அப்பா பணம்
**வானம்** - அம்மா புடவை
**சூரியன்** - செங்கால் நண்டு
**தீக்குச்சி** -சண்டைக்காரன்
**குடை** - கம்பியில் முளைக்கும் கறுத்த காளான்
**நாக்கு** - கோட்டைக்குள் மறைந்திருக்கும் வேட்டைக்காரன்
**தேள்** -மின்சாரப்பைக்காரி
**மல்லிகைப்பூ** -தயிர்ச் சோறு
**மின்னல**- ஓடும் விளக்கு.

சில படிமங்களின் புதுமையும், வெளியீட்டு முறையும் வியப்பை ஊட்டுகின்றன.

உயிரை ஓயாமல் உறிஞ்சும் பூச்சி **(கடிகாரம்)**
வெள்ளாமையைத் தின்றுவிட்டுப் போகும் முட்டாள் **(எமன்)**
ஊரூராக ஓடித் திரிந்து ஒருவனையே கைப்பிடிப்பவள் **(கடிதம்)**
ஓரகப்பை மாவாலே ஊரெல்லாம் கலியாணம் (நிலா)
ஒத்து வாழும் ஒளியும் இருளும் (நரை கலந்த மயிர்)
கிணற்றைச் சுற்றிக் கறுப்புப் புல் **(இமை)**
நரைத்த கிழவி குதித்து ஓடுகிறாள் **(புகை)**
காட்டில் கள்ளன் கயிறு திரிக்கிறான் **(கட்டெறும்பு)**

'ஒரு நெல் குத்தி, வீடெல்லாம் உமியாச்சு' என்று சுடரின் வெளிச்சத்தை வருணிக்கும் விடுகதையை நான் அடிக்கடி நினைத்து வியப்பதுண்டு. படிம வாதிகளையே பெருமூச்சு விட வைக்கும் அற்புதமான படிமம் இது.

புதுக் கவிதைக்கே உரிய வினோதமான சர்ரியலிஸப் படிமங்களும் விடுகதைகளில் ஏராளமாக உண்டு.

**உச்சியில் பச்சைத் தோகை**
**உள்ளங்காலில் ரோமம் (கரும்பு)**
**அழகாக ஓடியாடும்**
**குழந்தை. களைப் பெற்றுவிட்டு**
**அத்தனையும் இழுத்து**
**விழுங்குபவன் (கடல்)**
**ஒருசாண் உடம்பு**
**உடம்பு நிறைய பற்கள் (சீப்பு)**
**தன்னைத் தானே விழுங்கும்**
**விளக்கு (மெழுகுவர்த்தி)**

புதுக்கவிதைக் காலத்துப் படிமப் பார்வை விடுகதைக் காரர்களுக்கு- அதுவும் பழங்காலத்திலேயே எப்படி வாய்த்தது?

புலவர்களுக்கு தோன்றாத அற்புதமான, புதுமையான படிமங்கள் பாமரர்களுக்கு எப்படித் தோன்றின?

பாமரர்களால்தான் கவிதை எழுத முடியுமோ?

## புலரியின் ஆதங்கம்

கலை இலைக்கிய சமூக இதழாக வெளிவந்துகொண்டிருக்கும் புலரி சஞ்சிகையின் சித்திரை-ஆனி இதழ் குறித்து 22.07.2005 அன்றைய வெள்ளிநாதத்தின் இலக்கியப்பகிர்வுப் பகுதியில் வெளியான இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் அவர்களின் விமர்சனக் கட்டுரையானது எம்மைப் பெரும் அதிர்ச்சிக்[illegible] உள்ளாக்கியுள்ளது.

[illegible]மிழர் தம் ப[illegible]பாட்டுத்[illegible] நின்று, வாழ்வியல் அவலங்களில் வளர்ந்து, போராட்டத்தின் நியாயத்தை மதித்து கலை இலக்கிய உந்தலால் வெளிப்பட்ட புலரி சஞ்சிகையையும் அதன் கருத்து நிலையையும் கேள்விக்குள்ளாக்கி சஞ்சிகையின் வெளிப்பாடுகளை ஆபத்தான தளத்தோடு தொடர்புபடுத்தும்வகையில் வெளிப்பட்டுள்ள மதிப்பிற்குரிய விமர்சகரின் கருத்துக்களால் வேதனையடைந்துள்ள நிலையில் எமது ஆதங்கத்திற்கான காரணங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

புலரி சஞ்சிகையின் மூன்று இதழ்கள் வெளிவந்துள்ள நிலையில் அரசியல் ரீதியாகவும், கலை இலக்கிய ரீதியாகவும் எமது கருத்து நிலையின் உறுதியான பார்வைக்கு வெளிவந்துள்ள மூன்று இதழ்களிலும் உள்ள படைப்புக்களே சாட்சியாக உள்ளன. அட்டைப் படத்திலிருந்து உள்ளடக்கத்தின் ஒவ்வொரு அம்சமும் தெளிவான சிந்தனையுடனேயே பிரசுரிக்கப்பட்டுள்ளமையை இங்கு குறிப்பிடவிரும்புகின்றோம்.

அரங்கக் கூத்தனின் கட்டுரையும், துணைவியூரானின் பக்கத்து வீட்டு விருந்து என்ற உப தலைப்பின் கீழான கட்டுரையையும் மையப்படுத்தி நோக்கியுள்ள விமர்சகர் அக்கட்டுரைகள் தமிழர் தம் கலை-இலக்கிய வடிவங்களை குறைத்து மதிப்பிட்டுள்ளதாக கருதியுள்ளமை வேதனைக்குரியது. மேற்கூறப்பட்ட இரு கட்டுரைகளும் யுத்தம் தளர்ந்துள்ள சூழ்நிலையில் பிற அரங்கச்செயற்பாடுகளின் வருகைகள் தமிழர் தம் அரங்கச் செயற்பாடுகளில் பொருத்தமான புதிய விடயங்களை உள்வாங்கும் தூண்டலை வெளிப்படுத்தும் என்றவகையில் உணரப்பட்டே பிரசுரிக்கப்பட்டன. ஈழத்தமிழர்களின் நாடக முயற்சிகளையும், அதன் வெளிப்பாடுகளையும் அவை கொச்சைப்படுத்தியுள்ளதாகவும் தெரியவில்லை. அதே வேளை மதிப்பிற்குரிய விமர்சகர் குறிப்பிட்டுள்ளது போன்று போராட்டக் காலங்களில் உயிர்ப்போடும், அர்ப்பணிப்போடும் தொழிற்பட்ட கலைஞர்களை குறைத்து மதிப்பிடுவதற்கு எவருக்கும் அருகதை கிடையாது. தமிழ்த் தேசிய உணர்வை மதிக்கும் எமது சஞ்சிகையிலும் அத்தகைய தாழ்ந்த கட்டுரைகளை வெளியிட வேண்டிய அவசியமும் இல்லை. அதற்கான களமாக புலரி அமைந்ததுமில்லை.

உண்மையில் இலக்கியத் தாக்கத்தால் உந்தப்பட்டு தமிழ் உணர்வோடு புலர்ந்த இச் சிற்றிதழை மதிப்பிற்குரிய விமர்சகர் தமிழர் தம் அடையாளத்துக்கெதிராக கருதியுள்ளமை திறந்த மனதுடன் மனச்சாட்சிக்கு நேராகச் செயற்படும் எமக்கு மன உளைச்சலையும், வேதனையையும் அழித்துள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். அதேவேளை தமிழ்த் தேசியக் குரலாய் செயற்படும் ஈழநாதத்தின் வெள்ளிநாத இலக்கியப்பகிர்வு பகுதியின் கனதியான செயற்பாடுகளையும் நினைவில் கொள்கிறோம்.

*ந.குகபரன்*

## எனக்குள்

எனக்குள்...ஓர்
புரியாத
தியானம்
வறுமையின்
ஆக்கிரமிப்பும்
புதிய பிறவிக்காய்
நாளும்... நான்
புதியவனாகின்றேன்.

ஏதோ...
வாழ்வின் எல்லை அதை
சென்று
மீள்வதாய்
நிதர்சனம்
என்னுள் புகுந்து
மீள்கிறது
சத்தம் செய்யாமல்.
மரணரசத்தை
காலக்கோப்பையில்
பருகக்கொடுக்கும்
உடன் பிறப்புக்களின்
புதிய வடிவம்
எத்தனையோ...
... புருட்டிஸ்சுகள்

இன்று எம் தியாக
பூமியில்
யூலியசீசர்களின் வரவை
ஏதிர்பார்த்து

ரமணன்

## ஓ... எனக்காகவே...

உறவுகள் பிளவுண்டு
முகவரிகள் தொலையுண்டு
தன்னந்தனியாக
அறிமுகமில்லாத ஊரில்
நட்பில்லா நகரில்
நானும் நடக்கின்றேன்...
முகங்கள் பார்ப்பதில்லை
வுாழ்த்துக்கள் சொல்வதில்லை
ஆன்பை உணர்வதில்லை-அதன்
ஆதாரம் புரிவதில்லை
அற்ப நம்பிக்கையும் அற்றுப்போக
ஆதாரம் இல்லாச் செடியாய்
அலைக்கழிகின்றேன்.
என் பற்றுறுதி -கருமேகத்தால்
மூடப்பட் சற்றும் துணிவின்றி
எதற்கும் அச்சம்...
இளமையின் கனவுகள்
கருகிச் [illegible]ல்ல
இதயம் மரத்ததாய்
இன்பம் மறந்த வாழ்வு
புன்னகை பூத்த இதழில்
பூட்டுப்போடப்பட்டதாய்
கண்களின் கவர்ச்சிகள் களவாடப்பட்டதாய்
என் கசந்த வாழ்வு தொடர்கின்றது...
முதுமை முறிக்கும்
தனிமைச்சுமை
என் பொலிவைக்குறைத்துவிட்டது -என்
கெட்டிக்காரத்தனமும் செயலற்றுவிட்டது...
முடிவுகளைக் காணாத மூச்சுக்கள் தான்
என்னோடு மிஞ்சுகிறது.

ஆ. சுதர்சிகா

## சொற்சிலம்பம் - 98

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ச | ப் | டி | ம் | ன் | தூ | பூ |
| டு | கு | ல் | பா | ந் | மி | சி |
| க | ரி | தி | கோ | னி | ணி | வ |
| ஞ் | னா | ப | லி | னை | சீ | இ |
| மு | ட் | தா | ஷ் | ர் | லி | கை |
| ற் | ர் | யா | க் | ஸ் | க | வு |
| ங் | வ | யோ | ன் | கி | த் | ஆ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -96 இன் விடைகள்

01. மார்க்கோணி.

02. பூனை.

### சொற்சிலம்பம் - 96 இன் பரிசுக்குரியவர்

வி.சுஜிகரன், தரம்-5C
மு/ஸ்ரீசுப்பிரமணிய
வித்தியாசாலை,
புதுக்குடியிருப்பு.

### சொற்சிலம்பம் - 96 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ர.ஜெகதீபன், யா/அல்லைப்பிட்டி, பராசக்தி வித்தியாலயம், அல்லைப்பிட்டி.
02. ஞா.ஞானடிக்ஷன், தரம்-3, 635/7யூனிற், கல்மடு.
03. வீ.ரதீபன், வசந்தநகர், திருமுறிகண்டிவித்தியாலயம்.
04. த.தனுஷா, செந்தளிர் சிறுவர் இல்லம், வள்ளிபுனம்.
05. பா.லினோசிகா, கற்சிலைமடு, அ.த.க.பா, ஒட்டுசுட்டான்.
06. இ.புவிகரன், ஸ்ரீசுப்பிரமணியவித்தியாசாலை, புதுக்குடியிருப்பு.
07. ச.கி.ஜெயந்தி, முருங்கன் பிட்டி, முருங்கன், மன்னார்.
08. செ.நிசாந், பாண்டியன்குளம் ம.வி, நட்டாங்கண்டல்.

01. அண்மையில் விண்ணுக்குச் சென்ற விண்வெளி ஓடத்தின் பெயர்?

01) ..................................

02. தமிழீழத்தில் கடல் இல்லாத மாவட்டம்?

01) ..................................

சொற்சிலம்பம்-98
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

பெயர் :- ..................................

முகவரி :-..................................

..................................

..................................

## கைவண்ணம்




த். தனுஷா,
தரம்–08B,
செந்தளிர்
சிறுவர் இல்லம்.




தண்ணீர் ஒரு தனி உலகம். அந்த உலகிலும் எத்தனை எத்தனையோ உயிரினங்கள் வாழ்கின்றன. அந்த உயிரினங்களில் மீன்களுக்கு ஒரு தனி இடம் உண்டு. மீன்கள் கூட்டத்தில்தான் எத்தனை வகைகள்; சாதுவான மீன்கள், மூர்க்கமான மீன்கள் என்றெல்லாம் பல பிரிவுகள். மூர்க்கமான மீன் வகைகளில் ஓரினம்தான் ஓநாய் மீன்.

# ஓநாய் மீன்

ஓநாய் மீனிற்கு இரண்டு கூரிய முன் பற்கள் உள்ளன. இரத்தக் காட்டேரி எனும் டிராகுலாவிற்கு இரு கூரிய முன்பற்கள் இருப்பதுபோலிருக்கும். இம்மாதிரிப் பற்கள் இரைகளைக் குத்திக் கிழித்து உண்பதற்கு வசதியாக ஓநாய்களுக்கு உண்டு. அதேபோல் பற்கள் இதற்கும் அமைந்திருப்பதால்தான் இதற்கு ஓநாய் மீன் என்ற பெயர் வந்தது. இதன் விலங்கியல் பெயர் பெர்சி∴போர்மெஸ் **(PERCIFORMES)** அனார்ஹிசாடிடே குடும்பத்தைச் சேர்ந்தது.

ஓநாய் மீன்கள் வடகோளப் பகுதியிலுள்ள குளிர்நீர்க் கடல் பரப்பில் வாழ்பவை. இவை 90 செ.மீ முதல் 180 செ.மீ நீளம் வரை இருக்கும். மங்கல் நிறமுடையவை. அதன் பக்கவாட்டில் இருண்ட பட்டைகள் பல இருக்கும். இதன் உணவு நத்தைகளும், ஆழ்கடல் பரப்பிலுள்ள நண்டுவகைகளை தன் பற்களால் கிளறி எடுக்கிறது. வாயின் பின்னாலுள்ள வலிமையான பற்களால் அவற்றின் ஓட்டை நொறுக்கி உண்கிறது.



ஓநாய் மீன் இனங்களில் அட்லாண்டிக் ஓநாய் மீன் குறிப்பிடத்தக்கது. இந்த இனம் 120 முதல் 180 செ.மீ நீளம் வரை வளரக்கூடியது. இதன் முகமே பார்த்தவர்களைப் பயப்பட வைக்கும். நீலச் சாம்பல் அல்லது காவி நிறமுடையது. இந்த மீன் உணவிற்காக இதை பெருமளவு பிடிக்கிறார்கள்.

## விடுகதைகளும் விடைகளும்


01. காம்பு இல்லாத காய் - அது என்னகாய்
02. ஒரு கிணற்றில் ஒரே தவளை- அது என்ன?
03. எட்டாத ராணியாம் இரவில் வருவாள் பகலில் மறைவாள்- அவள் யார்?
04. கொக்கு நிற்க நிற்க குளம் வற்ற வற்ற-அது என்ன?
05. கூடவேவரும்; உதவி செய்யாது- அது என்ன?

**விடைகள்**

01. பொரிவிளாங்காய்
02. நாக்கு
03. நிலா
04. விளக்கு
05. நிழல்

## நாய் வால்

பகுதி-04




நன்றி:- பன்டேடைம்ஸ்

(முற்றும்.)

# வீடு

வாழ்க்கை என்பது வாழ்வதற்கே. மற்றவர்களைப்போல நாங்களும் இப்படியே வாழ்ந்து விட்டுப்போவோம் என்று நினைப்பது தவறு. எண்ணங்களே செயல்வடிவம் கொடுக்கின்றன. எண்ணங்களை உறவாக்கி செயல்படுத்துவோம். நாம் அனைவரும் நல்லதையே நடக்கவேண்டும் என்று நினைக்கின்றோம் தப்பில்லை.

"அந்த ஆசிரியர் நல்லா படிப்பிப்பாரா?"

"இந்த உடுப்பு நல்லா யிருக்கா?"

"அந்தப் பூச்சாடி வடிவாயிருக்கா?"

"சாப்பாடு எப்படி நல்லா யிருக்கா?"

இப்படியாக நாம் அன்றாடம் நல்லவற்றையே கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அது எதனை உணர்த்துகிறது என்றால் நல்ல வார்த்தைகளை நாடுவதையே.

நம் செயல்கள், நம்மை சார்ந்தவர்கள், எங்களைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் ஒவ்வொன்றும் நல்லதையே செய்யவேண்டும் என நினைக் கின்றோம். அவ்வாறு நடப்பதால் உடல் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுகிறது. அதேபோல் நாம் நினைப்பதையும் நல்லவையாக நினைத்துச் செயல்பட்டால் உள்ளமும் உற்சாகம் பெறும்.

நம்முடைய ஒவ்வொரு அசைவிற்கும் செயலுக்கும் அடிப்படையாக அமைவது எண்ணம்தான்.

"உயர்ந்த எண்ணங்களை பேணி வளர்க்க வேண்டும்" என்கின்றார் பெஞ்சமின் டிஸ்ரேலி. எப்படியொரு மரத்திற்கு விதை முக்கியமோ அதேபோல் செயல்களுக்கும் எண்ணம் முக்கியம்.

"மனிதன் எண்ணங்களின் உருவகம்" எதை நினைக்கிறானோ அதே போல் ஆகிறான் என்கிறார் மகாத்மாகாந்தி.



வாழ்க்கையில்

## எண்ணமே வாழ்க்கை...

முன்னேறவேண்டும் என்ற எண்ணம் இருந்தால் தான் முன்னேற முடி யும். "விதை விதைத்தால் பயிர் விளையும்" எண்ணம் என்பது மனம் என்னும் விவசாய நிலத்தில் விதைக்கும் பயிர்.

மனத்தில் ஆயிரம் எண்ணங்கள் களைகள்போல வளரும். அவைகளில் தேவையற்றதைக் களைய வேண்டும். நல்ல பலன் தரும் எண்ணங்களை உரமிட்டு தண்ணீபாய்ச்சி வளர்க்கவேண்டும். அவ்வப்போது தடைகள், இடர்பாடுகள் எல்லாம் களையப்பட்டு நல்ல எண்ணத்தை மட்டும் வளர்த்துக் கொண்டே இருந்தால் விளைவு வாழ்க்கையில் வெற்றி.

ஆபிரஹாம் லிங்கன் தோல்வி மேல் தோல்வியை தழுவினார். இருப்பினும் வளரும் எண்ணத்தை கைவிடவில்லை. அமெரிக்கத் தலைவர்களில் உன்னத இடத்தைப் பிடித்தார். ஆன்ட்கெலர்மோன் என்ற பெண்ணுக்கு கால் ஊனம். அவள் நீச்சல் சம்பியன் ஆனதுடன் உலகத்திலேயே மிகச்சீரான அங்க அமைப்பை பெற்றவள் என்ற பட்டத்தையும் பெற்றாள். மொத்தத்தில் எதை நினைக்கிறோமோ அதுவே நடக்கும். சுரைக்காய் விதை போட்டால் பூசணிகாய் காய்க்காது என்பார்கள் கிராமத்தில்.

தற்போது முதியவர்களை காப்பற்றவேண்டும் என்ற எண்ணம் குறைந்துகொண்டு போகிறது. தனது தந்தையை முதியோர் இல்லத்தில் சேர்த்தானாம் ஒருவன். அந்த முதியோர் இல்ல விலாசத்தை அவன் தந்தை இறந்தபோது விலாசம் இனித் தேவையில்லை என்று கிழித்துப் போடப்போனானாம். அதைக்கண்ட அவனுடைய மகன் கிழித்துப்போடாதீர்கள் அது நாளைக்கு உங்களை சேர்க்க எனக்குப் பயன்படும் என்று சொன்னானாம். மகனின் தீய எண்ணததால் அது அவனுக்கே தீமையாக அமைந்தது. எனவே ஒவ்வொருவரின் எண்ணமே அவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைகின்றது. எனவே நல்ல எண்ணங்களை உருவாக்குங்கள். நல்லமுறையில் செயற்படுங்கள். நாமும் நாடும் நலம் பெறுவோம்.

**பா.கஸ்தூரி**



## பெண் சமத்துவம்..!

இன்று அனேகமாக ஆண்களையும் பெண்களையும் வேறுபடுத்திப் பார்க்கும் உலகில் சமத்துவம் என்னும் கருத்து புதைகுழிக்குள் தள்ளப்பட்ட புழுதியாகிவிட்டது. சமூகத்தில் ஆண்களைவிட பெண்கள் இழிவானவர்கள் ஒன்றுமே அறியாதவர்கள் என்ற கருத்து நிலவுகின்றது.

ஆனால் ஆண்களைவிடப் பெண்களே சமூகத்திற்கு முக்கியத்தும் வகிக்கின்றார்கள் என்பது உண்மை. துன்பத்தை ஏற்றுக்கொள்வதிலும் வேதனைகள், பொறுப் புக்கள் போன்றவற்றை தூக்கிக் கொள்வதிலும் பெண்ணே அகப்படுகின்றாள்.

உதாரணமாக ஒரு பெண் பருவமடைந்ததிலிருந்து திருமணமாகும் வரை பெற்றோரின் கட்டுப்பாட்டிலும், குடும்பப் பொறுப்பிலும் பங்கேற்றுக் கொள்கிறாள். திருமணமாகிய பின்னரும் தனது குடும்பம், பிள்ளைகள், வீட்டுக்கடமைகள் போன்றவற்றினை ஏற்று இயந்திரமாகச் செயற்படுகின்றாள்.

சில சமயங்களில் வேலைக்குப் போகும் பெண்கள் ஆயின் இன்னும் பல வேதனைகளை ஏற்றுக்கொள்கிறாள். இப்படியாக வேதனைப்படும் பெண்களை பின்தள்ளி வைப்பது, இழிவாகக் கருதுவது மிகவும் மடமைத்தனமான கருத்தாகவே கருதப்படலாம்.

மூத்த அறிஞர்கள் பலர் பெண்களின் பெருமைகளையும் அவர்களின் சிறப்புகளையும் பற்றி சிறப்பாகவே கூறியுள்ளனர். இவ்வாறு ஆரம்ப காலத்தில் தெய்வத்திற்கு ஈடாக போற்றப்பட்ட பெண் இன்று உலக அரங்கில் பெரிதும் பாதிக்கப்படுகிறாள்.

இவ்வாறு வேதனைகளையும், துன்பங்களையும் ஏற்றுக்கொள்வதனால்தானே பூமியினை பெண்ணிற்கு ஒப்பிடுகின்றார்கள்.

உலக அரங்கில் ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் சமத்துவம் வழங்கப்படாது திண்டாடும் இந்நாளில் தமிழீழ பெண்கள் சமத்துவம் பெற்று பல்வேறு சாதனைகளை உலகம் வியக்கும் வகையில் நடாத்துகிறார்கள். எனினும் சில பெண்களின்மீது சமத்துவம் மக்களால் பேணப்படாத நிலையில் அதனை எதிர்கொண்டு செயற்படுத்தல் அவசியமாகின்றது.

எனவே பெண் சமத்துவம் என்பது தமிழீழத்தில் உருவாகி சர்வதேச அரங்கில் புகுந்து பெண் அடிமை ஒழிக்கப்பட்டு பெண் சமத்துவம் பேணப்பட வேண்டும். இதன் மூலம் சமூகத்தில் சிறந்த அங்கம் பெண் என்ற உணர்வு மனிதர்களிடையே தோன்றவேண்டும். இவ்வாறு தோன்றுவதனூடாக சமூக அந்தஸ்த்துப் பெற்ற பெண்களால் ஆண்களுடன் இணைந்து மகிழ்ச்சியுடன் கூடிய நிறைவான செயற்பாட்டினூடாக நாடு மிளிர் வடையும்.

**ப.சுபா**



## வாழ்க்கை வழமானது

மனிதனுடைய வாழ்க்கையில் சந்தோசமாக வாழ்வதென்பது வருகின்ற காலங்களில் மிக மிக அரிதாகவே காணப்படுவதை மறுக்க முடியாதென்பதை அனைவராலும் காணக்கூடியதாகவுள்ளது. மனிதனுக்கு சந்தோசமானது எவ்வளவு பெரிய பங்கை வகிக்கின்றதென்பதை மறந்து வாழ்கின்றனர்.

மனிதனாகப் பிறக்கும் அத்தனை பிறவிகளுக்கும் ஏதோ ஒரு வகையில் மனங்களை துன்பத்தில் ஆழ்த்தும். அவை கல்வியில் தோற்றிருக்கலாம். காதலில் தோற்றிருக்கலாம். பண நெருக்கடி வந்திருக்கலாம். சிலர் உங்களிடம் வெறுப்புத் தன்மையைக் காட்டி காயப்படுத்தியிருக்கலாம். இப்படி ஏகப்பட்ட காரணங்களால் உங்கள் மனங்களில் சோகம் வரக்கூடும். அதில் நீங்கள் சந்திக்கப் போவது வெறும் தோல்வியையே. அதையும் தாண்டி அத்தனை விடயத்தையும் சாதாரணமாகக் கருதவேண்டும். சாதாரணம் என்று சொல்லி தள்ளுபடி செய்தாலும் மீண்டும் அப்பிழைகளை விடத்தான் செய்வீர்கள். அதை சந்தோசமாக உரமாக்கவேண்டும். சந்தோசமாக மனதில் வளர்த்து திருத்திவருகின்ற பொழுதுதான் வாழ்க்கை வடிகட்டிய தண்ணீர் போன்றிருக்கும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் தங்களுடைய வேலைகளில் தோல்வியடைகின்றபொழுது அல்லது இன்னொருவரால் உங்கள் மனதை காயப்படுத்தும்பொழுது உடனும் சோகம் தழைகட்டி விடுகின்றது. ஏன்? அதை மாற்றியமைக்க மனங்கள் மறுக்கின்றன. ஏன்? அதை மறந்துவிடுகிறார்கள். சந்தோசம் என்கின்ற மருந்திட்டு அத்தனை காயங்களையும் மாற்றுவதற்குத் தவறிவிடுகின்றனர்.

சிலருடைய முகங்களைப் பாருங்களேன். ஒரு நாளுக்கு முகம் பளபளவென்று நல்ல சந்தோசமாக பாட்டும் கூத்துமாக இருக்கும். மறுநாள் வாடிவதங்கி அடித்துப்போட்ட பாம்புபோன்றதும், தண்ணீர் இல்லாமல் காய்ந்து வரண்டுகிடக்கும் பாலைவனம் போன்று காட்சியளிக்கும்.

ஆனால் அது ஓரிரு நாட்களில்லை ஏகப்பட்ட நாட்கள் இழுபட்டுச்செல்லும். அக்கவலையில் இருந்து விடுபட மற்றவர்களுடைய கதைபேச்சு, உண்ணும் உணவு, செய்யப்போகும் வேலைகள் எல்லாமே அவனுக்கு வெறுப்பாகவே தென்படும். சிலவேளைகளில் தன்னுடைய வேலையிலிருந்து விடுபடவும் அதிக வாய்ப்புண்டு. ஆனால் இதனை மறந்து உங்கள் மனதை சந்தோசமாக வைத்துப்பாருங்கள் வாழ்க்கை எவ்வளவு அழகாகக் காட்சியளிக்குமென்று.

எனவே ஒவ்வொரு மனிதனுக்கும் எத்தனையோ சம்பவங்கள் மனதை குடைந்து வாழ்க்கையை துண்டிக்கும் பொழுது அதனை மகிழ்ச்சியாகவும், சுறுசுறுப்பாகவும் செய்ய முற்படும்பொழுது தான் வாழ்க்கை சிறப்பாக அமையும். நாய்குட்டியை அடித்துதைத்தபொழுது கூட உங்களுடன் அன்பாக வாலையாட்டி பழகவில்லையா? அதுபோன்றுதான் உங்களின் வாழ்க்கையில் எத்தனை இடர்கள், துன்பங்கள் வந்தாலும் அதை மனதில் கறைபிடிக்க வைத்துவிடாதீர்கள். அலுவலகத்தில் உள்ள குப்பைக் கூடை நிறம்பி விட்டால் அலுவலகம் குப்பையாகத்தான் தென்படும். அதனை அவ்வப்போது எரித்துவிட்டால் அலுவலகம் அழகாகக் காட்சி யளிக்குமல்லவா? அதேபோன்று மனதில் தோல்வி கள் கறைபிடிக்கும்பொழுது மகிழ்ச்சி யாய் இருந்துபாருங்கள் வாழ்க்கை எவ்வளவு வழமாக அமையுமென்பதை உணருவீர்கள்..

**மு.அருளரசன்**

## சொக்லட் புடிங்




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| ரின்பால் | -1ரின் |
| முட்டை | -4 |
| கொக்கோப் பவுடர் | -1மே.க |
| வனிலா | -1தே.க |
| சுடுதண்ணீர் | 1/2கப். |

செய்முறை:-

* முட்டையை நுரை வரக்கூடியதாக அடிக்கவும். கொக்கோப் பவுடரை 1/2 கப் சுடுநீரில் கரைத்து வடிக்கவும்.
* ரின்பாலுடன் அடித்த முட்டை, கொக்கோ, வனிலா இவற்றைக் கலந்து அடிக்கவும்.
* எண்ணெய் பூசிய பாத்திரத்தில் ஊற்றி நீராவியில் அவித்தெடுக்கவும்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்— 58


பெயர்:............................................

முகவரி:............................................

............................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# மாறாட்டம் செய்யிறது;— அவ்வளவு நல்லதாயில்ல..!




## ஏ9—ஏரம்பு

***ஒண்டைத் தெரியாமல் இருக்கிறது தப்பில்லை, அது முட்டாள்தனமும் இல்லை. ஆனால், தெரியாததைத் தெரிஞ்சுகொள்ளத் தயாரில்லாமல் பிழை விடிறவங் களை நினைக்கத்தான் பத்திக்கொண்டுவருகிது.***

வணக்கம் வணக்கம் எல்லாருக்கும்! இண்டைக்கு நான் மூச்சும் விடமாட்டன், உங்கள் எல்லாரோடையும் கோபம். ஓ... சொல்லிப் போட்டன். வேற என்ன? இந்தக் காலத்தில ஒரு வயசு வந்தால் அதுக்கு மேல இருக்கப்படாது, போய்ச் சேர்ந்திடோணும். இல்லாட்டி ஊருலகத்தில வயதுக்கு மூத்த மனுசர் சொல்லிறதை நாலுபேர் காது குடுத்துக் கேட்டுத் திருந்தாட்டி, ஏன் அதுக்குப் பிறகும் அப்பிடியான வயசில நான் ஏன் வீணாய்..?

ஆ... இல்லை எத்தினை தரம் பாடிப்பாடிச் சொன்னனான். ஆனாலும் ஆர் கவனிக்கிறாங்கள். அண்டைக்கு முல்லைத்தீவுக் குப் போற பாதையில புத்தகக்கடை ஒண்டில எழுதிப்போட்டிருக்கு: 'மாதிரி வினாத்தாள்கள் இங்கே விற்பணைக்கு உண்டு' எண்டு. அது விற்பணை இல்ல பனை எண்டிறது அப்பிடி எழுதிற ஆக்களுக்குச் சுடேல்லையோ? ஒண்டைத் தெரியாமல் இருக்கிறது தப்பில்லை, அது முட்டாள்தனமும் இல்லை. ஆனால், தெரியாததைத் தெரிஞ்சுகொள்ளத் தயாரில் லாமல் பிழை விடிறவங்களை நினைக்கத் தான் பத்திக் கொண்டு வருகிது.

கடை எண்டிருந்தால் அதுக்குப் பொறுப்பானவர் தனிய காசு எண்ணிறதுக்கு மட்டுமில்லை, கவனமாய் அங்கை நடக்கிறதுகளையும் பார்த்துத் திருத்தோணும். பொறுப்போட நடக்கவேண்டிய புத்தகக்கடையே உப்பிடி நடந்தால் எங்கட மொழி என்னண்டாம் மூச்சு விடிறது? உப்பிடிப் பிழையாய் எழுதிப போடிற கடையின்ரை தராதரம் பற்றியுமெல்லோ சந்தேகம் ஏற்பட்டிடும். ஏதோ எல்லாரும் கவனிச்சுப் பாருங்கோ!

எழுத்துகளில மட்டுமில்லை சொல்லுகளிலை யும் மிச்சம் கவனமாய் இருக்கோணும் பாருங்கோ! அண்டைக்குக் கடையடியில இருந்து சில ஆக்கள் கதைச்சுக்கொண்டிருந்த நேரம் அங்கை வந்த துரையர் படபடக்கச் சொன்னார் "ரெம்பிளை எல்லே தாக்கீட்டாங்கள்!". ரெம்பிள் எண்டால் கோயில் எல்லே நினைச்சனான் உப்பிடி நடக்குமெண்டு.

ஆர் ஜேவிபியோ, ஆமியே? உவங்களை உதுக்கு மேலயும் சும்மா விடக்கூடாது" எண்டு கொண்டு ஆத்திரம் பொங்க வேட்டியை மடிச்சுக் கட்டிக் கொண்டு நான் எழும்பினன். "இல்லை அவங்களில்லை. அமெரிக்கன் தாக்கிட்டான்". "என்னடா வில்லங்கமாய் கிடக்கிது. அரபு நாடுகளிலதான் விளையாடுறாங்களெண்டு பார்த்தால், எங்கட கோயில் களையும் நாசமாக்கத் தொடங்கீட்டாங்களோ?". "அது என்னண்டு தெரியேல்லை. தலைப்புச்செய்தி மட்டும்தான் கேட்டனான்", எண்டபடி துரையர் தேத்தண்ணியைக் குடிக்கத் தொடங்கினார்.

எனக்கு ஒண்டும் ஏலாமல் விசராய் கிடந்திச்சிது. அப்பதான் அங்கை மணி யண்ணை வந்து விசயத்தை விளங்கப்படுத்தினார். ஓமோம் உங்களுக்கும் தெரிஞ்ச எங்கட மணியண்ணை தான்! அந்தக் குறிப்பிட்ட கடையில தரமான றேடியோவை வாங்கி எல்லா வானொலி நிலையங்களையும் கேட்டு, உலக விசயங்களை எல்லாத்தையும் படபடவெண்டு சொல்லிற அதே மணியண்ணை தான். அந்த மனுசன் தான் 'ரெம்பிள்' தாக்கப்பட்ட விசயத்தை விளக்கினார். அதாவது பாருங்கோ: பிரபஞ்சத்தில சுற்றித்திரிஞ்ச, உதைபந்தாட்ட மைதான அளவான ஒரு வால்நட் சத்திரத்தின்ரை பெயர் தான் 'ரெம்பிள்-1'. இதைத் தாக்கி சில உட்கூறுகளை எடுத்து ஆராய்ச்சி செய்தால், எங்கட பூமி உட்பட முழுப்பிரபஞ் சத்தின்ரை உருவாக்கத்தையும் ஓரளவுக்கு நுணுக்கமாய் அறிஞ்சு கொள்ளலாமெல்லோ. அதுக்காகத்தான் அமெரிக்கா தன்ரை விண்கலத்தில இருந்து ஏவுகணை மாதிரியொண்டால அந்த ரெம்பிளின்ரை உட்பகுதியை நோக்கித் தாக்கியிருக்கிது.

ஆழமாக மோதுதல் எண்ட அர்த்தத்தில **Deep-impact** எண்டு திட்டத்துக்குப் பேர் எல்லாம் சூட்டி, யூலை மாதம் 4 ஆம் திகதி (அமெரிக்காவின்ரை சுதந்திரதினம் அண்டைக்கு) விடிய 6:52 இக்கு மணிக்கு 30000 கி.மீ வேகத்தில விச யத்தை நடத்தியிருக்கினம்.

இந்த மோதலால 2000 பாகை செல்சியஸ் அளவுக்கு வெப்பம் வேற ஏற்பட்டதாம். எங்கட பிரபஞ்சம் (முழுச்சூரியத் தொகுதியும்) இற்றைக்கு 4.6 பில்லியன் (4600 000 000) ஆண்டுகளுக்கு முன்னால தோன்றின நேரம் எப்பிடியான சூழ்நிலையள் இருந்திது எண்டெல்லாம் அறியிறதுக்கு இது உதவுமாம். இந்த வால்வெள்ளிகளில அரைவாசி அளவுக்கு இருக்கக்கூடிய பனிக்குத் தேவையான நீர் எங்கத்தையான? சிலநேரம் பிரபஞ்ச உருவாக்கத்தில இருந்த் தண்ணியோ, குடிதண்ணி எப்பிடி எண்டெல்லாம் அறியலாமாம்.

இப்பிடி விசயத்தை மணியண்ணையிட்டை இருந்து விபரமாய் அறிஞ்ச உடனை அரைகுறைத் துரையரை ஏறி மிதிக்கோணும் மாதிரிக்கிடந் திச்சிது. தலைப்புச்செய்தியை மட்டும் கேட்டிட்டு கொஞ்சநேரத்துக்கு மனுசருக்க ரென்சனை வரவழைச்சிட்டிதே!

உப்பிடித்தான் அண்டைக்கும் பாருங்கோ! லண்டன் குண்டுவெடிப்பு தொடர்பாய் ஒருதரையும் குறிப்பாய் சந்தேகப்பட முடியாமல் பிரிட்டிஷ் பொலிஸ் இருக்க, தமிழ்ச் செய்தி ஒண்டில சிரியா நாட்டவர்களின்ரை பேர்களோட 30 பேர் கைது எண்டு வேற சொல்லிச்சிது. என்னவோ உப்பிடி மாறாட்டம் செய்யிறது எனக்கெண்டால் அவ்வளவு நல்லதாய் படேல்லை.

மணியண்ணை விசயத்தைச் சொல்லி முடிய துரையருக்கு எல்லாரும் நல்ல ஏச்சு. அது மனுசன் குழம்பீட்டிது. "கண்டறியாத கண்டுபிடிப்புகள். பெரிசாய் என்னத்தைக் கிழிச்சாங்கள்? இண்டைக்கு கண்டுபிடிக்கப் படிறது எல்லாத்தையும் அண்டைக்கே வேதங்களில சொல்லியாச்சு. உதாரணத்துக்கு இண்டைக்கு நாட்டுக்கு நாடு சட்டம், நீதி எண்டு எத்தினையோ சிக்கல்பட்டுக் கொண்டிருக்கிற விசயத்தை அண்டைக்கே மனுநீதியில செம்மையாய் கையாண்டிட்டினம்", எண்டு துரையர் திடீரெண்டு போடொண்டு போட்டார்.

"துரையர்! மற்றதுகளைப் பற்றி எனக்கிப்பை அவசியமில்லை. ஆனால், மனுநீதி பற்றி என்ன சொல்ல வெளிக்கிர்றீர்?", தேத்தண் ணிப் பேணியை அங்கால வைச்சுப்போட்டு ஆளை ஆர்வமாய்ப் பார்த்தன். "சும்மா விஞ்ஞானம், விஞ்ஞானம் எண்டு வாயைப் பிளந்தால் மட்டும் போதாது. மெஞ்ஞானத்தைப் பற்றியும் தெரிஞ்சு வைச்சிருக்கோணும்.

மனித குலத்தை 4 வர்ணங்களாகப் பிரிச்சு சமூகக்கட்டமைப்புகள், நீதியளை உருவாக்கின மனுநீதியைப் பற்றித்தெரி யுமோ?". "மனுசரை பிறப்பு அடிப்படையிலை பிரிச்சுப் பார்க்கிறது எவ்வளவு பெரிய அநீதி. அதுக்குப் போய் மனு நீதி எண்டு பேர் வேற", நான் சொன்னன்.

"ஏரம்பர்! நீர் ஒரு அற்ப மனித ஜந்து. உமக்கு வேதங் களை விமர்சிக்கிற தகுதி இல்லை. ஜாதி, வர்ணம் எண்டெல்லாம் அழைக்கப்படிற ஆச்சாரங்கள் சமூகத்தை நெறிப்படுத்திற ஒழுங்கு முறை". "சரி! துரையர் எனக் குத். தெரியாத விசயத்தை ஒருக்கால் விளங்கப்படுத்தும், கேப் போம்", எண்டவரைக் கேட்டன்.

"அப்பிடி வாரும் வழிக்கு! அதாவது மனித குலம் உரு வாக்கம் 4 விதங்களில ஏற்பட்டது. பிரம்மாவின்ரை வாயில, நெஞ்சில, தொடை யில, காலில இருந்து முறையே பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் உருவாகிச்சினம். அந்த 4 ஜாதியளும் ஒன்றுக்குள்ளை ஒண்டு கலந்ததால இன்னும் பல ஜாதியள் உருவாகிச்சிது. இது ஒரு சமுதாயக் கட்ட மைப்பு", எண்டார் துரையர்.

"இதென்னடா புதினமாய் கிடக்கிது. நீர் சொன்னவகையில எல்லாம் மனுசர் உருவாகி னால் அப்படிப்பட்டவை நிச்ச யம் வித்தியாசமான பிறவி யள்தான். ஆனால், எனக்குத் தெரிஞ்சளவில நீர் உட்பட நான், இதிலை நிற்கிற ஆக்கள், நிக்காத ஆக்கள் எண்டு உலக மக்கள் எல்லா ருமே ஒரே மாதிரித்தான் உருவாகினர். அதை விட்டிட்டு முன்னைப் பின்ன யோசியா மல், சும்மா விசர்க்கதை அளக்கிறீர். இப்பத்தைய ஈரான் நாட்டில (முந்தி Persia -பாரசீகம்- எண்டு சொல்லி றவை) இருந்து வந்த ஆரியர் கள் திராவிடர் களை அடிமை கொள்ளிறதுக்கு கட்டின கதை எல்லாத்தையும், 3000 வருசம் கடந்து எங்களுக்கு இஞ்சை அளக்கப்பார்க்கிறீர்.

இண்டைக்கும் தமிழ்நாட்டில ஆதிதிரா விடர்கள் எண்டு ஒதுக்கப்படிற தலித் மக்கள் வேற ஆர்? ஆரிய மேலாதிக்கத்தை ஏற்காமல், தங்கட சுதேசியத்தை நேசிக்கிற தமிழர்கள் தான். துரையர்! இப்ப கூட சொல்லிறன்: நீர் சொல்லிற விதங்களில ஆராவது பிறந்திருந்தால் அந்தாளை இஞ்சை கொண்டு வாரும். சாகும்வரைக்கும் நான் கொத்தடிமையாய் அந்த வித்தியாசமான 'சாதி'க்கு நான் அடிமைச்சேவகம் செய்யிறன். அதைவிட்டிட்டு என்னைப்போல சிறிய மனித ஜந்துக்கு விமர்சிக்கிற தகுதி இல்லையெண்டு விசர்க்கதை கதைச்சால், பேந்து நான் பெரிய மிருக ஜந்துவாய் மாறி உமக்கு விளங்கப்படுத்த வேண்டியிருக்கும்", என்ரை கதையோட மூஞ்சை நீண்டு போன துரையர் 5,6 சுருட்டை அடுக்கியடுக்கி இழுத்தார். மெய்ஞானம், ஆன்மீகம் எண்ட பேரிலை சும்மா குப்பை கொட்டி அதுகளின்ரை உண்மையான புனிதத்தைக் கெடுக்கிற ஆட்களில மிச்சம் கவனமாய் இருக்கோணும் நாங்கள்.

என்ன-மணியண்ணை ஏரம்பை ஒருமாதிரியா பார்க்கிறார். அப்ப சரி நான்போட்டுவாறன். அடுத்தமுறை சந்திப்பம்.

# மனித நேயங்களும் — மனித உரிமை வழிகாட்டிகளும்

சகலரும் சமமான மனித மாண்புடையவர் என்று ஏற்றுக்கொள்ளப்படும் மனப்பாங்கு வளர்க்கப்படுதல் இன்றைய தேவையும், கடமையும், உரிமையுமாகும். "மானிட குடும்பத்தின் சகல உறுப்பினருடையவும் இயற்கையாகப் பெறப்பட்ட மாண்பையும், சமமான, பராதீனப்படுத்த முடியாத உரிமைகளையும் அங்கீகரிப்பதே உலகில் சுதந்திரம், நீதி, சமாதானம் ஆகியவற்றின் அத்திவாரம்'' என்கிறது மனித உரிமைப் பிரகடன முன்னுரை.

ஒரு காலத்தில் நம்பிக்கைகளும், அறிவும் குறிப்பிட்ட பகுதிகளில் நிறைந்திருந்தன. ஏன் இன்றும் நாம் நம் வழியைத் காண அவற்றைச் சுற்றிச் செல்கின்றோம். இங்கேதான் மனித அல்லது தொல் நுணுக்க வழிகாட்டிகள் வருகிறார்கள். அரசியல், தத்துவார்த்த, அறிவியல் அணுகுமுறைகளை உறுதியாகக் கைக்கொள்ளவேண்டிய நிலைமை உருவாகிறது. லாங்பெல்லோ எனும் அறிஞர் கூறுகின்றார். ''ஊர் முழுவதும் எதிர்த்தாலும் உரைக்க விரும்பியதை உரைக்க அஞ்சாதவன் உத்தமமான மனோ தைரியம் உடையவன்" ஆம்! உண்மைகளை வெளி உலகிற்கு வெளிப்படையாகக் கூறுபவன் மனித உரிமைகளுக்கு வழிகாட்டியாகின்றான்.

கடந்த சில வருடங்களாக, இன்றுவரையும் எம் தேசத்தின் மனித உரிமைகள் பெயரளவிலே வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் அனைவரும் ஆளுக்கொரு திசையில் மனிதநேயம், மனிதம், மானிடப் பண்பு, மனித உரிமைகள் என்பதாக விளங்கிய விதத்தில் விளக்கிக்கொண்டிருக்கின்றோம். மனித உரிமை மீறலின் தாக்கம் பேரினவாதம் எனும் போர்வையில் போர்வையாக தமிழர் மீது திணிக்கப்பட்டு வருகின்றது.

கைது செய்தல், சட்டத்திற்குப் புறம்பாகக் கொலை செய்தல், காணாமற்போதல், கற்பழிப்பு, சித்திரவதை, அநீதியான முறையில் தடுத்து வைத்தல், சட்டத்திற்கு முன் சகலரும் சமன் என்பது அலட்சியம் செய்யப்படுதல், நீதி விசாரணை செய்வதற்கு மறுப்பு, தடுப்பு முகாம்களிலும் சோதனைச் சாவடிகளிலும் கேவலமான முறையில் நடாத்தப்படுதல், நடமாடுவதற்கு வதிவிடத்தை தெரிவு செய்வதற்கு, தொழிலில் ஈடுபடுவதற்கு, ஒன்று கூடுவதற்கு, கருத்து வெளியிடுவதற்கு தடைகள் போன்ற பலவித மனித உரிமை மீறல் கொடுமைகள் பெருகியுள்ளன.

மனித நேயத்தை வலியுறுத்தும் வழிகாட்டிகள் எமது முன்மாதிரிகள். வழிகாட்டும் அறிவுப் பலகைகளைப் போன்ற உதவி நினைவுக்கு எப்போதும் தேவைப்படுகிறது. வாழ்க்கையின் உண்மையான குறிக்கோள், அழிவில்லாத வாழ்வைத் தெரிந்து கொள்வதற்கும் வாழும் குறுகிய காலத்தில் பிறருக்கும் துன்பம் விளைவிக்காமல் தானும் பிற துன்பங்களிலிருந்து விலகி வாழ்தலைக் குறிக்கிறது. டி.பின்னி எனும் அறிஞரின் கூற்றுப்படி, வளர்ச்சிக் கூறுகளுடன் கூடிய பகுத்தறிவே மனிதனுக்கும் விலங்குகளுக்குமுள்ள வேற்றுமை. எனவே மனிதன் தன் மேம்பாட்டுடன் பிறர் மேம்பாட்டையும் கருத்திற் கொள்ளவேண்டியவனாகின்றான்.

மனித இடையீட்டாளர்களும் அமைப்புகள், குழுக்கள், பாடசாலைகள், கழகங்கள் போன்றவற்றை உருவாக்குகின்றனர். இவை வடிவமைக்கப்பட்டவையாக உள்ளூருக்கேற்றபடி அமைந்த சூழலுக்கு இடமளிக்கக்கூடியதாக இருக்கின்றன. இந்த இடையீட்டாளர்கள் சித்தனையை சமூக பரிமாறுதல்களுடன் இணைக்க வேண்டும் அப்பொழுதே பொருள் உள்ளதாக அமையும்.

இவ் இடைவினைகள் கருத்துக் கணிப்புக்களை திட்டமிட்டகள நிகழ்ச்சியாகவும். அதிகாரச்சம நிலை அல்லது பங்கு பணிக்கு இடமளிக்கும் சூழ்நிலையைத் தோற்றுவிப்பதாகவும் பொருநதுகிறது. பகிர்ந்து கொள்ளப்படுகிறது. பயன்பாடுடைய நேரத்திற்கான குறியீட்டு வடிவங்கள், பேச்சுவார்த்தைகள் முதலியன கூட்டு நினைவுக்கான அடிப்படையாக அமைகிறது. சமூக அமைப்பின் நம்பிக்கை வலுப்பெறுவதற்கு ஒவ்வொரு பிரஜையினதும் சுய தொடர்ச் சியானதும், வடிவமைக்கப்பட்டதுமான ஒருமித்த கரு த்து தானாக உருவாவதில்லை. கூட்டுப்பட்டறிவு தொடர்ச்சியாக வழிநடத்தப்படுவதாலேயே ஒருமித்த கருத்து உருவக்கப்படுகிறது.

மனித உரிமைகளில் சில நபர்களின் போக் கு புகழுக்காக நேர்மையை மறந்து விடுதலாம். தான் மட்டுமே வாழப் பிறந்தவன் எனும் ஒரு தலைப்பட்ச உபாதையுடையவர்கள் இவ்வாறான கைங்கரியங்களில் கைதேர்ந்து விடுகின்றார்கள். மனித உரிமைகளின் படி வழிகாட்டும் கொள்கைகளினால் நெறிப்படுத்தப்படும் ஒரு நடுநிலை இறையாண்மையை விலைகொடுத்து வாங்கவோ, விற்கவோ முடியாது.



பேரினவாதம் பழக்க தோஷத்தால் ஏற்பட்ட சர்வாதிகாரப் போக்குகள் நிறைந்த செயற்பாடுகளை தன்[illegible]மாக்கி, மனிதத்தின் மாண்பு [illegible]ன்புகளை வெறுமனே தன் [illegible] முத்திரையாக்கி, செயற்பாடுகளை, மனித நேயத்தை மலிந்த பொருளாக்கி துஷ்பிரயோகித் தும் வருகின்றது. இந்தத் தலைமைத்துவத்துக்கு எத்தனையோ அநீதிகள், பழக்கத்தால் நீதிகளாகத் தோன்றுகின்றன. அல்லது நியாயப்படுத்தப்படுகின்றன.

காலம் காலமாக அடிமைச் சித்தாந்தங்களை அடியொற்றிய கொள்கை வகுப்புக்களும், கோளாறுகளும் அவர்களின் பின்னணியிலே உருப்பெற்று வந்திருக்கின்றன. தேசத்தின் விடியலுக்காய் தம்மைத் தந்தவர்களின் கொள்கை, தமிழ் மக்களின் கொள்கை வகுத்தல்கள் " தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம்" "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" எல்லாம் ஒரே இலக்கையே கொண்டிருக்கின்றன. அறிவாண்மைப் புலிகள் இறந்து போகலாம். ஆனால் மறைந்து போக மாட்டார்கள். அவர்கள் கண்ணுக்குப் புலனாகாமல் போகிறார் கள் அவ்வளவு தான்! அவர்கள் வாழ்க்கை, நாம் கற்கும் பாடங்கள் அனைத்தையும் விட முக்கியமானது. ஆம்! அவர்களின் வாழ்க்கை நமக்கெல்லாம் எடுத்துக்காட்டு.

"உலக மக்களுக்கான இனம், பாலினம், மொழி அல்லது சமய வேறுபாடின்றி, ஐ.நா. சாசனத்தினால் உறுதி செய்யப்படுகின்ற நீதிக்கும், சட்ட ஆட்சிக்கும், மனித உரிமைகளுக்கும், அடிப்படைச் சுதந்திரங்களுக்கும் உலகளாவிய நன்மதிப்பினை வளர்ப்பதற்கென, கல்வி, அறிவியல், பண்பாடு மூலமாக நாடுகளிடையே ஒத்துழைப்பினை மேம்படுத்தி, அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பாடுபடுவதே இவ் அமைப்பின் நோக்கம்'' என்கிறது யுனெஸ்கோவின் அமைப்பு விதி.

உறுப்பு ஒன்று மனித உரிமைகள், கடமைகள் அனைத்தும் செயற்படுத்துவதற்கு இன்றியமையாது தேவைப்படுவது நிலையான அமைதியாகும். குடிமக்கள் அனைவரும் முக்கியத்துவம் பெறுகின்ற- ஒருங்கிணைந்து வாழ்கின்ற இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்கின்ற சுதந்திரமான நியாயமான சட்டங்களின் இன்பம், சமத்துவம், ஒருமைப்பாடு ஆகியவற்றின் சுதந்திரத்தை அனுபவிப்பதற்குரிய ஒரு நாடு தேவையென்பதாகும்.

அமைதி, மேம்பாடு, மக்களாட்சி ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று உறுதுணை புரியும் ஒரு முக்கோணம்.அவை ஒன்றையொன்று வலுப்படுத்தப்பாடுபடுகின்றன. மனித உரிமைக்கான தேவையாக வழிகாட்டியாக அமைதி அமைந்து விடுகிறது. மக்களின் சனநாயகத் தேவை சுமூகமான முறையில், நீதி, நேர்மை ஆகிய உயர் வழிமுறைகளைக் கைக்கொள்ளாவிடின் ஒரு நாட்டில் நிலைபெற்ற மேம்பாடு இல்லை. ஏற்றத்தாழ்வுகள் நிலையில்லாதவை. இவை சமூகப் பொருளாதார அரசியல் சுமைகளுக்கும், ஆதிக்கத்திற்குமே வழி வகுக்கின்றன.

எமது தேசத்தின் அடிப்படைச் சிக்கல்களின் ஆணி வேர்கள் எவை? முரண்பாடு களைத்தடுத்து எமது நியாய மான கோரிக்கைகளை முன்வைத்து சர்வதேச அரங்கிலே தீர்வுக்கான மூலங்களை அம்பலப்படுத்தி மதிநுட்பத்திற்கு மேலாக மன உறுதியுடன் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். சர்வதேசத்திலேயே சர்வமும் விளக்கப் பட்டு எமது வெற்றி களின் தனித் தன்மைகளை நீதி வரம்பிற்குட்பட்ட அறிவுத் திறன்களை அளவிடுவதற்குரிய உரிமையை, சந்தர்ப்பத்தைச் சர்வதேசத்துக்கு கொடுத்துமிருக்கின்றோம். எமது உரிமைகளை உணர்ந்துகொள்வதுடன் தக்க சமயங்கள் அஞ்சா நெஞ்சுடன் 'மனித உரிமைகள் ஆணைக்குழுவின்' செயலாற்ற வேண்டிய நிலையிலுமுள்ளனர்.

மனித உரிமைகளின் வழிகாட்டல் போக்கில் மதிப்பு அமைவுகள் (Value system) முக்கியமானவை. விழுமியம் சார்ந்தவை. மதிப்பீடுகள் மாண்பு மிகு நேயத்தை நமது சிந்தனைகள், உணர்வுகள், செயல்கள் மீது செல் வாக்குடன் பதிக்கின்றன. சரியான வற்றைச் செய்யுமாறு எமக்கு வழிகாட்டுகின்றன. தனிமனிதனுக்கேயுரிய மதிப்பீடுகள் (Personal Values) அவனுக்கேயுரித்தான உரிமையை, மேம்பாட்டை அறியவும், வளர்த்தெடுக்கவும் உதவுகிறது.

நான் நானாகவும், நாம் நாமாகவும் வாழ்வதற்கு சில வழித்தடங்கள் தேவை அவையே மதிபபீடுகள் அல்லது விழுமியங்கள் ஆகும். மாண்பு மிகு மனித நேயத்திற்கான இன்றைய தேவை சுதந்திரம் எனும் இறகுகளாகும். அத்துடன் மதிப்பீடுகள் எனும் வேர்களாகும். இவையே மனித உரிமையை நிலை நாட்டுவதற்கான வழிகாட்டிகளாகியும் விடுகின்றன.

அமைதி, ஆரோக்கியம், இயல்புநிலை ஆகியவை செய்திகள் ஆவதில்லை. கண்ணுக்குப் புலப்படாத இவ் அருவங்களுக்கு- கட்டியங் கூறப்படாத இவ் வெற்றிகளுக்கு- அதிக முக்கியத்துவம் கொடுப்பதற்கே நாம் முயலவேண்டும். புரட்சிக்காரரை என்னென்ன விழுமியங்கள் தூண்டி வழி நடத்தினவோ அவற்றையும் அவர்கள் அந்த ஆவணங்களில் பொறித்து வைத்திருக்கின்றனர். அவைதான் சுதந்திரம், சமத்துவம், உரிமைகள், சகோதரத்துவம் போன்றவையாம்.

இன்று உலகெங்கும் வன்முறையைக் கைவிடுவதற்கு, சமுதாயம் முழுவதும் ஒரு கடமைப் பொறுப்புடன் செயற்படவேண்டும். ஆனால் அவ்வாறு செயற்படுகின்றதா? என்பதே கேள்வியாகி விடுகிறது.

ஒரு போர்ப்பண்பாட்டிலிருந்து ஓர் அமைதிப் பண்பாட்டிற்கு மாறி வந்திருக்கின்றோம் என்று சர்வதேசம் பேசிக்கொண்டிருக்கின்றது. ஒரு சாராரின் ஒத்துழைப்பு மட்டும்தான் என்பதும் அதுவே இப்போது புரிந்துகொண்டிருக்கும். ஒரு மாற்றத்தைச் செய்வதற்கு ஒவ்வொருவரும் தேவையானவர்கள். உலக, மண்டல தேசிய நிலைகளில் பாதுகாப்புப் பற்றிய ஒரு புதிய அணுகுமுறை தேவையோ அதே போன்று எம் தேசத்திற்கும் தேவை எனும் விழிப்பு நம்மிடையே அன்று தொட்டு இன்றுவரை விழித்துக் கொண்டிருக்கிறது.

மக்களுக்கான ஆட்சியின் உறுதிப்பாட்டுக்கும், குடி மக்களின் பாதுகாப்பிற்கும், எம் தேசத்தின் காவலர்களின் பாதுகாப்பிற்கும் பொறுப் புறுதியளிக்க வேண்டிய கடமை யாரிடமோ உண்டோ? அவர்களே அதை இனியாவது? நிறைவேற்ற வேண்டும். ஏனெனில் முழுமையான பாதுகாப்பில்லாத, சுதந்திரமில்லாத அமைப்பு முறையில் மக்கள் வாழ முடியாதவர்களாகின்றனர்.

முடிவெடுக்கும் நடைமுறைகளும், நெருக்கடி நிலைமைகளைச் சமாளிக்கும் நடவடிக்கைகளும், வேகத்தை முடுக்கி, ஒருங்கிணைப்பை மேம்படுத்தி, திறம்பாட்டினை மேம்படுத்தும் வகையில் வகுக்கப்பட வேண்டும். அபரிமிதமான செலவில் மக்களின் அழிவை நோக்கி போர் பற்றிய கனவில் பேரினம் என்று சொல்லிக்கொண்டு பேரிடர்களை விளைவிப்பவர்கள் மனித உரிமைகள பற்றி உளறுவதில் அர்த்தமில்லை.

ஆனால் இயற்கையாக அடிக்கடி தோன்றும் அழிவுகளைக் கண்டறிந்து மட்டுப்படுத்துவதற்கு நம்மிடம் சாதனங்கள் இல்லை. கடுமையான தட்ப வெப்பங்களுக்கும் இயற்கையின் சீற்றங்களுக்கும் எளிதில் ஆட்படுபவர்களாக நாம் இருக்கின்றோம். நமது அன்றாட வாழ்விலே எல்லா விதமான இடர்பாடுகளையும் எதிர்நோக்கும்போது திகைக்கின்றோம். பாதுகாப்பற்றவர்களாகிவிடுகின்றோம்.

மனித உரிமைகளில், சிறுவர் உரிமைகள், பெண்கள் உரிமைகள், தொழிலாளர் உரிமைகள் எனப் பல தரப்பட்ட விதத்தில் பேசப்படினும் யாவுமே மனிதனின் மாண்பு மிகு நேயங்களுக்கே வழிகாட்டியாக, விடுதலையாக அமைந்து விடுகிறது.

போர் நிறுத்தத்திற்கான நீண்ட நெடிய பாதையில் பலியான உயிர்களையும், குணப்படுத்த மிகவும் கடினமாகவுள்ள ஆழமான காயங்களையும் நினைக்கும் போது துயரமே சூழ்கிறது. இவ்வாறாக "மனிதர் மனதில் அமைதியை ஏற்படுத்தும்"

**— மாதங்கி —**

கோட்பாட்டுக்கு நாம் புத்துயிர் கொடுக்கும் இந்தச் சமயத்தில், இன்னும் தங்கள் பேரினவாத பூசல்களிலும், கொலைக் களத்திலும் நம்பிக்கை கொண்டுள்ள வர்களை என்ன செய்ய முடியும்.

உரிமைகள் என்ற பெயரில் கண்டனம் மட்டும் போதாது. செயற்பாடே முக்கியமாகிவிடுகிறது. பாலியல் முறைகேடுகளுக்கு அல்லது கட்டாய வேலைகளுக்குள்ளாகின்ற குழந்தைகளுக்காக, பெண்களுக்காக் உரிமை கோர வேண்டியவராகின்றோம்.

மனிதர்கள் மனதில் போர்கள் தொடங்குகின்றன. எனவே அமைதிக்கான தற்காப்புகளும் மனிதர் மனதில் தான் அமைக்கப்பட வேண்டும். அரசின் அரசியல் பொருளாதார ஏற்பாடுகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட அமைதி, மக்கள் அனைவரின் ஒரு மனதான ஆதரவினைப்பெற்ற நிலையான உளமார்ந்த அமைதியாக இருக்க முடியாது. எனவே மனித மனத்தின் அறிவார்ந்த அறிவியல் ஒருமைப்பாட்டின் மீது அதனை ஏற்படுத்த வேண்டும். இதுவே மாண்புமிகு மனித நேயத்தின் மனித உரிமைக்கான வழிகாட்டியாக அமைந்து விடும்.




## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

மரங்களை அழித்தல் அதாவது கண்டபடி தறித்தல் என்பது ஆங்காங்கே நடைபெற்றுத்தான் வருகின்றது. மரங்களை அழித்தல் அல்லது தறித்தல் எத்தகைய கேடு விளைவிக்கும் செயல் என்பதை மக்கள் உணர்வர்.

கூடவே மரம் தறித்தல் தொடர்பான சட்டதிட்டங்கள், போன்றன கூட உள்ளன. எனினும் எனது வளவு மரத்தை நான் தறிக்க யாரிடம் அனுமதி பெறவேண்டும் என்ற மனோபாவமும் ஒரு மரத்தை தறிப்பதால் என்ன வந்துவிடப்போகின்றது. என்றமாதிரியான கருத்தும் எங்கள் மக்களில் சிலரை இவ்வாறு செயற்படத்தூண்டுகின்றன.

"சிர புஞ்சி" என்னும் இடம் உலகிலேயே அதிக அளவு மழை பெய்யும் இடமாக இருந்தது. எனினும் அங்குள்ள காடுகள் கண்டபடி அழிக்கப்பட்டதால் இன்று அங்குள்ள மக்கள் குடிநீருக்காக நீண்டதூரம் அலைய நேரிட்டுள்ளதாகக் கிடைக்கும் தகவல்கள் எத்துணை கொடுமையானது.

அவ்வாறே இமயமலையின் சரிவுகளில் குறிப்பாக தேஹ்லிகார்லால் பகுதியில் மரங்கள் வெட்டப்பட்டதால் ஏற்பட்ட தீங்குகளை உணர்ந்து கொண்ட அப்பகுதி மக்கள் தம் தவறினை உணர்ந்து கொண்டனர்.

ஊர் மக்கள் ஒன்று திரண்டு பொது முடிவு எடுத்து இரண்டு காவலர்களை நியமித்து நடவடிக்கை எடுத்தனர். ஊர்மக்கள் உட்பட யாருமே மலைச்சரிவின் பக்கம் போகாமல் தடை செய்தனர். ஆடு மாடுகளை



மேய்ச்சலுக்கு அனுப்பாமல் தடுத்துக்கொண்டனர்.

காடு காப்பாற்றப்பட்டது. கூடவே மக்கள் புதிய மரக்கன்றுகளையும் நடுகை செய்து பராமரிக்கத் தொடங்கினர்.

கிட்டத்தட்ட 13 வருடங்களுக்கு பின்னர் மலைச்சரிவுகள் பழைய பொலிவினைப் பெற்றன. பசுமையான காடுகள் தோன்றின. காடுகள் அழிக்கப்பட்டதால் பிரிந்து சென்ற பறவைகளும் மீண்டன. தண்ணீர்த்தட்டுப்பாடும் நீங்கியது.

இதற்குக் காரணம் என்ன என்பதை உணர முடிகின்றதா? மக்களின் விழிப்புணர்ச்சிதான் இதற்குக் காரணம். இத்தகைய விழிப்புணர்ச்சி எங்களுக்கும் வரக்கூடாதா?

## மாடுகளில் ஏற்படும் நோய்களும் அவற்றிற்கான தடுப்பு முறைகளும்

ஓர் அங்கியின் உடற்றொழிலியலில் ஏற்படும் அசாதாரண மாற் றமே 'நோய்' எனப்படும். இவ்வாறு மாடுகளுக்கும் பலவிதமான நோய்கள் ஏற்படுகின்றன. அவற்றை பின்வரும் வகைகளாக பிரிக்கலாம்.

1. வைரஸ் நோய்கள்
2. பக்ரீரியா நோய்கள்
3. ஒட்டுண்ணி நோய்கள்
4. குறைபாட்டு நோய்கள்
5. இனப்பெருக்கக் குறைபாடுகள்
6. சமிபாட்டு நோய்கள்

**வைரஸ் நோய்கள்:-**

காலவாய் நோய் (FMD)
கோமாரி நோய்
அம்மை நோய்
கழலைகள்

போன்ற பலவிதமான நோய்கள் வைரஸினால் ஏற்படுகின்றன. இவற்றுள் பிரதானமாக இங்கு ஏற்படும் நோய் கால்வாய் நோய் ஆகும். இந்நோயின் பிரதான அறிகுறிகள்

i) கால் குளம்பிலும்,வாயிலும், பால் காம்புகளிலும் புண் மற்றும் கொப்புளங்கள் ஏற்படும்.
ii) வாயிலிருந்து உமிழ்நீர் வடிதல்
iii) உடல் வெப்பநிலை அதிகரித்தல்
iv) உணவு உண்ணாமை
v) பாலுற்பத்தி குறைதல்
vi) இவ்வைரஸ் கன்றுகளின் இதயத்தை தாக்குவதனால் இறப்பு ஏற்படுகிறது.

மாடுகளுக்கும், 4மாத வயதிற்கு மேற்பட்ட கன்றுகளுக்கும் தடுப்பூசி வழங்குவதன் மூலம் இந்நோயை வராது தடுக்கலாம்.

**பக்ரீரியா நோய்கள்:-**

அடைப்பான் (Anthrox)
தொண்டை அடைப்பான் (Hs)
கருங்கால் நோய் (B.Q)
காசநோய்
மடியழற்சி

போன்ற நோய்கள் பக்ரீரியாவினால் ஏற்படுகின்றன.

**அடைப்பான் நோய்:-**

திடீர் இறப்பு, வயிறு, கழுத்து, பின்கால்வீக்கம், மூக்கு வாய் குத துவாரங்களினூடாக இரத்தக்கசிவு அத்துடன் இரத்தம் கறுப்பாகவும் உறையாமலும் இருத்தல் போன்றன பிரதான அறிகுறிகள் ஆகும்.

இந்நோய் மிகவும் அபாயகரமானது. ஆனால் இலங்கையில் இந்நோய் தற்போது கண்டறியப்படவில்லை.

**தொண்டை அடைப்பான்:-**

1. உடல் வெப்பநிலை அதிகரித்தல்.
2. கீழ்த்தாடை, தொண்டை, கழுத்து ஆகிய பகுதிகள் வீங்கிக் காணப் படல்.
3. சுவாசிக்க கஸ்ரப்படல் போன்றன பிரதான அறிகுறிகள் ஆகும்.

கன்றுகளுக்கு 4 மாத வயதில் முதலாவது தடுப்பூசியும் 7மாத வயதில் இரண்டாவது தடுப்பூசியும் பின் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறை கன்றுகளுக்கும் மாடுகளுக்கும் தடுப்பூசி வழங்க வேண்டும்.

**கருங்கால் நோய்:-**

i) மாடு நொண்டும்.
ii) பின்னங்கால், கழுத்து போன்ற சதைப்பிடிப்பான இடங்களில் வீங்கிக் காணப்படல்.
iii) சுவாச வீதம் அதிகரித்தல் போன்றன பிரதான அறிகுறிகளாகும்.

தடுப்பூசி ஏற்றுவதன் மூலம் நோய் ஏற்படுவதை தடுக்கலாம்.

**காச நோய்:-**

i) நிறை குறைந்து உடல் மெலிவு ஏற்படல்.
ii) தீராத பசி.
iii) உடல் தளர்ச்சி ஏற்படல்.
iv) வயிற்றோட்டம்.

போன்றன பிரதான நோய் அறிகுறிகள் ஆகும்.



தகுந்த சிகிச்சை மூலம் குணப் படுத்தலாம்.

**மடிய்ழற்சி நோய்:-**

i) மடி வீங்கி சிவந்திருத்தல்.
ii) மடி சூடாகக் காணப்படல்.
iii) பாலில் இரத்தம் கலந்து வருதல்.

போன்றன பிரதான அறிகுறிகள் ஆகும். சுத்தமாகவும், சுகாதாரமாகவும் தொழுவத்தினை பேணுவதன் மூலம் இந்நோயை தடுக்கலாம்.

**ஒட்டுண்ணி நோய்கள்:-**

**A) குடற்புழுக்கள்:-**

i) உடல் நிறை குறைவடைதல்.
ii) வயிற்றோட்டம் ஏற்படல்.

போன்றன பிரதான அறிகுறிகள் ஆகும். பூச்சி மருந்தை 3 மாதத்திற்கு ஒரு முறை வழங்குவதன் மூலம் புழுக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்தலாம்.

**B) உண்ணிக்காய்ச்சல்:-**

i) கண்மடல், வாய்மென்சவ்வு,மஞ்சள் கலந்த கபில நிறத்தில் காணப்படல்.
ii) கோப்பி நிறத்தில் சலம் வெளியேறல்.
iii) இரத்தச் சோகை காணப்படல்.

போன்றன பிரதான நோய் அறிகுறிகள் ஆகும். தடுப்பூசி வழங்குவதன மூலம் இந்நோயை தடுக்கலாம்.

**குறைபாட்டு நோய்கள்:-**

**A) பால் காய்ச்சல்-**

அதிகளவு பால் உற்பத்தி செய்யும் பசுக்களில் ஏற்படுகிறது. கல்சியம் குறைவடைவதால் இந்நோய் ஏற்படுகிறது.

i) சுவாசவீதம் குறைவடைதல்.
ii) உடல் வெப்பநிலை அதிகரித்தல்.
iii) பசு தலையை ஒருபக்கம் திரும்பிய படி படுத்திருத்தல். போன்றன பிரதான அறிகுறிகள் ஆகும்.

கர்ப்ப காலத்தில் கல்சியம் வழங்குவதன் மூலமும் பால் சுரக்கும் காலத்தில் பால் உற்பத்திக்கேற்ப கனிப்பொருட்கள் வழங்குவதன் மூலமும் இந்நோயை தவிர்க்கலாம்.

**B) கீற்றோசிஸ்-**

அதிகளவு பால் உற்பத்தி செய்யும் பசுக்களில் பால் சுரக்கும் முதல் 02 மாதங்களில் இரத்தத்தில் குளுக்கோசின் அளவு குறைவடைவதால் ஏற்படுகிறது.

i) பால் உற்பத்தி குறைவடைதல்.
ii) உடல் நிறை குறைவடைதல்.
iii) பசியின்மை போன்றன பிரதான அறிகுறிகள் ஆகும்.

கன்று ஈனுவதற்கு முன்னர் சரியான முறையில் பராமரிப்பதன் மூலம் இந்நோய் வராது தடுக்கலாம்.

**இனப்பெருக்கக் குறைபாடுகள்:-**

i) வேட்கை வெளித் தெரியாமை.
ii) கருத்தரிக்காமை.
iii) கருச்சிதைவு.
iv) கன்று இறந்து பிறத்தல்.
v) இளங்கொடி விழாதிருத்தல்.
vi) கருப்பை அழற்சி.


போன்றன ஆகும். இவற்றிற்கு கால்நடை வைத்தியரின் தகுந்த ஆலோசனையை பெறுவதன் மூலம் குணப்படுத்தலாம்.

**சமிபாட்டு நோய்கள்:-**

i) காற்றூதல்.
ii) அடைப்பு.
iii) வயிற்றோட்டம்.

போன்றன ஆகும். இவற்றிற்கு தகுந்த சிகிச்சையினை பெறுவதன் மூலம் இச்சமிபாட்டு நோய்களை குணப்படுத்தலாம்.

செல்வி. விஜிதா அமிர்தலிங்கம்,
கா.அ. போதனாசிரியர்,
சாவகச்சேரி,




## சூழலைக் காப்போம்!

"உலகின் சூழல் வெப்பநிலை உயர்ந்து கொண்டிருக்கிறது" "ஓசோன் மண்டலத்தில் ஓட்டைகள்" "மலைப் பிரதேசத்தில்" என்றாளுக்கு நாள் மிரட்டும் பத்திரிகைச் செய்திகளின் படி உலகம் முகம் கொடுக்கவேண்டிய முக்கிய பிரச்சினையாக சூழல் பாதுகாப்பு விஸ்வரூபமெடுப்பது தெரிகிறது.

மற்றெந்தத் துறைகளையும் விட அவசரமானதும் அவசியமானதுமான துறையாக சுற்றுச் சூழல் துறை ஆகிவிட்டது. மருந்துவம், கல்வி, பொருளாதாரம் போன்ற முக்கிய துறைகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் சூழல் பாதுகாப்புத் துறைக்கும் வழங்கப்பட வேண்டுமென உலக நாடுகள் பெருத்த அக்கறை காட்டத்தொடங்கியிருக்கின்றன. வருடத்திற்கு வருடம் சூழல் துறைக்கான நிதி ஒதுக்கீடு வேகமாக ஆர்முடுக ஆரம் பித்திருக்கிறது.

இயற்கையின் மீதிருக்கின்ற அக் கறையும் ஒரு விதத்தில் நியாயமான பயமும் சேர்ந்து விழிப்புணர்வுச் செயற்பாடுகள் சூடுபிடிக்கின்றன என்றாலும் அபிவிருத்தி நாடுகளின் நிலை கண்புகையும் நிலையில் சூரிய நமஸகாரம் தான் சடுதியாக விழித்துக் கொள்ளாவிடில் பிரச்சினை பூதாகாரம் ஆகிவிடும். எமது நாட்டைப் பொறுத்தவரையில் சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வுச் செயற்பாடுகளுக்கான கால அவகாசத்தை சூழல் எமக்குத் தந்திருக்கிறது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது தேசத்தில் இன்னும் ஆபத்தான கட்டத்திக்குள் செல்லவில்லை. என விழிப்புப் பெறுவதற்கு தேவையான கால அவகாசமும் சூழலியல் அறிவும் எமக்கிருக்கிறது. உலகத்தின் சூழல் பேணல் பற்றிய ஆர்வ வேகத்திற்கு ஈடுகொடுத்து நாமும் முன்னேற வேண்டியிருக்கிறது.

எமது பொருளாதாரம் இயற்கை வளங்களிலும் தங்கியிருப்பதால் வளம் பேணல் பற்றிய எண்ணக்கருத்துக்களைத் தீாங்கி, அவற்றைப் பேணி எமது வருங்கால சந்ததியினருக்கு வழங்குவதால் இயற்கையின் சீற்றத்தையும், வளப்பற்றாக்குறையையும் தவிர்ப்போம். வருங்கால சந்ததிக்கு பொறுப்புணர்வுள்ள மூத்தவர்களாக இருப்போம். உலகத்தின் அழிவைத்தடுப்பதில் தேசத்தின் சார்பில் நாமும் பங்கெடுப்போம்.




# குருவில் சிறந்தவர் யார்?

சிறிலங்காவில் கடந்த சனியன்று இந்திய- சிறிலங்கா - மேற்கிந்தியத்தீவு அணிகள் பங்குபற்றும் முக்கோண கிரிக் கெட் தொடர் ஆரம்பமாகியுள் ளது. இதன் இறுதிப் போட்டி வரும் 9 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும்.

இத் தொடர் மேற்படி நாடுகளின் ரசிகர்களை விட ஏனைய நாட்டு ரசிகர்களையும் மிகவும் கவர்ந்ததாக இருக்கும். குறிப்பாக



அவுஸ்திரேலிய நாட்டை இது வெகுவாகக் கவர்ந்திருக்கும் எனலாம். காரணம் இந்த மூன்று அணிகளுக்கும் பயிற்சி வழங்குபவர்களாக அவுஸ்திரேலியாவின் முன்னாள் வீரர்களே பணியாற்றுவதாகும்.

இதில் இன்னும் ஒரு விசேடம் என்றால் கடந்த இரு மாதங்களுக்கு முன்பு இந்திய சிறிலங்கா கிரிக்கெட் நிர்வாகிகள் இடையில் தமக்கென பயிற்றுனர் ஒருவரை தெரிவு செய்வதில் ஒருவிதமான போட்டித் தன்மை இருந்தமையாகும் இவ்விடயத்தில் இரு நாடுகளும் ஒன்றை மற்றொன்று எதிர்பார்த்திருந்தன.

ஆனால் தற்போதைய சிறிலங்கா பயிற்றுவிப்பாளரான டொம்மூடி தான் இந்தியாவின் பயிற்றுனராக வருவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதாகத் தெரிவித்த நிலையில் இந்தியா அவரை இறுதி நேரத்தில் காலைவாரிவிட்டதுடன் அதே அவுஸ்திரேலிய நாட்டின் கிரேக்க ஷப்பலை தனது பயிற்றுனராக அறிவித்தது. இது டொம் மோடிக்கு இந்தியா மீது ஓரளவு கசப்புணர்வை ஏற்படுத் துவதாக இருந்திருக்கும்.

எனினும் சிறிலங்கா வில் அவர் பதவியேற்றதுடன் சிறிலங்கா அணியை நல்ல நிலைக்கு கொண்டுவந்து 2007 ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெறும் உலகக் கிண்ணத்தை கைப்பற்றும் அணியாக மாற்றுவதெனை சபதமிட் டுள்ளார்.

சிறிலங்கா அணியைப் பொறுத்தவரை இம் மூன்று நாடு களுக்குள்ளும் பல மிக்க அணி யாகவே கருதமுடியும். காரணம் டொம்மோடி பயிற்றுனராக வர முன்பே சிறிலங்கா அணி ஓரளவு பலமானதாகவே காணப்பட்டது அதனால் அது யார் பயிற்றுனராக நியமிக்கப்பட்டாலும் அதனைப் பெரிதுபடுத்துவதாகவோ முகம் சுழிப்பதாகவோ இருக்கவில்லை..

எனினும் இந்திய அணி இதனைவிட பின் தங்கிய நிலை யில் தமக்கு ஒரு நல்ல பயிற்று னரை தெரிவு செய்ய வேுண்டுமென எண்ணியதுடன் ஒரு கூட்டத்திலிருந்து தெரிவு செய்வது போல கிரேக் ஷப்பலை பயிற்றுனராக தேர்ந்தெடுத் தது. அவரும் தனது பங்கிற்கு பலவாக்குறுதிகளை அளித்து பயிற்சியளித்து வருகிறார்.

இந்த நிலையில் இந்திய அணி நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியிலும் சிறிலங்கா அணியிடம் தோல்வியை தழுவியுள்ளது.


சிறிலங்காவை பொறுத்தவரை தனது குருவுக்கு செலுத்தும் முதற் தட்சணையாக மேற்கிந்தியத்தீவுடனான டெஸ்ட் தொடரை வென்று காட்டி விட்டது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பயிற்றுனரான இயன் ஹீலி எதுவித வாக்குறுதியையும் அளிக்காத நிலையில் தனது இளம் வீரர்களை நம்பி எதுவும் கூறாது மௌனமாகியிருக்கிறார். ஆயினும் கிரேக் ஷப்பல் பெரும் வாக்குறுதிகளையும் சபதங் களையும் எடுத்துள்ள நிலையில் சிறிலங்காவுடன் கடந்த சனியன்று நடைபெற்ற முதல் பரீட்சையிலேயே தோல்வியடைநதுள்ளார். இது ஷப்பலைப் பொறுத்தவரை பெரும் ஏமாற்றமே.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் மேற் கிந்தியத்தீவுகளை இந்தியா வென்றுவிட்ட போதிலும் அத னால் ஷப்பல் மட்டுமன்றி ரசிகர்களும் திருப்தி பெற்றிருக்கமுடியாது. காரணம் அது பல மற்ற ஏறத்தாழ இளம் வீரர்களை கொண்ட அணி என்பதாகும்.

எனவே இந்தத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் சிறிலங்கா- இந்திய, கிரிக்கெட் அணி வீரர்களுக் கிடையில் நடைபெறும் போட்டி என்பதைவிட ஒரே நாட்டுப் பிரஜைகள் மூவருக்குமிடையில் நடைபெறும் பலப்பரீட்சையாகும்.

எவ்வாறேனும் நடந்து முடிந்த முக்கோணப் போட்டிகளின் அடிப்படையில் சனத் ஜயசூர்யா, ராகுல்ராவிட், சந்தர் போல் போன்ற ஏற்கனவே அனுபவம் பெற்ற வீரர்களே நிதானமாக துடுப்பெடுத்தாடி யதை அவதானிக்க முடிந்துள்ள நிலையில் புதிய பயிற்றுவிப்



பாளர்களின் முயற்சி பெரிதும் பிரதிபலிக்கவில்லை எனக் கருதவேண்டியுள்ளது.


இந்த நிலையில் சிறிலங்காவில் நடைபெறும் முத்தரப்புக் கிரிக்கெட் போட்டி ஒரு வகையில் பயிற்சியாளர் களுக்கிடையிலான ஒரு போட்டி யாகவுமே உள்ளது.

இதில் முதற் சுற்றில் ஷப்பலுக்கும் மோடிக்குமிடை யிலான போட்டியில் ஷப்பல் மோடியிடம் தோல்வியை தழுவி விட்டார்.

எனவே பயிற்றுவிப் பாளர் கள் தமது புகழைத் தாமே பரப்ப முடியாது என்ற உண்மையை உணர்ந்து அதனை மேம்படுத்துவது வீரர்களின் பொறுப்பு எனக்கருதி அனைத்து வீரர்களும் சிறப்பாக பயின்று திறமைகளை வெளிப்படுத்தி போட்டிகளில் விறுவிறுப்பையும் பரபரப்பையும் ஏற்படுத்தி ரசிகர்களை பரவசப்படுத்துவது கிரிக்கெட்டின் பெருமையை மேலும் ஒருபடி உயர்த்திவிடும்.

— சம்பத் —

ஒருநாள் கிரிக்கெட்டில் இலங்கை அணிக்கு எதிராக 1996 ஒக்டோபர் 4 அன்று நைரோபியில் பாகிஸ்தான் வீரர் ஷாஹித் அப்ரிடி 37 பந்துகளில் (102) சதம் அடித்து உலக சாதனை படைத்தார். அந்த மின்னல் வேக இன்னிங்ஸ் அவர் பாகிஸ்தானுக்கு முதல் முறையாக துடுப்பாட்டம் செய்ய வாய்ப்புக் கிடைத்தபோது வந்தது. அப்போது அவருக்கு 16 வயது.



# ஆமைவேகத்தில் வந்த அரைச்சதம்

சவ்ரவ் கங்குலிக்கு தற்போது 33 வயது. புதனன்று இலங்கையில் நடந்த முத்தரப்பு போட்டியில் இலங்கைக்கு எதிராக ஆடும் போது ஒருநாள் கிரிக்கெட்டில் 10,000 ஓட்டங்கள் மைல் கல்லை தாண்டிய மூன்றாவது வீரரானார். ஆனால் அந்த மைல்கல்லை அவர் எட்டியவிதம் மகிழ்ச்சி தரும் வகையில் இருக்கவில்லை எனக்கூறப்படுகிறது.

இலங்கை வீரர் சனத் ஜெயசூர்யா 1996 இல் சிங்கப்பூரில் பாகிஸ்தானுக்கு எதிராக 50ஓட்டங்களை 17 பந்துகளில் எடுத்தார். அப்ரிடி 50 ஓட்டங்களை இருமுறை 18 பந்துகளில் எடுத்துள்ளார். அப்ரிடி அப்படி அடித்து ஆடும் போது தானே ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டம் பார்க்க பரவசமாக இருக்கிறது.

272 ஆட்டங்களில் (260 இன்னிங்ஸ்கள்) 10,018 ஓட்டங்களை (22 சதங்கள், 60 அரைச்சதங்கள்) எடுத்துள்ளார். கங்குலி, சச்சின் டெண்டுல்கருக்கும் (348 ஆட்டங்களில், 339 இன்னிங்ஸ்களில், 13,642 ஓட்டங்கள், 38 சதங்கள்) பாகிஸ்தான் வீரர் இன்சமாம் உல்ஹக்கிற்கும் அடுத்து ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்களை எடுத்துள்ளவர் என்ற பெருமை கங்குலிக்கு கிடைத்துள்ளது.

ஆனால் அவரது 60 ஆவது அரைச்சதம் 110 பந்துகளில் வந்தது தான் என்னவோ போல இருக்கிறது.

139 நிமிட நேரம் ஆடி இந்த 51 ஓட்டங்களை எடுத்துள்ளார் கங்குலி. பொறுமையாக ஆடித்தான் அவர் இந்த ஓட்டகளை எடுத்தார். ஆனால் ஆட்டத்தை நேரிலும் தொலைக்காட்சியிலும் பார்த்தவர்களின் பொறுமையை சோதிப்பதாகவும் அது இருந்ததே.

இந்த ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக 4 ஆட்டங்களில் மொத்தம் 31 ஓட்டங்களை எடுத்தவர் கங்குலி. அணியின் பந்துவீசியவேகம் போதவில்லை என்பதால் ஐ.சி.சி தண்டனைக்குள்ளாகி கப்டன் பதவியை இழந்து மீண்டும் ஆட வந்துள்ள கங்குலியின் ஆட்டம் முன்பு போல் இல்லைதான்.

அப்படி இல்லாத காரணத்தினால் தான் அவருக்கு ஆசிய அணியில் இடம் தரப்படவில்லை என்று அணியை தேர்வு செய்தவர்களில் ஒருவரான பாகிஸ்தான் வீரர் மஜீத்கான் கூறுவது சரி என்று தானே தோன்றுகிறது?

28 பந்துகளில் இர்பான் பதான் 36 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தாரே. அந்த இன்னிங்சுடன் கங்குலியின் இன்னிங்ஸை ஒப்பிட்டு பார்த்தால் இது பலருக்கு பிடிக்காமல் போகுமே. ஆனாலும் போதாத வேளை இந்திய அணியின் துடுப்பாட்டம் எழுச்சியுற்று இருக்கும் வேளையில் அதிரடி ஆட்டம் ஆட இயலாமல் ஆர அமர 51 ஓட்டங்களை அணிக்கு எடுத்துத் தந்தாரே கங்குலி. அணிக்கு அவர்தானே உயர்ந்த எண்ணிக்கை அவர் வந்த நேரம் பார்த்து முதல் 2 ஆட்டங்களில் அரைச் சதங்கள் அடித்த கப்டன் ராகுல் ராவிட் டக் எடுக்க நேர்ந்ததே இக்கட்டான வேளையில் வந்துள்ள அரைச்சதம் இது 18 முறை கங்குலி சதம் அடித்தபோது இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது அரைச்சதம் சதமாக உயர்ந்திருந்தால் இந்திய அணி புதன் ஆட்டத்தில் வெற்றி கண்டிருக்குமோ?

# முன்னேறும் சானியா


அகுரா கிளாஸிக் டென்னிஸ் போட்டியில், இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார் இந்தியாவின் சானியா மிர்சா.

அமெரிக்காவிலுள்ள சாண்டியாகோவில் இப்போட்டி நடைபெற்று வருகிறது. செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் தரவரிசையில் 78ஆவது இடத்திலுள்ள இத்தாலி வீராங்கனை தாதியானா கார்பினுடன் விளையாடினார் சானியா.

ஒரு தரப்பாக நடந்த ஆட்டத்தில் சானியா 6-2,6-2 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றார். உலகத்தரவரிசையில் தற்போது 59 ஆவது இடத்திலுள்ளார் சானியா மிர்சா. இவர் அடுத்து இப்போட்டித் தரநிலையில் 4ஆவது இடத்திலுள்ள ரஷ்ய வீராங்கனை நதியா பெட்ரோவாவுடன் விளையாடவுள்ளார்.


அந்த ஆட்டத்தில் வெற்றி பெறும் பட்சத்தில் தனது இலக்கான 50 ஆவது இடத்துக்குள் முன்னேற சானியாவுக்கு வாய்ப்பு கிடைக்கும். அதே சமயம் உலகத் தரவரிசையில் 8-ஆவது இடத்திலுள்ள நதியா பெட்ரோவா. இதுவரை மகளிர் சங்க டென்னிஸ் தொடர் பட்டத்தை வென்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





கையில் விழுமா வெற்றி; இங்கிலாந்து அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையே 'ஆஷஸ்தொடரின்' இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் நேற்று தொடங்கியது. இதற்காக எட்பாஸ்டன் மைதானத்தில் நேற்று தீவிர பயிற்சியில் ஈடுபட்டிருந்தார் கெவின் பீட்டர்சன். இவரது எதிர்பார்ப்பை போல, இங்கிலாந்தின் கையில் வந்து விழுமா முதல் வெற்றி?

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**பாக்கியநாதன்**
**றெஜினோல்ட் சிறில்**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 19-02-1946 | 08-08-2002 |

*இளந்தென்றல் வாணிபத்தில்*
*இளந்தென்றல் போல் பணியாற்றி*
*இமை மூடிவிழிக்கு முன்பே*
*இறைவனடி சேர்ந்த – அன்னாரை*
*இந்நாளில் ஆத்மா சாந்தியடைப்*
*பிரார்த்திக்கின்றோம்.*

பணியாளர்கள்,
இளந்தென்றல் வாணிபம்.

(6195)

---

SRI LANKA RED CROSS SOCIETY
JAFFNA DISTRICT
**in conjunction with The Australlan Red Cross**

## VACANCY FOR COMMUNITY DEVELOPMENT OFFICER

we are seeking a motivated person with qualifications and demonstrated experience in the area of Community Development to work with the Construction Delegate of the Australian Red Cross on the current Tsunami Reconsturuction Housing ProGrame Phase 3. the Position will involve regular travel to 4. communities in the Vadamaracny East Division and the successful applicant will be required to stay in Kilinochchi on a regular basrs.

**Duties applicable:**

(01) Work towards the achievement of Sri Lankan Red Cross (SLRCS) and Australian Red Cross (ARC) golas through effective relations and teamwork
(02) Ensure understanding of roles, responsibilites,lateral relationoships and accountabilties.
(03) Perform other work related duties and responsibilities as may be assigned by the supervisor.

**Specific responsibilities and accountabilities**

(01) Participate in and represent SLRCS's and ARC's interests at regular district level coordination meetings.
(02) Liaise with District authorities (GA and PDS) and I/NGO's reg larly.
(03) Build relatinships with SLRCS volunteer groups and beneficiare communities .
(04) Assist the ALRCS and ARC in the ongoing process of involving communities in participating with the re-building process.
(05) Liaise closely with key members of the beneficiary communities including Village Development Forum Leders.
(06) Work with ARC construction Delegate to undertake extensive community consultations and address the social needs of the community.
(07) Assist SLRCS, ARC, contractors and communities to overcome issues in a cooperative and sensitive manner.
(08) Provide accurate translation to and form Tamil and English when required both orally and in written form.

Applications should accompany testimonials, bio-data and references from previous employers.

**Applications should be sent under registered mail on or before 14 th August 2005 to:**

**Branch Executive Officer,**
**Sri lanka Red Cross Society,**
**Jaffna District Branch,**
**No. 73, Kandy Road,**
**Jaffna.**

(சி.12400)

---

## சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளின் மீள் கட்டமைப்பு அலகிற்கான முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கான பதவி வெற்றிடங்கள் (தற்காலிகமானது)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளின் மீள்கட்டமைப்பிற்கான அலகிற்கான மாவட்ட முகாமையாளர் அலுவலகத்திற்குக் கீழ் வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களினை நிரப்புவதற்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| கோரப்படும் பதவிகள் | தேவைப்படும் ஆளணி |
|---|---|
| 01. தொழில்நுட்ப உதவியாளர் | 01 |
| 02. தொழில்நுட்ப உத்தியோகத்தர் | |
| (01) முதுநிலை | 01 |
| (02) இளநிலை | 01 |
| 03. திட்ட உதவியாளர் | 01 |
| 04. தரவு நிரல்படுத்தும் உத்தியோகத்தர் | 01 |

மேற்படி பதவிகளுக்குக் கீழ்வரும் தகைமைகளுடைய விண்ணப்பதாரிகள் 20.08.2005 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அரசாங்க அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு என்ற முகவரிக்கு விண்ணப்பிப்பதுடன், கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் " சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளின் மீள்கட்டமைப்பிற்கான அலகு........................................ பதவி வெற்றிடம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. முல்லைத்தீவு மாவட்டத்தினைச் சொந்த இடமாகக் கொண்ட தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### மேற்படி பதவிகளுக்கு எதிர்பார்க்கப்படும் தகைமைகள்

**(01) தொழில்நுட்ப உதவியாளர்**

* தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (N.D.T) பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**(02) தொழில்நுட்ப உத்தியோகத்தர்**

(01) முதுநிலை உத்தியோகத்தர்.

* தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (N.D.T) அல்லது மத்தியதர தொழில் நுட்ப சேவையில் (M.L.T) தரம் 1 இல் உடையவராகவும்,
* அத்துடன் கூடிய சேவை அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

(11 இளநிலை உத்தியோகத்தர்.

* க.பொ.த (சா.த)இல் கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறுபாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன்,

கட்டட நிர்மாணத்துறையில் 10 வருட தொழில் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**(03) திட்ட உதவியாளர்**


* புவியியல் அல்லது சமூகவியல் பாடங்களைக் கற்று பட்டதாரியாக இருத்தல் வேண்டும். சமூகவியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.


(04) க.பொ.த.(சா.த) இல் மூன்று பாடங்களில் சித்தியடைந் திருப்பதுடன், கணனித்துறையில் கூடிய தகைமைகளைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**திருமதி இமெல்டா சுகுமார்,**
**அரசாங்க அதிபர்,**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

(சி.12473)





"எங்கட கிராமம் 1972 ஆம் ஆண்டு மிளகாய்ச் செய்கைக்கு என்றுதான் ஆரம்பிக்கப்பட்டது. அப்படியே நாங்களும் மிளகாய்ச் செய்கையில் ஈடுபட்டு அதில தன்னிறைவும் கண்டனாங்கள்''

இது முக்கொம்பன் கிராம மக்கள் தங்கள் கிராமத் தோற்றம் தொடர்பாக கூறிக்கொள்ளும் விடயங்கள். 1972ஆம் ஆண்டு ஒரு சில குடும்பங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கிராமத்தில் தற்போது அருகில் உள்ள குடியிருப்புகளையும் சேர்த்து 278 குடும்பங்களைச் சேர்ந்த 1400 இற்கும் மேற்பட்டோர் வாழ்ந்துவருகின்றனர்.

இப்பிரதேசத்தில் உள்ள ஒரு சில குடியிருப்புப் பகுதி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கும் பெரும் பகுதி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்கும் உட்பட்டது. கிராம அலுவலர்களும் இரண்டு பேர் இதில் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சி. உலகநாதன் கிராம அலுவலரே பெரும்பாலான பகுதிக்கு கிராம அலுவலராக கடமையாற்றுகின்றார். அதாவது முக்கொம்பன், நல்லூர், நேரடம்பன், மிதுஷன் 68 வீட்டுக் குடியிருப்புத்திட்டம், சாமிப் புலம், யட்டன், குமரேசன் தாழ்வு போன்ற கிராமங்களை சி. உலகநாதன் கிராம அலுவலரே பார்வையிட வேண்டும் என முக்கொம்பன் மக்கள் அது ஒரு விவசாயக் கிராமம் என்பது தெளிவாகப் புரிந்து விடும். ஒரு சில விவசாய நிலங்களைத் தவிர பெரும்பாலான இடங்களில் சூரிய ஒளி நிலத்தினை வந்தடைவதில்லை. ஏனெனில் காட்டுமரங்களின் ஆக்கிரமிப்பு இதனால் நிலத்திலிருந்து நாம் வானத்தையும் பார்க்கமுடியாது.

பெரும் பற்றைகளை மாத்திரம் அழித்துவிட்டு குடிசைகளை அமைத்து வாழ்ந்து வரும் அம்மக்களிடம் நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன? எவ்வாறான உதவிகளை எதிர்பார்க்கின்றீர்கள்? எனக் கேட்டுப்பாருங்கள். அனைவரும் சொல்லி வைத்துச் சொல்வது போல் முதலில் சொல்வது போக்குவரத்துப் பிரச்சினையே. அதாவது இந்தப் பாதையினூடாக கிளிநொச்சி நோக்கி ஒரு பஸ் போக்குவரத்தினை ஒழுங்கு செய்து தருமாறு;

போக்குவரத்தின்மையினால் தங்கள் கிராமம் வெளியில் தெரியாமையும் தங்கள் கிராமத்தவர்கள் ஒரு குறுகிய வட்டத்திற்குள் இருப்பதற்கும் இதுவே பிரதான காரணம் எனக் கூறுகின்றனர். அத்தோடு விவசாயக் கிராமமான தங்கள் கிராமத்தின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் பெரும் சிரமாக இருப்பதாகவும் இதனால் விவசாயம் ஆரம்பகாலத்தில் இருந்தது போலன்றிப் இப்போது உள்ளே சென்று விசாரித்த போது அது விடுமுறைகால வகுப்புகள் நடத்தப்படுகின்றன என பதில் வந்த போது சிறு ஆச்சரியமே.

ஏனெனில் பாடசாலை நிர்வாகம் தங்கள் கடமைகளுக்கப்பால் கிராமத்தின் நலனைக் கருத்தில் கொண்டு தங்களது செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் போது பாராட்டாமல் இருக்கவே முடியாது.

அந்தவகையில் முக்கொம்பன் அ.த.க. பாடசாலை முதல்வர் திரு. த.கண்ணபிரான் அவர்கள் கூறுவதை கேளுங்கள்;

1997 ஆம் ஆண்டு மட்டுவில் நாடு அ.த.க பாடசாலை என ஆரம்பிக்கப்பட்டஇப்பாடசாலை பின்னர் 2002ஆம் ஆண்டு முக்கொம்பன் அ.த.க. பாடசாலையாக நிரந்தரமாக அமைக்கப்பட்டது. மட்டுவில்நாடு அ.த.க பாடசாலை மீண்டும் தனது சொந்த இடமான பூநகரி வாடியடி பிரதேசத்திற்குச் சென்று விட்டது.

250 மாணவர்களுடன் இயங்கிவருகின்ற இந்தப் பாடசாலையில் தரம் ஒன்பது வரை காணப்படுகிறது. இங்கு 14 ஆசிரியர்கள். இதில் ஐந்து பேர் தொண்டர் ஆசிரியர்கள் எவ்வித கொடுப்பனவுமின்றி கற்பித்து வருகின்றனர். அத்தோடு இருக்கின்ற இரு தற்காலிகக் கொட்டகைகளிலும் ஆறு வரை வழிகாட்டினால் நல்லமுறையில் வளர்த்தெடுக்கலாம். கடந்த வருடம் கூட கலைவாணி என்ற மாணவி தமிழ்த்தினப் போட்டியில் மாகாணமட்டம் வரை சென்று வந்தார். ஆனால் இதற்கு அப்பால் வசதி வாய்ப்பு உள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளை வெளியிடங்களுக்கு அனுப்பி படிப்பிக்கிறார்கள். ஏனைய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை தரம் ஒன்பதுடன் நிறுத்தி விடுகிறார்கள். இதனால் பெரும்பாலான பிள்ளைகள் அடுத்த கட்ட நடவடிக்கையாக திருமண வாழ்வில் இறங்கி விடுகின்றார்கள். இப்படி குறைந்த வயதில் திருமணம் செய்வோர் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது. இதைவிட வேறு பல பிற்போக்கான விடயங்களும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.


இவ்வாறான பிரச்சினையை இனம் கண்டு நாம் மாதம் ஒரு முறை கிராமத்திற்குச் சென்று கிராம தரிசனம் மூலம் விழிப்பூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். பெரும்பாலும் கூலித் தொழில் செய்கின்ற அந்த மக்களின் வாழ்க்கைத் தரம் பின் தங்கியே காணப்படுகிறது.

மேலும் எமது பாடசாலையை பொறுத்தவரை நகர்ப்புற பாடசாலைகளுக்கு கிடைக்கின்ற அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி போன்று எமக்குக் கிடைப்பதில்லை.



# பாதைகள் எப்போது வெளிக்கும்..?


## -முக்கொம்பன் மக்கள் -




**முக்கொம்பன் கிராமத்தின் போக்கு வரத்து பிரச்சினையை தீர்க்க வேண்டும். அதாவது பூநகரி, முக்கொம்பன், ஸ்கந்தபுரம், கோணாவில் ஊடாக கிளிநொச்சி நோக்கி ஒரு பேருந்துப் போக்குவரத்துக்கு வழி செய்தால் அந்த மக்களின் வாழ்விற்கு ஏதோ ஒரு வகையில் வழிகாட்டியதாக அமையும்.**

கூறுகின்றனர். இதனால் தாங்கள் கிராம அலுவலரின் சேவையை பெற்றுக்கொள்வதில் சிக்கல் தோன்றுவதாகக் கூறுகின்றனர்.

ஆனால் அதற்கப்பால் கிராம அலுவலர் பக்கமும் நியாயம் இருக்கிறது. எட்டு கிராமங்களை ஒருவர் பார்க்க வேண்டும் என்பதனால் வாரத்தில் ஒருநாள் என்ற கணக்கிலும் செல்ல முடியாது. அதே நேரம் அலுவலக கூட்டங்களுக்கும் செல்ல வேண்டும் என்றால் பாவம் அவரால் தான் என்ன செய்ய முடியும்.



இப்படியே கிராமத்தினை பற்றிக் கூறிக்கொண்டு போனால் என்ன மாதிரி; முக்கொம்பன் எங்கிருக்கின்றது எப்படி போகவேண்டும் என்று கூறவில்லையே என்று அவசரப்படாதீர்கள் அதனையும் கூறிவிடுகிறோம்.



கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்திருக்கின்றது இந்தக் கிராமம்.

இனி முக்கொம்பனில் நாங்கள் கண்டதையும், கேட்டதனையும் நீங்களும் தெரிந்துகொள்ளுங்கள்.

முக்கொம்பன் கிராமத்திற்கு சென்றவுடனே வெகுவாகக் குறைந்து விட்டதாகவும் கூறுகின்றார். முக்கொம்பன் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.சண்முநாதன் அவர்கள்.

இதைவிட ஒரு குடியிருப்பின் தலைவர் கு.கதிரவேலு என்பவர் கூறும் போது, தங்கள் கிராமம் எல்லா வழியிலும் பின்தங்கியே இருப்பதாகவும் வைத்தியசாலை உள்ளிட்ட பல அலுவல் களை பூர்த்தி செய்து கொள்ள பதினைந்து கிலோ மீற்றருக்கு அப்பால் செல்லவேண்டும் எனவும் தங்கள் கிராமத்தவர்கள் வெளியுலகு தெரியாமல் வாழ்கிறார்கள் என்றும் இங்கு எவ்வித பொழுது போக்கு அம்சங்களும் இன்மையால் பெரும்பாலான இளைஞர்கள் யுவதிகளின் வாழ்வு திசைமாறிச் செல்வதாகவும் இது தொடர்ந்தால் இப்போது இடம் பெறுகின்ற ஒரு சில சமூகப் பிரச்சினைகள் இனிவரும் காலங்களில் பல மடங்காகக் காணப்படலாம் எனவும் வேதனையுடன் கூறிக்கொண்டார்.

பாடசாலை விடுமுறை என்பதனால் பாடசாலை நிர்வாகத்தோடு தொடர்பு கொள்ள முடியாது என எண்ணிய எமக்கு ஏமாற்றமே. ஏனெனில் வழமைபோன்று அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பாடசாலை இயங்கிக்கொண்டிருந்தது. வகுப்புகள் மாத்திரமே நடத்தலாம். ஏனைய வகுப்புகளை மரங்களின் கீழேயே நடாத்தி வருகின்றோம்.

எமது மாணவர்களும் சரி கிராமத்தவர்களும் சரி வெளித் தொடர்புகள் என்பது பூச்சியமே. மாணவர்களுக்கு அருகில் உள்ள ஸ்கந்தபுரம் தெரியாது. கிளிநொச்சி நகர் தெரியாது. மாணவர்களை வெளி

**சூழியன்**

இடங்களுக்குக் கூட்டிச் சென்று காட்டுவதற்கு அதாவது வன்னியில் உள்ள ஒரு சில இடங்களுக்காவது அழைத்துச் சென்று காட்டுவம் என்று இரண்டு முறை முயற்சி செய்து தோல்வியில் தான் முடிந்தது. அதற்குக் காரணம் பெற்றோரின் வறுமை.

இதைவிட முக்கியமாக சொல்ல வேண்டிய விடயம் பாடசாலைக்கு பெற்றோர்கள் வழங்குகின்ற பங்களிப்பு அதாவது என்னைப் பொறுத்தவரை அவர்களின் பங்களிப்பு நூறுவீதம் என்றே சொல்லவேண்டும். மேலும் எல்லா ஆசிரியர்களும் தூர இடங்களில் இருந்துதான் வருகின்றார்கள். அவர்கள் இங்கு தங்கி நின்று கற்பிப்பதற்கு விரும்பம் இருந்தும் அதற்கான வசதிகள் எதுவுமே இங்கில்லை.

மாணவர்களைப் பொறுத்த நிரந்தரக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வேலைகள் முழுதாக முடிக்கப்படாமல் காணப்படுகிறது எனத் தனது கருத்துக்களை தெரிவித்தார் பாடசாலை முதல்வர் கண்ணபிரான் அவர்கள். பாடசாலை முதல்வரை நாம் இதுவரைக்கும் ஒரு வகுப்பறையிலே சந்தித்தோம். ஏனெனில் அவருக்கென பாடசாலையில் அலுவலகம் ஒன்று இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இக்கிராமத்தவர்களின் எதிர்காலம் மற்றும் நலன்களைக் கவனத்தில் கொண்டு அவர்களின் வேண்டுகோளுக்கு அமைய, முதலில் போக்குவரத்து பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். அதாவது பூநகரி, முக்கொம்பன், ஸ்கந்தபுரம், கோணாவில் ஊடாக கிளிநொச்சி நோக்கி ஒரு பேருந்துப் போக்குவரத்துக்கு வழி செய்தால் அந்த மக்களின் வாழ்விற்கு ஏதோ ஒரு வகையில் வழிகாட்டியதாக அமையும். வீதியும் போக்குவரத்திற்கு ஏற்றதாகவே காணப்படுகிறது. நாளாந்தம் நூற்றுக் கணக்கான பாரவூர்திகள் மணல் ஏற்றி இப்பாதையால் செல்ல முடியும் என்றால் ஏன் வேறு வாகனங்கள் செல்ல முடியாது என்ற அம்மக்களின் கேள்வியிலும் ஒரு நியாயமுண்டு.

எனவே உரியவர்கள் முக்கொம்பன் கிராமத்தினை கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்பது அம்மக்களின் வேண்டுகோளாக உள்ளது.




**அத்தியாயம்- 13**

**பகுதி -58**




டிப்ஸ் மேசையை ஒழுங்கு செய்தான். ஒரு கதிரையை இழுத்து மேசைக்கருகில் வைத்தான். சிறிய கோப்பையிலிருந்து தேநீரை அருந்தும் பொழுது அவனுடைய நடத்தை பணிவானதாகவும் அடங்கிப்போனதாகவும் அமைதியானதாகவும் ஆகிவிட்டிருந்தது.

பாத்திரத்தை எடுத்துக் கொண்ட அவன் மெதுவாக மேசையை சுற்றி வந்தபடி, ஒவ்வொரு கோப்பையிலும் சிறிதளவு சிறிதளவு நீரை கவனமாக ஊற்றினான்.

" ஒவ்வொரு கோப்பையிலும் சிறிதளவு சாயம் இருக்கும்'' என்ற டிப்ஸின் குரல் இறுக்கமானதாகவும் முறை வழுவாததாகவும் இருந்தது.

"மூண்டாவது கோப்பையில சாயம் கூடிப்போச்சுது கொஞ்சத்தை வெளியில ஊத்துவம்'' என்று சொல்லிவிட்டு கோப்பையிலிருந்து சிறிதளவு நீரை வெளியே ஊற்றினான்.

"ஒவ்வொரு கோப்பையிலும் கொஞ்சம் கொஞ்சம் சீனியை போட்டுக் கொள்ளலாம்'' என்று சொல்லிவிட்டு, மேசையடி யில் மளமளவென்று வேலை செய்யத் தொடங்கினான். இரண்டாவது பாத்திரமொன்றை பால் பாத்திரம் என்று சொல்லிக்கொண்டான். ஒரு சின்னஞ் சிறிய கரண்டி நிறைய நிறைய மணலை அள்ளி சீனிக்காக ஒவ்வொரு கோப்பையிலும் கவனமாக போட்டான். "போட்டிருக்கிற ஒவ்வொரு கரண்டி சீனியையும் கவனமாக கையாளவேணும்'' என்று சொன்ன குரலில் தாயின் குரலை பிரதி செய்யும் தொனி, தொடர்ந்து ஒலித்தது. "ஆறாவது கோப்பையில சாயம் கனத்துப்போச்சுது. அது சரி செய்யவேணும். சீனி கவனம். பிள்ளைகள் கனக்க சீனி பாவிக்கக் கூடாது. முழங்கையை மேசையால எடுங்கோ. இனியும் ஒழுங்கா நடக்காட்டி உங்கட அறைக்கு போக வேண்டிவரும். நான் உங்கள உங்கட அறையில போட்டுப் பூட்டிப் போடுவன்''

மேசையிலிருந்த ஒரு கோப்பைக்கு முன்னால் டிப்ஸ் அமர்ந்துகொண்டான். கைகளை அவதானமாக மடித்து மேசையின் விளிம்பில் வைத்துக்கொண்டான்.

"நீங்கள் வாட்டிய பாணை அவதான மாக சாப்பிட வேணும்'' டிப்ஸின் குரல் ஒலித்தது. வாட்டிய பாணை எடுக்க மேசைக்குக் குறுக்காக கையை நீட்டியபொழுது தவறுதலாக ஒரு கோப்பை தட்டுப் பட்டுவிட்டது. அவன் சடாரென்று மேசையிலிருந்து எழுந்து கொண்டான். அவனது முகத்தில் பயந்து போன உணர்வு பரவிக் கிடந்தது.

"இனி விருந்து இல்லை. விருந்து முடிஞ்சுது. நான் தேநீரை தட்டி ஊத்திப்போட்டன்'' என்று அவனது குரல் ஓங்கிஒலித்தது. விரைவாக கோப்பைகளை வெறுமையாக்கிய அவன் அவற்றைத் திரும்பவும் றாக்கைகளில் வைத்து விட்டான்.

"நீங்கள் தேநீரை சிந்தினதால விருந்து முடிஞ்சு போச்சுதா?'' என்று நான் கேட்டேன்.

"முட்டாள்! முட்டாள்! முட்டாள்!'' என்று அவன் கத்தினான்.

"அது தற்செயலாத்தான் நடந்தது'' என்றேன்.

"முட்டாள்தனமான ஆக்கள் தான் தற்செயலா பிழைவிடுகிறவை'' என்று உரத்துச்சொன்னான். அவனது கண்களில் கண்ணீர் துளிர்த்துக் கொண்டது.

" விருந்து முடிஞ்சுது. பிள்ளையள் எல்லோரும் போய் விட்டினம். இனி விருந்து நடக்காது'' அவனது குரல் கம்மத் தொடங்கியது. அவனைப் பொறுத்தவரை இது உண்மை யான ஒரு அனுபவம் தான்.

" அது தற்செயலாகத்தான் நடந்தது'' என்று எனக்குச் சொல்லி விட்டு, " ஆனா விருந்து முடிஞ்சு போச்சுது'' என்றான்.

" அது உங்கள பயப்பிடுத்திப்போட்டுது. சந்தோசத்தை இழக்கச் செய்து போட்டுது'' என்று சொல்லி விட்டு, தொடர்ந்து "தற்செயலா தேநீரை சிந்தினதால விருந்து முடிஞ்சு போச்சுது. தேநீரை சிந்தின பையன அவன்ர அறைக்கு அனுப்பினனீங்களா?'' என்று கேட்டேன்.

கைகளை முறுக்கிக்கொண்டு அறைக்குள் அங்குமிங்கும் நடந்தபடி, "ஓம் ஓம்.'' அனுப்பியாச்சு. அவன் கவனமா இருந்திருக்கவேணும். இப்பிடி அலங்கோலமாக அவன் நடந்து கொண்டது சரியான முட்டாள் தனம்'' என்று சொல்லி விட்டு, ஒரு கதிரையை உதைந்து தள்ளிவிட்டான். றாக்கையிலிருந்த கோப்பைகளை வழித்து எறிந்தான்.

"எனக்கு விருந்து வேண்டாம். வேற பிள்ளையள் யாரும் இங்க வரவேண்டாம்'' என்று கத்தினான்.

" இப்பிடி ஏதும் நடந்தா உங்களுக்கு கோவமும் துக்கமும் வருகுதா?'' என்றேன்.

டிப்ஸ் என்னை நோக்கி வந்தான் " நாங்கள் உங்கட அலுவலகத்துக்குப் போவம். இங்க இருந்து வெளியில போவம். நான் முட்டாள் இல்லை'' என்றான்.

"இல்லை நீங்கள் முட்டாள் இல்லை. ஆனா இப்பிடி ஏதாவது நடந்தா, அது உங்கள குழப்பிப் போடுது'' என்று நான் சொன்னேன்.

மண்டபத்தின் வழியே எனது அலுவலகத்துக்குச் சென்றோம். அலுவலக கதிரையொன்றிலே நீண்டநேரம் டிப்ஸ் அமைதியாக அமர்ந்திருந்தான். பிறகு முகத்தில் ஒரு புன்னகையுடன் என்னைப் பார்த்தான். " என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ'' என்றான். "மன்னிக்கிறதா? ஏன் மன்னிக்க வேணும்?'' என்று நான் கேட்டேன். " ஏனெண்டா நான் தேநீரைச் சிந்திப்போட்டன். நான் கவலையீனமா இருந் திட்டன். நான் அப்பிடி இருந்திருக்கக் கூடாது'' என்றான்.

"நீங்கள் இன்னும் கவனமாக இருந் திருக்க வேணும் எண்டு நினைக்கிறீங்களா?''

"ஓம்'' என்ற டிப்ஸ், "நான் அதிகம் கவனமாக இருந்திருக்க வேணும். ஆனா நான் முட்டாள் இல்லை'' என்றான்.

"நீங்கள் கவலையீனமா இருந்திருக்கலாம். ஆனா முட்டாள் இல்லை... அப்பிடித் தானே''

"ஓமோம்'' என்றவன் முகத்தில் புன்னகை ஒன்று விரிந்து கொண்டது.

அங்கே உருவாகியிருந்த புயலை, டிப்ஸ் வெற்றிகரமாக சமாளித்து விட்டிருந்தான்.

புண்ணாகிவிட்ட தன் உணர்வுகளை எதிர்கொள்வதற்கான வலுவை தனக்குள்ளேயே அவன் கண்டுகொண்டிருந்தான்.

" நான் ஒரு கடிதம் எழுதப் போறன்'' என்றான். ஒரு கடதாசியையும் ஒரு பென்சிலையும் எடுத்துக் கொண்ட அவன் ஒவ்வொரு எழுத்தாக எழுதிக் கொண்டு போனான். அப்படி எழுதும் போது வாய்விட்டு எழுத்துக் கூட்டிக் கொண்டே எழுதினான்.

அன்புள்ள டிப்ஸ்

தேநீர் கோப்பைகளை கழுவிவிட்டேன். வடிகாலை மூடிவிட்டேன். நான் ஒரு விருந்து வைத்தேன். பிள்ளைகள் வந்திருந்தார்கள்.

அன்புடன்

நான்

எனது மேசை நாட்காட்டியை பார்த்த அவன், அதை தன்னருகில் இழுத்துக் கொண்டான். ஏப்ரல் எட்டாம் திகதி வரும் வரை அதை பிரட்டிக் கொண்டிருந்தான். அதிலிருந்த எட்டைச் சுற்றி ஒரு வட்டம் கீறிவிட்டு நாட்காட்டியின் அந்தப் பக்கத்திலே தன் பெயரையும் எழுதினான்.

"ஏப்ரல் எட்டாம் திகதி என்ர பிறந்த நாள்'' என்றான். நாட்காட்டியின் தாள்களை பிரட்டிக் கொண்டே போய் இன்னொரு நாளை தெரிவு செய்து அதில் " அம்மா'' என்று எழுதினான். இன்னொருதாளில் "அப்பா'' என்று எழுதினான். பிறகு இன்னொன்றில் "டொறத்தி'' என்று எழுதினான். " இதுகள், அம்மா, அப்பா டொறத்தியின்ர பிறந்த நாட்கள்'' என்று எனக்குச் சொன்னான். பிறகு 'அப்பா' என்று எழுதிய தாளைக்கண்டு பிடித்து அதில் அம்மம்மா என்று எழுதினான்.

" அப்பாவட பிறந்த நாளும் அம்மம்மாவட பிறந்த நாளும் ஒரே நாளிலதான் வருகுது'' என்றான் அவன்.

"அப்பிடியா?'' என்றேன் நான்.

"ஓம்'' என்ற டிப்ஸ், தொடர்ந்து, "ஆனா ஒரு ஆளுக்கு மற்றவரைவிட வயசு கூட''


யாருக்கு?'' என்று கேட்டேன்.

" அம்மம்மாவுக்கு'' என்று பதிலளித்த அவன் குரலில் சிறிது வியப்பு இளையோடியிருந்தது. " பெப்ரவரி இருபத்தெட்டு இதுதான். வோஷிங்ரனட பிறந்த நாளும் இது தான் '' என்றான்.

"இருபத்தெட்டாம் திகதியிலயோ?'' என்று நான் கேட்டேன்.

"இல்லை. வோஷிங்ரன் இருபத்திரெண்டாம் திகதி பிறந்தவர். ஒரே மாதம் தான்'' என்று சொல்லி விட்டு நாட்காட்டியின் அந்தப் பக்கத்தை உற்றுப்பார்த்தான். "அப்பா'' என்று எழுதியிருந்ததை சுட்டிக் காட்டிக்கொண்டே "இதை அழித்து விடப் போகிறேன்'' என்றான்

"அப்படியோ?''



"இல்லை'' என்று ஒரு பெருச்சுடன் சொன்னவன், "இல்லை. அது இருக்கத்தான் வேணும். அது அவருடைய பிறந்தநாள் என்கிறதால அது இருக்கத்தான் வேணும்'' என்றான்.

நீங்க விரும்பினா என்ன விரும்பாட்டா என்ன அது அவருடைய பிறந்தநாள் தான்....ம்....ம்...?''

"ஓமோம் அது அவருக்கு தேவை தான்'' என்று டிப்ஸ் சொன்னான்.

"நீங்கள் என்ன சொல்லு றீங்கள்?'' என்று கேட்டேன்.

" அவருக்கு தேவை. எனக்கும் தேவை'' டிப்ஸ் சொன்னான்.

"ஓ!'' என்றேன் நான்.

நாட்காட்டியின் இறுதியில் வெற்றுத்தாள் ஒன்று இருப்பதை கண்டு கொண்ட டிப்ஸ், "இதை கிழிச்சு எடுக்கட்டா?'' என்று கேட்டான்.

''நீங்கள் விரும்பினா எடுங்கோ''

அவன் அதை எடுத்துக் கொண்டான்.

''எந்த வருடத்திலயும் வெற்றுநாள் என்று ஒன்றும் இருக்காது. அவை எல்லாத்துக்கும் ஒரு இலக்கமும் ஒரு பெயரும் இருக்கும்.

(தொடரும்)


# WALK IN INTERVIEW

**solidar**

**An INGO consortium induding NPA, SAH and ASB**

Solidar is consortium of organizations of 12 European countries that supports a broad portfolio of projects. The solidar network in Sri Lanka comprises of three international NGOs - Arbeiter Samariter Bund (ASB), Norwegian People's Aid (NPA) and Swiss Labour Assistance (SAH).

We are currently at the planning stagc for the Phase 3 Tsunami shelter construction project and the following vacancies are to be filled in immediately. All positions are based in Kilinochchi./Paranthan.

Interested candidates MUST posses the minimum requirements stated below. Please walk in interview on Saturday,6th August 2005 between 01.00 p.m and 5.30 p.m.

**Position: Office Manager**
At least 3-5 years experience in busy office environment.
Good communication skills in both English and Tamil would be essential.
Knowledge in IT skills preferred.

Proven experience in the following
- Organization of multiple departments
- Providing innovative solutions for offiec organization and management
- Managing staff (approx.40)
- Providing support and advise to all staff
- Facilitation communication discussuon between staff and departmentents.

Suitable candidates should be between 30-55 years of age.
Salary would depend on relevant skills and experience.

**Position: Head of Administration**
At least 2 years of experience in a similar role which should include the following.
Staff management and office organization, management of relevant database systems. Good command of written and spoken English would be essential. Working knowledge on Word, Excel. PowerPoint and Access is a requirement.

**Position: Administrative officer**
Provide administrative support to the Head of Administration Duties will include maintenance of filing system, preparation of travel passes, arranging accommodation for guests, photocopying and other administrative tasks. Preference will be given to those with experience in a similar field.

Norwegian People's Aid

ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V.


Swiss Labour Assistance SAH

**Solidar Office**
**156, Jaffna Road,**
**Paranthan.**

(சி-12476)

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




*பாவலா!*

*இனிவரும் காலங்களில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான ஆடைகள் வித்தியாசமில்லாமல் போய்விடும் போலிருக்கிறதே?*

*ஆ.ஆனந்தி,*
*ஆயப்பகுதி,*
*புளியங்குளம்.*

ஆள்பாதி ஆடைபாதி என்றபழமொழி யதார்த்தமாகி வருகிறது என்று சொல்ல வருகிறீர்கள் அப்படித்தானே.

*பாவலா!*

*எதற்கெடுத்தாலும் கோபப்படும் பெண்களை வாழ்க்கையில் எவ்வாறு சமாளிப்பது?*

*ப.நாகேஸ்வரி,*
*அச்சுவேலி.*

அடங்கிப் போங்கள் அவ்வளவுதான்.

*பாவலா!*

*ஆசை மனிதனை மோசம்செய்யும் என்கிறார்களே இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

*தி.சஜீவகாந்,*
*றெட்பானா.*

அதனால்தான் ஆசை அறுமின், ஆசை அறுமின் ஈசனோடாயினும் ஆசை அறுமின் என்றுல்லார் போலும் திருமூலர்.

*பாவலா!*

*பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் செய்ததை வேறுயாரும் செய்திருந்தால்?*

*தயாபரன்,*
*யாழ்ப்பாணம்.*

பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் பாதாளச் சிறையில் தள்ளப்பட்டிருப்பார்.

*பாவலரே!*

*அர்த்தமுள்ள நகைச்சுவை ஒன்று கூறுங்களேன்?*

*சுதா,*
*புதுக்குடியிருப்பு.*

ஒருவர் கேட்டார்:-

மூன்றாவது உலகயுத்தம் நடந்தால் எப்படி இருக்கும் மற்றவர் சொன்னார்.

வென்றவன் கரி தோற்றவன் சாம்பல்

(இது சிரித்திரன் சுந்தரின் நகைச்சுவை)

*பாவலா!*

*மனசாட்சி எப்படியிருக்கும்?*

*யாழினி,*
*கிளிநொச்சி.*

தன் மனதை ஏமாற்றாத வரை நிம்மதியாக இருக்கும்.

*பாவலா!*

*சுடலை ஞானம் பற்றி கதை ஒன்று சொல்லும் பார்ப்போம்?*

*பிரியா,*
*யாழ்ப்பாணம்.*

சீதையின் முன்னால் தத்துவம் பேசுவோர் வெளியே வந்ததும் வித்துவம் பேசுவர்.

*பாவலா!*

*உம்மால் கேள்வி கேட்க முடியுமா? முடிந்தால் என்னிடம் ஒரு கேள்வி கேளும்?*

*காகிசன்,*
*யாழ்ப்பாணம்.*

நீர் சத்தியவானா என்று நான் கேட்டால் அதற்கான உமது பதில் மௌனமாகத்தானே இருக்கும்.

*பாவலா!*

*பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் சந்திரிகா பிள்ளையையும் கிள்ளிவிட்டுவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிறா என்று நான் நினைக்கிறேன் நீர்?*

*கீதா,*
*வவுனியா,*

மாறிச் சொல்லிவிட்டீர் அவ தொட்டிலை ஆட்டிய பின்னரே பிள்ளையை கிள்ளி விட்டிருக்கிறா என்றுதான் சொல்ல வேண்டும்.

*பாவலா!*

*அநுராதபுரத்தில் சனாதிபதியின் உரைபற்றி நீர் என்ன உரைக்கப்போகின்றீர்?*

*லதா,*
*பரந்தன்.*

அது அநுராதபுர ஜீவன்களுக்கு சொல்லப்பட்ட உரை, அர்த்தம் புரிகிறதா.

*பாவலா!*

*நம்பிக்கை நட்சத்திரம் என்று சொல்லப்படுபவர்கள் எப்படியானவர்களாக இருக்க வேண்டும் ?*

*விஜிதா,*
*கிளிநொச்சி.*

வானத்தில் இருந்து ஒளி விடுபவர்களாக இருக்க முடியாது. மண்ணில் இருந்து மற்றவர்களுக்கு வழி காட்டியாக இருக்கவேண்டும்.

*பாவலா!*

*இந்தியாவின் கால நிலைமாறி பெய்த மழை வெள்ளத்தினால் பெரும் சேதத்தினையும் உயிரிழப்பையும் சந்தித்துள்ள மக்களுக்கு அனுதாபக் கவிதையாக நான்கு வரிகளில் கூற முடியுமா?*

*ஜீவா,*
*பளை.*

காலம் மாறி பெய்தாலும்
கவலை மாறும் விரைவில்
துயரம் துடைத்தால்
விடியும் வாழ்க்கை.




*"என்னடா கலியாண வீடெல்லாஞ் செய்தியள் இஞ்ச நானும் ஒரு சீவன் இருக்கிறன் எனக்கும் ஒரு வார்த்தை சொல்லியனுப்பினா என்ன?"*

*"என்ன? உனக்கு காட் கிடைக்கேல்லயே. அப்பவும் என்ர கையால யெல்லே தபால் போட்டனான்"*

*"அப்படிச் சொல்லன் தபால் போட்டா அது கொழும்புக்குப் போய்த்தானே திரும்பி வரும். இப்ப கோச்சியுமில்லை"*

*"கொழும்புக்கு ஏன் போகுது"*

*"அப்படித்தானேடா சொல்லுறாங்கள் நாலு படிச்ச மனிசர்"*

*'என்னணை உது புதுக் கதை"*

*"எடேய் புதுக் கதையாத் தான் கிடக்கடா உந்தப் பிரச்சினை நேரமே ஒரு கடிதாசி போட்டா ஒரு பத்துநாளைக்க வரும். இப்ப வரயில்ல யெண்டா"?..*

*"அதுதானே - நான் போட்ட 'காட்' ஏன் உணக்கு வராம விட்டது.'*

*"நீ போட்டது பிழையோ..."*


*"என்ன கறுமம், எப்பிடிப் போட்டா கடிதம் உடன வரும்..."*

*உடன வராட்டியும் ஆறுதலா எண்டாலும் வரப்பண்ண ஒரு தந்திரமிருக்கடா?*

*"என்ன"*

*பதிவுத் தபால்ல போடவேணும்* ●●

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -131



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -131

........................................
........................................
........................................
........................................

பெயர் : ........................................ ஈழநாதம்
முகவரி : ........................................ யாழ்சாலை,
........................................ கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -130



**க.சி.தமிழினி,**
**த.பு.வாழ்வு கழகம்,**
**மாவட்டச் செயலகம்,**
**கைவேலி.**

### பரிசுக்குரிய வரிகள்

*தான் உருக்குலைந்த நிலையிலும் மகனின்*
*உயர் வாழ்விற்காய் தன் குருதியையே உரமாக்கி*
*உறுதியோடு உழைக்கும் தாய் இவளின்- தளராத*
*கனவை நனவாக்குவது மகனே உன் பொறுப்படா.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*இன்று உன் கணவரை இழந்தும்*
*நெஞ்சில் உனது கஸ்ரத்தை சுமந்தும்*
*உனை வாட்டுகின்ற வறுமையுடன் போராடி*
*உனது பிள்ளைகளை காப்பாற்றுகின்றாய்.*

சி.மரிசுளா,
புளியங்குளம்..

*என்னை எண்ணையாக்கி*
*எண்ணங்களை மனதில் மௌனமாக்கி*
*வறுமையை போக்கி- வளமான*
*ஈழதேசத்தினை மீட்டிட உழைத்திடு.*

ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*"இயலாமை உன்னில் வேண்டாம்*
*இளையவனுள்ளான் உனைக்காக்க*
*இன்றுன் துணையில்லையோ?*
*இயன்ற வரையுழை விதியெனக் கொள்ளாது.*

எம்.சாமந்தி,
புதுக்குடியிருப்பு.

*வாய்பேசாத பிறவியாக இருந்தும்*
*சோதனைகள் பல வந்தும்*
*சோர்வின்றி சுமை இழுத்து*
*சோவை இழந்த நம் வாழ்வை உ(யி)யர்த்திடுதே.*

எஸ்.ஆர்.செல்வி,
மாங்குளம்.















இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட மாதம் 5 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.